வெகுஜன அரசியல் மாத இதழ்
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# புதிய நீதி

முரசம் 03
முழக்கம் 08
விலை ரூபா.30
ஜனவரி-பெப். 2014

පුදිය නීදි
PUTHIYA NEETHI



வடபுலத்து மீனவர்களும் தமிழ்நாட்டு அத்துமீறிய மீன்பிடியும்...03



ஜே.வி.பி. தன்னை மாற்றியுள்ளதா?...05



தனியார் மயமாகும் கல்வி...11



வடமகாண சபையும் சர்வதேச விசாரணைத் தீர்மானமும்...06




வெனசுவேலாவிலும் உக்ரேனிலும் என்ன நடக்கிறது?...14

# ஜெனிவாத் தீர்மானம் யாருக்காக?

எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 25வது கூட்டத் தொடர் ஜெனிவாவில் நடக்கவிருக்கிறது. இம்முறையும் ஐக்கிய அமெரிக்கா இலங்கை அரசாங்கத்திற்கு எதிரானது எனக் கூறப்படும் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவரவுள்ளது. ஏலவே 2012ம் 2013ம் ஆண்டுக். கூட்டத் தொடர்களிலும் இவ்வாறான எதிர்நிலைத் தீர்மானங்களை இதே ஐக்கிய அமெரிக்கா கொண்டுவந்து நிறைவேற்றியது. அவை இலங்கை அரசாங்கத்திற்குச் சிலவகையான அழுத்தங்களை கொடுத்தனவே ஒழிய, அவற்றால் அரசாங்கத்தின் போக்கை மாற்ற முடியவில்லை. தமிழ்த் தரப்புத் தலைமைகளுக்கு ஏமாற்றங்களே எஞ்சின.





இந் நிலையில், இப்போது மூன்றாந் தடவையாக, அமெரிக்கத் தீர்மானத்திற்கான ஆரவாரங்கள் பேச்சுக்களாகவும் எழுத்துக்களாகவும் வெளிவருகின்றன. கடந்த தடவைகளிற் போன்று இம் முறையும் ஜெனிவாத் தீர்மானத்தை எதிர்கொள்வதற்கான கடும் முயற்சியில் ராஜபக்ச சகோதரர்களின் ஆட்சி இறங்கியுள்ளது. ஜெனிவாவில் தீர்மானத்தைக் கொண்டுவரவுள்ள அமெரிக்காவுக்கும் அதை எதிர்க்கப்போவதாகக் கூறும் சீனாவுக்கும், முறையே, ஜனாதிபதியின் செயலாளரும் வெளிவிவகார அமைச்சரும் தனித் தனியே சென்று வந்திருக்கிறார்கள். அத்துடன், வெளிவிவகார அமைச்சர் இந்தியாவிற்கும் சென்று வெறுங்கையுடன் மீண்டுள்ளார். எவ்வாறாயினும், அமெரிக்காவின் தீர்மானம் வருவது உறுதியாகிவிட்ட சூழலில், அதைக் கடந்த தடவைகளிற் போன்று எதிர்ப்பது எனத் தீர்மானித்துள்ள ராஜபக்ச சகோதரர்களது அரசாங்கம் தனது தன்னிலை விளக்கங்களையும் முன்வைத்துவருகிறது.


புலிகளுக்கு எதிரான யுத்தம் பயங்கர வாதத்திற்கு எதிரான யுத்தம் என்றும் அதை மனிதாபிமானமாகவே நடத்தியதாகவும் படையினர் போர்க் குற்றங்களில் ஈடுபடவில்லை என்றும் மனிதஉரிமை மீறற் குற்றச்சாட்டுக்கள் அர்த்தமற்றவை எனவும் கூறித் தங்களை நியாயப்படுத்தி வருகின்றனர். போர்க்குற்ற விசாரணைகளை நடத்தத் தாங்கள் தயாரில்லை என மீளமீளக் கூறிவரும் ஆட்சித் தரப்பினர் நாட்டைப் பாதுகாத்த தேசபக்த வீரர்கள் தாங்களே என்று சிங்கள மக்களின் மனங்களிற் பதிய வைக்கத் தொடர்ந்தும் பரப்புரை செய்துவருகின்றனர். நாட்டிற்காகவும் மக்களுக்காகவும் அமெரிக்காவின் மரண தண்டனை நடைமுறையான மின்சாரக் கதிரைக்குச் செல்லவும் தாம் தயாராக இருப்பதாக ராஜபக்ச சகோதரர்கள் பிரசாரப்படுத்தி வருகிறார்கள். கடந்த மாகாண சபைத் தேர்தல்களின் போது அவ்வாறு கூறியது போல, வரவுள்ள தென், மேல் மாகாணசபைத் தேர்தல் பரப்புரைகளின் போதும் கூற ஆரம்பித்துவிட்டார்கள். தெற்கின் சிங்கள-பௌத்த பேரினவாத அமைப்புகளும் அவற்றின் தலைவர்கள் அதற்குப் பக்கப்பாட்டுப் பாடுவதுடன் பேரினவாத நஞ்சையும் கக்கி வருகிறார்கள்.

ஜெனிவாத் தீர்மானத்தை எதிர்ப்பதாகக் கூறிக்கொண்டு இனங்களைத் துருவப்படுத்தும் இனவெறிச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படு

பக்.02>>







# மலையக மக்கள் இரண்டாம் தரமானவர்கள் அல்லர்

அட்டன் நிருபர்

மலையகத் தமிழ் மக்கள் வரலாற்று வழியாகத் தமது தனித்துவங்களைப் பாதுகாத்து தம்மை ஒரு தேசிய சிறுபான்மை இனமாக வெளிக்காட்டி நிற்கிறார்கள். அவர்களில் ஏகம் பெரும்பான்மையோர், வர்க்க சுரண்டலுக்கு உட்பட்ட மக்களாவர். ஆளும் வர்க்கங்களால் பாகுபாட்டுடனும் புறக்கணிப்புகளுடனும் இரண்டாந்தர நிலையில் நோக்கப்படும் நிலை இன்றும் தொடர்கிறது. மலையக மக்களுக்கு சுமார் இரு நூற்றாண்டுத் தொடர்ச்சி இருந்த போதிலும் இன்றும் நிலம், வீடு ஆகியவற்றுக்கான அடிப்படை உரிமைகள் வழங்கப்படவில்லை. கல்வியும் சுகாதாரமும் மிகப் பின் தங்கியவையாகவே இருந்து வருகின்றன. மலையகத் தோட்டப் பாடசாலைகள் அரசாங்கம் பொறுப்பேற்றதன் விளைவாக ஓரளவுக்கு கல்விக்கான முன்நோக்கு ஏற்படவும் மலையக ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவும் வழி ஏற்பட்டது. ஆனால் கல்விப் பாதையில் மேலும் நீண்ட தூரம் மலையக மக்கள் பயணிக்க வேண்டியே உள்ளது.

அதேவேளை பொருளாதார ரீதியில் மிகக் குறைந்த நாட்சம்பளம் பெறும் தினக்

பக்.02>>

## திட்டமிட்ட நில அபகரிப்பை உடன் நிறுத்து!

யாழ் நிருபர்


வடக்கு கிழக்கில் திட்டமிட்ட நில அபகரிப்பும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களும் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன. தேசிய இனப் பிரச்சினையில் பிரதான இடத்தை வகித்து வருவது இத்திட்டமிட்ட குடியேற்றமேயாகும். இது குறிப்பாக யுத்த காலத்திலும் அது முடிவுற்ற பின்பும் வேகமாக முன்னெடுக்கப்படுகின்றன. அதுவும் வடக்கில் மிக வேகமாக்கப்பட்டு வருகிறது. கிழக்கு மாகாணம் போன்று வடக்கு மாகாணத்தின் இன விகிதாரசாரத்தை மாற்றியமைத்து தனியே தமிழர்கள் பெரும்பான்மையாக இருந்து வருவதை இல்லாமல் செய்யும் உள்நோக்கத்தையே சிங்கள பௌத்த பேரினவாதிகள் நீண்டகாலமாகக் கொண்டுள்ளனர். இதனை வேகப்படுத்தவதில் மகிந்த சிந்தனை முன் நிற்கிறது.

15>>>

## பாசிச சர்வாதிகாரத்தை மறைக்க மாகாணசபைத் தேர்தல்கள்

எதிர்வரும் மார்ச் மாத முடிவில் தென் மேல் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெற உள்ளன. வழமை போன்று சகல குறுக்கு வழிகளும் தேர்தலுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. பிரதானமாகப் பணம் தண்ணீர் போன்று இறைக்கப்படுகின்றது. பதவிகளுக்கு வந்த பின்பு வட்டியும் முதலுமாக மட்டுமன்றி அதைப் போன்ற பல மடங்கைச் சம்பாதிக்க முடியும் என்ற நம்பிக்கையில் முதலீடு செய்யப் படுகிறது. மேலும் ஆட்சியிலுள்ளோர் அரசாங்க வளங்களைக் கூச்ச நாச்சமின்றி பயன்படுத்தி வருகின்றனர். தேர்தல் ஆணையாளர் வெறும் அதிகாரி மட்டுமே. அவரால் உருப்படியாக எதையும் செய்ய

பக்.02>>



# அமெரிக்க இந்தியக் கயிறும் ஏமாளித் தமிழர்களும்

தமிழ் மக்களை நடுநாயகமாய் இருத்தி ஆடும் பகடையாட்டத்தின் அடுத்த அமர்வு எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடந்தேறவுள்ளது. ஐ.நா. மனித உரிமைக் கழகத்தின் 25வது அமர்வில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் திருமதி நவநீதம்பிள்ளையின் இலங்கை வருகை தொடர்பான அறிக்கையும் அமெரிக்கா கொண்டுவர இருக்கின்ற இலங்கைக்கெதிரான தீர்மானமும் ஆகிய இரு நிகழ்வுகளால் இலங்கை சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கப்போகிறது.

நவநீதம்பிள்ளையின் அறிக்கை புதிதாக எதையும் கூறவில்லை. அவரும் பிறரும் தொடர்ந்து சொல்லி வந்தவற்றை மீள வலியுறுத்துவதாகவே அதன் பெரும் பகுதி உள்ளது. எனினும் அவ்வறிக்கை இரண்டு காரணங்கட்காக முக்கியம் பெறுகிறது. ஒன்று, அவ்வறிக்கை இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களையும் மனிதாபிமானச் சட்ட மீறல்களையும் விசாரிக்கச் சுயாதீன சர்வதேச விசாரணையைக் கோருகின்றமை. இரண்டாவது, நிலைமாறுகால நீதியை (transitional justice) நிலைநாட்ட, உண்மையை அறியும் உரிமை (Right to Truth), குற்றவியல் நீதியும் பொறுப்புடைமையும் (criminal justice and accountability), சட்ட, நிறுவனச் சீர்திருத்தங்கள் (legal and institutional reforms), பரிகாரத்துக்கும் இழப்பீட்டுக்கும் உரிமை (right to remedy and reparations) ஆகிய நான்கினதும் அடிப்படையில் ஐ.நாவின் நுட்பவியற் சிறப்புத்தேர்ச்சி உதவிகளைப் பெறுமாறு இலங்கையை வலியுறுத்துகின்றமை.

இரண்டாவது பரிந்துரை, உண்மையில், இலங்கையில் ஐ.நா. மனித உரிமை அலுவலகம் ஒன்றை நிறுவுதற்கான பிரேரணையாகும். இலங்கை ஐ.நாவின் தொழில்நுட்ப சிறப்புத் தேர்ச்சி உதவிகளைப் பெற உடன்படின் அல்லது பெறுமாறு வற்புறுத்தப்படுமாயின் அவ்வடிப்படையில் இலங்கையில் ஐ.நாவின் மனித உரிமை அலுவலகம் ஒன்று அமையும். இது, சர்வதேச அரசியலில் அமெரிக்காவின் முக்கிய காய்நகர்த்தலாகும். தென்னாசியாவில் அமெரிக்கா மறைமுகமாகக் கால்பதிக்க இது வழிகோலும். இதுவரை தென்னாசியாவில் இவ்வாறான அலுவலகம் எதுவும் நிறுவப்படவில்லை. அவ்வாறு ஒன்று உருவானால், அது இலங்கைக்கும் அப்பால் மொத்தப் பிராந்தியத்தினதும் மனித உரிமை நிலைமைகளைக் கண்காணிப்பதற்குமாக இருக்கும். இது பிராந்திய வல்லரசான இந்தியாவுக்கு உவப்பானதல்ல. இன்று எவ்வாறு மனித உரிமை மீறல்களைக் காட்டி சீனா குற்றவாளியாக்கப்படுகிறதோ அவ்வாறே நாளை இந்தியாவுக்கும் நிகழலாம். எனவே அத்தகையதொரு அலுவலகம் அமைவதைத் தவிர்க்க இந்தியா இயன்றவரை முயலும்.

சுயாதீன சர்வதேச விசாரணையைக் கோரும் பரிந்துரையும் இந்தியாவுக்குச் சிக்கலானது. இலங்கை மீது மேலாதிக்கஞ் செலுத்த விரும்பும் இந்தியா இலங்கையின் அலுவலகளில் சுயாதீன சர்வதேச விசாரணையூடான சர்வதேசத் தலையீட்டை விரும்பாது. அது இந்திய இலங்கை உறவை மோசமாகப் பாதிக்க வல்லது. இதுவரை, ஜெனீவாவில் இலங்கைக்கெதிரான தீர்மானங்களை வலுவிலக்கச் செய்ததனூடாக இந்தியா இலங்கைக்கு உதவி வந்திருக்கிறது. இது, தடியும் முறியாமல் பாம்பும் சாகாமற் நடத்தும் ஒரு காரியமாகும். தமிழ் தேசியவாதிகளும் தமிழகத்தின் சீமான், வை.கோ. போன்றோரும் அது ஈழத் தமிழர்கட்கு ஆதரவான இந்தியச் செயற்பாடு என்று கயிறு திரிக்கிறார்கள். வரவுள்ள தீர்மானம் தொடர்பாக எம் முடிவையும் எடுக்கவில்லை என்றும் அதேவேளை தமிழ் மக்களின் சார்பாகவே இந்தியா இருப்பதாகவும் இணையமைச்சர் நாராயணசாமி சொல்கிறார். காங்கிரஸ் அரசாங்கத்திற்கு எல்லாவற்றையும் விடப் பெரிதாக இந்தியப் பாராளுமன்றத் தேர்தலே கண்முன் நிற்கிறது. ராஜீவ் காந்தி கொலைவழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டவர்கட்கு இத்தனை காலங்கடந்து அத் தண்டனை ஆயுட் தண்டனையாகக் குறைக்கப்பட்டுள்ளது. தேர்தல் வரும் போதுதான் நீதி தேவதையும் கண் திறப்பாள் போலும்.

இன்று எல்லாம் தமிழ் மக்களின் பெயரால் நடந்தேறுகின்றன. ஜெனீவாத் தீர்மானத்தைத் தமிழ் மக்களின் உய்வுக்காகவே அமெரிக்கா கொண்டுவருவதாக நாம் நம்பவைக்கப் படுகிறோம். இலங்கையின் மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் ஆகிய குற்றச்சாட்டுகள் அமெரிக்காவினதும் மேற்குலகினதும் முக்கிய துரும்புச்சீட்டுகள். அவற்றை வைத்து இலங்கையில் தனது ஆதிக்கத்தைச் செலுத்த அமெரிக்கா முடியுமானவரை முயலும்.

ஜெனீவாவில் வரும் எத் தீர்மானமும் தமிழ் மக்கட்கு எவ்விதமான பலனையும் தராது. வடமாகாண சபை சர்வதேச விசாரணை கோரித் தீர்மானம் நிறைவேற்றலாம். கூட்டமைப்பினர் தமிழீழம் தான் தீர்வு என்று உரக்கக் கூவலாம். ஆனால் அவர்கள் எல்லாரும் ஒரு விடயத்தை வசதியாக மறந்துவிடுகின்றனர். 1983க்குப் பின்பு பாராளுமன்றத்திலோ மாகாண சபையிலோ அங்கத்துவம் பெற்றவர்கள் அனைவரும் இலங்கை அரசின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் காப்பதாக இரகசியக்காப்புச் சத்தியப்பிரமாணம் செய்தவர்கள் தான். ஜெனீவா ஒரு நல்ல பாடுபொருள். இன்னும் ஒருமாதத்திற்கு வகைவகையாய் வண்ணவண்ணக் கதைசொல்லி அவர்கள் பாடலாம். ஆனால் பசித்த புலவனின் நிலைதான் தமிழ் மக்களுடையது. பாவம் தமிழ் மக்கள்.

*-அஸ்வத்தாமா-*

பாசிச சர்வாதிகாரத்தை...01>>>

முடியாது. யாவும் சர்வாதிகாரம் படைத்த ஜனாதிபதியிடமே இருந்து வரும்போது தேர்தல் ஆணையாளர் ஒரு யந்திரம் மட்டுமேயாகும். அந்த யந்திரத்தால் கொடுக்கப்பட்ட வேலையை மட்டுமே செய்ய முடியும்.

பெரியளவில் இருந்து வரும் தேர்தல் விதிகள் அரசாங்கத் தரப்பால் இலகுவாகவே மீறப்பட்டு வருகிறது. அரசாங்க வளங்கள் அரசாங்க கட்சிக்காகப் பயன்படுத்தப் படுகின்றன. அண்மையில் அரசாங்க உயர் நிலை அதிகாரியான பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச அரசாங்க சார்புத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பங்கு கொண்டு உரையாற்றினார். இதற்கு தேர்தல் ஆணையகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. முதலாளித்துவ ஜனநாயகம் எவ்வாறு தான் தேர்தல்களைப் புனிதமானவை எனக் கூறினாலும் அங்கே திருட்டுக்கள் மோசடிகள் முறைகேடுகள் நிறைந்தே இருக்கும். இதற்கு தற்போதைய மாகாண சபைத் தேர்தல்கள் விதி விலக்காக இருக்க மாட்டாது.

ஜே . ஆர். கொண்டுவந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையின் கீழ் தேர்தல்கள் என்பது ∴பாசிச சர்வாதிகாரத்தின் கீழேயே இடம்பெற்று வந்துள்ளன. இவ் விடயம் மகிந்த சிந்தனை கீழ் இடம்பெறும் ராஜபக்ச சகோதரர்களது ∴பாசிச சர்வாதிகார ஆட்சியின் கீழ் அதனைப் போர்த்துக் கட்டும் போர்வையாகவே இருந்து வருகிறது. இதிலிருந்து விடுபடுவதென்பது ஆட்சி அதிகாரத்தை கையிழப்பது என்பதற்கு ஒப்பானதாகும். எனவே எவ்வளவு பணத்தைக் கொட்டியாவது இத் தேர்தலில் வெற்றி பெறவே ஆளும் தரப்பு முயல்கிறது.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி மாற்றத்திற்கு இத் தேர்தல் முதல் படியாக அமைய வேண்டும் எனக் கூறி பிரச்சாரத்தில் இறங்கி நிற்கிறது. அதனிடம் நாடும் மக்களும் எதிர் நோக்கும் எந்தவொரு பிரசினைக்கும் மாற்றுத் தீர்வு இல்லை. அதேவேளை தம்மிடமே மாற்றுத் தீர்வு இருப்பதாக ஜே . வி . பி . சிகப்பு மேளம் கொட்டி நிற்கிறது. அவர்கள் பழையவற்றைக் கொதிப்பிக்கவே முன் நிற்கின்றனர். மனோ கணேசன் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை உரத்துக் கூறுகிறார். இவர்களால் கை விடப்பட்ட விக்கிரமபாகு கருணாரத்தினா தமிழ் மக்களினது வாக்குகளையே அதிகமாக நாடி நிற்கிறார்.

ராஜபக்ச சகோதரர்களது தலைமையிலான ஐ. ம. சு. முன்னணி அரசாங்கம் ஜெனிவாவையும் மின்சாரக் கதிரையையும் காட்டி வருவதுடன் தேர்தலில் வெற்றியீட்டக் கடுமையான குறுக்கு வழிகளையே மேற்கொண்டு வருகிறது. நடிகைகள் பாடகிகள் களமிறக்கி விடப்பட்டுள்ளனர். இவற்றையெல்லாம் செய்து வெற்றி பெறுவதன் மூலம் தமது ∴பாசிச சர்வாதிகாரத்தை மறைத்து தொடர்ந்தும் மக்கள் விரோத ஆட்சியை நடாத்தவே எல்லா முயற்சிகளையும் ஆளும் தரப்பினர் செய்து வருகின்றனர்.

மலையக மக்கள் இரண்டாம்...01>>>

கூலிகளாகவே இன்றும் தோட்டத் தொழிலாளர்கள் இருந்து வருகிறார்கள். அத்துடன் இப்போது மலையக மக்களின் அடிப்படைக் கோரிக்கையாக முன்வைக்கப்படுவது ஒவ்வொரு குடும்பத்திற்கும் காணி வழங்கப்பட்டு சொந்தமாக்கப்பட வேண்டும். அக்காணியில் தமக்குரிய வீட்டைக் கட்டுவதற்கு உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்பதாகும். தலைமுறை தலைமுறையாக இந்த நாட்டில் உழைத்து வந்த வர்க்க இன மக்களான மலையக மக்களுக்குரிய காணி வீட்டு உரிமைகளை அவர்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் வழங்க வேண்டும். இதற்கான பரந்துபட்ட மக்கள் எழுச்சி இயக்கங்கள் அனைத்து முனைகளிலும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இன்றைய மலையகத்தை எடுத்து நோக்கின் அங்கே ஏதோ ஒரு தோட்டத்தில் அல்லது தோட்ட நகர்ப்புறங்களில் மக்களின்-தொழிலாளர்களின் எதிர்ப்பு வீதிப் போராட்டங்கள் வளர்ந்து வருவதைக் காண முடியும். அவையாவும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை முன்வைத்து நடாத்தப்படுகின்றன. அவை மக்களின் தன்னெழுச்சிப் போராட்டங்களாகவே காணப்படுகின்றன. அவற்றை மலையகத்தின் ஆதிக்க அரசியல், தொழிற்சங்கத் தலைமைகள் தலைமை தாங்கவோ வழிகாட்டவோ முன்வருவதில்லை. ஏனெனில் அத்தகைய தலைமைகள் ஆளும் அரசாங்கத்தில் அங்கம் பெற்று ஆளும் தரப்பு அடிவருடிகளாக இருந்து தமக்கான பதவிகள், பட்டங்கள், பணம், சொத்து சுக வழிகளைப் பெற்றுக் கொள்வதிலேயே அக்கறையுடன் இருந்து வருகின்றனர். இந்நிலை தாத்தா தொண்டமான் காலம் முதல் இன்றைய பேரன் ஆறுமுகம் வரை மட்டுமன்றி பூட்டன்மார் காலத்திலும் தொடர்வதையே விரும்புகிறார்கள்.

எனவே மலையக மக்கள் உழைக்கும் வர்க்கம் என்ற நிலையிலும் தமிழர்கள் என்ற இனத்துவ வகையிலும் தலை நிமிர்ந்து தமக்குரிய அடிப்படை உரிமைகளுக்காகக் கோரிக்கைகள் முன்வைத்துப் பரந்துபட்ட பேராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அதற்கான உழைக்கும் வர்க்க அடிப்படை கொண்ட அமைப்பையும் அதற்குரிய தூரநோக்குடைய நேர்மையான மக்கள் சார்புத் தலைமைத்துவத்தையும் கட்டியெழுப்ப வேண்டும். அதன் மூலமே மலையக மக்கள் இந்நாட்டில் இரண்டாம் தரப் பிரசைகள் அல்லர் என்பதை நிலைநிறுத்த முடியும்.

ஜெனிவாத் தீர்மானம் ...01>>>

கின்றன. ஜெனிவாத் தீர்மானத்தைக் காட்டி, இரண்டு மாகாணசபைத் தேர்தல்களிலும் வெற்றி பெறுவதற்கு அரசாங்கம் கடுமையாக முயல்கிறது. அதனாலேயே மார்ச் மாதப் பிற்பகுதியில் தேர்தலை நடாத்துகிறது. அதே வேளை, அமெரிக்கத் தீர்மானம் கடுமையானதாக அமைந்துவிடுமோ என்ற உள்ளார்ந்த அச்சமும் ராஜபக்ச சகோதரர்களுக்குத் தோன்றியுள்ளது. இருப்பினும் தமது சிங்கள-பௌத்த பேரினவாத நிலைப்பாட்டிலிருந்தும் ∴பாசிசத்தை முன்னெடுத்துச் செல்லும் சர்வாதிகாரப் போக்கிலிருந்தும் விடுபட மறுக்கும் நிலையிலேயே ஆட்சியினர் இருந்து வருகிறார்கள்.

இவ்வாறு, அமெரிக்காவின் ஜெனிவாத் தீர்மானம் பற்றித் தெற்கிலே ஆட்சியினரும் பேரினவாதிகளும் எதிர்ப்பையும் வடக்கிலே தமிழ்க் கட்சிகள் ஆதரவையும் தெரிவிக்கும் நிலை காணப்படுகிறது. வெறும் ஆதரவு மட்டுமன்றி ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானம் தமிழர்களுக்கு நீதி நியாயத்தைக் கொண்டுவந்து அவர்களது துன்பதுயரங்களுக்கு விமோசனம் வழங்கப் போகிறது என்ற ஒரு பிரமையும் தோற்றுவிக்கப்படுகிறது. அதையொட்டித், தமிழரசுக் கட்சியும் தமிழ் ஆயுத இயக்கங்களின் வழிவந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஒருபுறமாகவும், தமிழ்க் காங்கிரஸும் புலிகள் இயக்க வழிவந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இன்னொரு புறமாகவும், அமெரிக்கத் தீர்மானத்திற்காகப் பிரார்த்தனையும் பஜனையும் செய்து வருகின்றனர்.

அதே போன்று, "டயஸ்போரா" என்றழைக்கப்படும் புலம்பெயர் தமிழரிடையேயுள்ள புலிகள் இயக்கச் சார்பு மேட்டுக்குடி அமைப்புகளும் அவற்றின் கனவான்களும் அமெரிக்காவையும் பிரித்தானியாவையும் வெள்ளைத்தோல் பக்தி விசுவாசத்துடன் பற்றிப்பிடித்து நிற்கின்றனர். அமெரிக்கா கொண்டுவரவுள்ள ஜெனிவாத் தீர்மானத்தை உச்சமான கடுமையுடையதாக ஆக்குவவதற்குப் பெருமுயற்சி செய்து வருகின்றனர். அதேவேளை, தமிழ்நாட்டில் அமெரிக்கத் தீர்மானத்திற்குக் கொடிபிடிப்பதில் அங்குள்ள திராவிடக் கட்சிகள் மும்முரமாகியுள்ளன. தமிழகத்தின் திராவிடக் கட்சிகளும் சாதியக் கட்சிகளும் இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தூக்குவது தத்தமது வாக்கு அரசியலுக்கே அன்றி இங்குள்ள துன்பப்படும் தமிழ் மக்களுக்காக அல்ல என்பது வெளிச்சமாகிவிட்ட சங்கதியாகும்.

வடக்கிலே அமெரிக்கத் தீர்மானத்திற்கு வக்காலத்து வாங்கி, அதனூடாகச் சர்வதேசம் தமிழர்களுக்கு நீதிவழங்க வேண்டுமெனவும் அதற்கான ஒரு சர்வதேசத் தலையீட்டுப் பொறிமுறையை ஏற்படுத்த வேண்டுமெனவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் கோரி வருகின்றனர். அவர்கள் கூறும் சர்வதேசம், ஐந்து கண்டங்களிலும் உள்ள நாடுகளை உள்ளடக்கியதல்ல. அமெரிக்காவையும் பிற மேற்குலக நாடுகளையுமே அது உள்ளடக்கும். ஜெனிவாத் தீர்மானத்தினூடாகத் தமிழ்த் தேசம் உருவாகுவதற்கான ஒரு தலையீட்டுப் பொறிமுறை வரமுடியும் என அவர்கள் நம்பச் சொல்கிறார்கள். அதற்கு உதாரணமாகத் தென் சூடான், கொசோவா ஆகியவற்றில் அமெரிக்கா கையாண்ட வழிமுறைகளைக் கையாள்வதற்கு ஜெனிவாக் களத்தைப் பயன்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். அதனையே புலம்பெயர்ந்த தமிழ் மேட்டுக்குடி அமைப்புகளும் அவற்றின் தலைவர்களும் எதிர்பார்க்கின்றனர்.

அவர்கள் ஒருபுறமிருக்கத், தமக்கிடையில் ஒரே திசைநோக்கில் இல்லாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், அமெரிக்கத் தீர்மானம் இலங்கை அரசாங்கத்தையும் அதன் தலைவர் மகிந்த ராஜபக்சவையும் அழுத்திப் பிடித்து வட மாகாணசபை தன் அதிகாரங்களைப் பெற உதவும் என நம்புகின்றனர். இதில் இரா. சம்பந்தனின் பேச்சு ஒரு தொனியிலும் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் பேச்சு வேறொரு தொனியிலும் இருக்கின்றன.

எவ்வாறாயினும், அவர்கள் எல்லாரும் ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டுவரவுள்ள தீர்மானத்தை ஆவலுடன் நம்பிக் காத்திருக்கின்றனர். ஆனால் அமெரிக்கா தனது ஆசிய-பசுபிக் பாதுகாப்புத் திட்டம், சீனாவிற்கு எதிரான தந்திரோபாயம் என்பவற்றின் அடிப்படையில் சிந்தித்து இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான ஜெனிவாத் தீர்மானத்தைக் கொண்டுவருமே தவிர இலங்கைத் தமிழர்களை அவர்களது துயரங்களிலிருந்து மீட்பதற்கு அல்ல என்பது தமிழ்த் தேசியவாதப் பழைமைவாதிகட்கு விளங்காது. "செட்டியார் ஆட்டைச் சுற்றிச் சுற்றி வருவது லாபத்திற்காகவே" என்ற முதுமொழி போன்று, அமெரிக்கா கொண்டுவரவுள்ள இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான தீர்மானம் முற்றுமுழுதாக அமெரிக்காவின் உலக மேலாதிக்க நிகழ்ச்சிநிரலுக்கு உட்பட்டதேயன்றி இலங்கைத் தமிழர்களுக்கானது அல்ல என்பதை உழைக்கும் தமிழ் மக்கள் தெளிவுடன் நோக்குதல் வேண்டும்.

# இந்திய வீடமைப்புத் திட்டம்: நடப்பது என்ன?

வவுனியா நிருபர்

வன்னியில் இறுதிக் கட்ட கோர யுத்தம் முடிந்து நான்கரை ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனாலும், மகிந்த ராஜபக்ச அரசு, வடக்கு-கிழக்கில் யுத்தத்தால் பாதிப்படைந்த மக்களின் அடிப்படைத் தேவைகளை இன்னும் நிறைவேற்றாமல் இழுத்தடிப்பதுடன் இனவாதக் கருத்துக்களையும் பேசிவருகிறது. அதேவேளை, பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களில் தனது மூக்கை நுழைத்து அவற்றைக் குழப்பியடிப்பதையும் வடக்கு-கிழக்கில் தெட்டத் தெளிவாகக் காண முடிகிறது.

இலங்கையில் இறுதி யுத்தம் முடிந்த பின்பு யுத்தத்தை முன்னின்று நடாத்தி நிதியுதவி, ஆயுத உதவி ஏனைய உதவிகளை வழங்கிய இந்தியப் பெரியண்ணன் யுத்தத்தால் பாதிப்புற்ற வடக்கு-கிழக்கு மக்களுக்கு இந்திய அரசு சார்பாக ஐம்பதினாயிரம் வீட்டுத் திட்டத்தை இலவசமாகக் கட்டித் தருவதாக உறுதி அளித்தது. முதல் நிபந்தனையாக யுத்த அனர்த்தத்தால் மிகவும் பாதிப்படைந்த மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும் எனவும் அடுத்தபடியாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கையின் வேறு எந்தப் பகுதிகளிலும் சொந்த வீடில்லாதவர்கள் அல்லது வீடுகளை இழந்தவர்களும் வீடுகளை இழந்து வெளியேறிப் பின்னர் மீளக் குடியேற விரும்புபவர்களும் எனும் ரீதியில் வீடுகளை வழங்குவதற்கு இந்திய வீடமைப்புத் திட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டன. ஆனால், இதுவரை, வவுனியா மாவட்டத்தில் இந்திய வீடமைப்புத் திட்டத்தில் உள்வாங்கப்பட்ட மக்களிடையே அந் நிபந்தனைகள் கடைப்பிடிக்கப்பட்டனவா என்பதைச் சற்று ஆராய வேண்டும். வீட்டுத்திட்ட மோசடிகளின் பின்னணியில், அரசாங்கம் மட்டுமன்றித் தமிழ்த் தரப்புக் குறுந்தேசியவாத வாக்கு வங்கி அரசியலும் இருந்து வருவதனைக் காண முடியும். உண்மையாக, இந்திய வீட்டுத் திட்டத்தில், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கே வீடுகள் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட வேண்டும். வீட்டுப் பகிர்வில் தமிழ், முஸ்லிம், மலையக வேறுபாடுகளைக் கடந்து யுத்த அனர்த்தத்தில் வீடு இழந்தவர்கட்கே வீடுகள் சேர வேண்டும். அதை விடுத்து, வவுனியா நகரப்பகுதியில் வீடுகள் கட்டி வசதிகளுடன் வாழ்ந்துவரும் பலருக்கும் வீடுகள் கொடுக்கப்பட்டது எவ்வாறு நியாயமானது? இதில் தமிழ்த் தேசிய அரசியல் சக்திகள் வாக்கு வங்கி அரசியல் நடத்த முயன்று வருகின்றன என அறிய முடிகிறது.

உதாரணமாக, வவுனியா மாவட்டத்தில் யுத்தம் ஆரம்பமான காலப்பகுதியில் யுத்தப் பாதிப்பின்றி வவுனியா நகரில் குடியேறிய சிலருக்கு வீடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவர்கள் அவ் வீடுகளைக் கட்டி வாடகைக்கு விட்டுள்ளதாகவும் தெரிகிறது.

முஸ்லிம் மக்களுக்கும் வீடுகள் கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் நியாயமானது. ஏனெனில் விடுதலைப் புலிகள் அமைப்பு 1990களில் முஸ்லிம் மக்களின் சொத்துக்களைப் பறித்து வவுனியா மாவட்டத்தில் இருந்து அவர்களைத் துரத்தியது. யுத்தம் முடியும் வரை புத்தளம் அகதி முகாம்களுள் அவர்கள் வாழ்ந்த வாழ்வு சொல்லொணாத் துயரமுடையது. ஆனாற் சில முஸ்லிம்கட்கு ஒரு குடும்பத்திற்கு இரண்டு வீடுகள் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. அவ்வாறு கூறுவோர் அதை ஆதாரபூர்வமாக நிறுவ வேண்டும். அத்துடன் வீடுகளைப் பெற்ற சில முஸ்லிம்கட்குப் புத்தளத்தில் சொந்தமாக வீடுகள் உள்ளதெனவும் கூறப்படுகிறது. அதைச் சரிவர விசாரித்து, அதன் உண்மையை வெளிக்கொணர்ந்து யுத்தத்தாற் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த தமிழ், முஸ்லிம், மலையக மக்களுக்கு அவ் வீடுகள் கொடுக்கப்படல் வேண்டும் என நேர்மையான அரசியல் சக்திகள் வலியுறுத்தல் வேண்டும்.

அதை விடுத்து, மக்கள், மக்கள் என முழங்கிக் கொண்டும் மக்களுக்குச் சேவை செய்கின்றோம் எனப் பீற்றிக் கொண்டும் இனவாத, மதவாத பிற்போக்கு அரசியல் நடத்தியும் வாக்குக்கட்காக குளிர்காய எவரும் முனையக் கூடாது என்பதைச் சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனத்தில் எடுத்தல் நன்று. ஏனெனில், தமிழ்ப் பேசும் சமூகங்களான தமிழ் முஸ்லிம் தரப்புக்கள் தம்முள் முரண்படுவது மக்களின் ஒற்றுமைக்கு ஆப்பு வைக்கும்.

இந்திய அரசின் வீட்டுத் திட்டம் வட மாகாணத்தில் 10,184 வீடுகளை மட்டுமே கட்டி முடித்துள்ளது. அவற்றில் 1832 வீடுகள் குடாநாட்டிலும் 3090 வீடுகள் கிளிநொச்சி மாவட்டத்திலும் 3540 வீடுகள் முல்லைத்தீவு மாவட்டத்திலும் 1074 வீடுகள் மன்னார் மாவட்டத்திலும் 648 வீடுகள் வவுனியா மாவட்டத்திலும் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அநீதியை யார் செய்தாலும் அதை அம்பலப்படுத்த வேண்டும் என்பதுடன் சரியான தீர்வையும் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க அரசியல் சக்திகள் முயல வேண்டுமே ஒழிய, வாக்கு வங்கி அரசியலுக்காகத் தமிழ், முஸ்லிம் மக்களை மோத விடக்கூடாது. அத்துடன் ஏற்கனவே இரண்டு சமூகங்களும் யுத்தத்தின் மூலமும் அரசின் ஒடுக்குமுறை கரங்களின் மூலமும் மிக மோசமாக நசுக்கப்பட்ட சமூகங்களாக இருப்பதால் இரு சமூகங்களதும் அரசியற் சக்திகள் ஏட்டிக்குப் போட்டியாக நடக்காமல் சுமுகமாக நட்புறவுடன் பேசி இந்திய வீட்டுத் திட்டப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதுடன் யுத்தத்தால் வீடிழந்து வீடமைக்க முடியாத மக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வீடுகளைப் பகிர்ந்தளிக்க வேண்டின், சம்மந்தப்பட்டோர் மக்களுக்கு ஆறுதல் தரும் வகையில் வீட்டுத் திட்டத்தை கவனத்துடன் முன்னெடுக்குமாறு வற்புறுத்த மக்கள் சார்பு சக்திகள் முன்வர வேண்டும்.



# வடபுலத்து மீனவர்களும் தமிழ்நாட்டு அத்துமீறிய மீன்பிடியும்

கோகர்ணன்

நமது வடபுலக் கடல் வளம் இந்திய மீன்பிடிப் படகுகளின் வருகையாற் பல வழிகளிற் பறிபோகிறது. ஒன்று பெருமளவில் மீன்கள் பிடிக்கப்படுவதால் வடபுல மீனவர்களின் மீன்பிடி பாதிக்கப் படுகிறது. அடுத்து, மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களைப் பெரும் படகுகள், தற்செயலாகவும் வேண்டுமென்றும், சேதமாக்குகின்றன. அனைத்தினதும் முக்கியமாக, இந்திய மீன்பிடி வலைகளில் மீன் குஞ்சுகளும் கடலடி உயிரினங்களும் அள்ளுண்டு போய் எதிர் கால மீன் வளம் சிதைகிறது. இவை எல்லோருக்கும் இப்போதைக்குக் தெரிந்துள்ள உண்மைகள். எனினும் இதைத் தீர்க்கும் முக்கிய பொறுப்பு இரண்டு நாடுகளுடைய அரசாங்கங்கட்கும் உள்ளது. ஆனால், பிரச்சினை தொடங்கிப் பல ஆண்டுகளாகியும் யாரும் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

போரின் பெயரில் வடபுல மீனவர்கள் கடலுக்குச்

**இலங்கை மீனவர்களின் எதிரிகள் தமிழகத்தின் ஏழை மீனவர்களல்ல. வயிற்றுப் பிழைப்புக்காக அவர்கள் தமது சிறு படகுகளையும் மரபுவழிக் கருவிகளையும் பாவிப்பதையிட்டு இலங்கை மீனவர்கள் சினக்கப் போவதில்லை. மீன் முதலாளிகளின் பெரும் இழுவைப் படகுகளின் செயற்பாடே மீனவர்களின் கவலைக்குரியது.**

செல்லாமல் மறிக்கப்பட்ட இரண்டு தசாப்த காலத்தில் அவர்களுடைய குடும்பங்கள் பட்ட அல்லல்களை அவர்கள் மறந்திருக்கமாட்டார்கள். அமைதிப் பேச்சுக் காலத்திற் கிட்டிய நிவாரணமும் முழுமையானதல்ல. அது நிலைக்கவும் இல்லை. இந்தச் சூழ்நிலையிலேயே தென்னிந்திய மீன்பிடிப் பெருமுதலாளிகள் வடபுலக் கடற் பிரதேசத்தைத் தமக்கு வாய்ப்பாக்கிக் கொண்டார்கள். இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரை, வடபுல மீனவர்கள் பட்டினியில் இறந்தாலும் அது கவலைப்பட்டிராது. மறுபுறம், விடுதலைப் புலிகளுக்கு எதிராக அதற்கு இந்திய மத்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பு தேவைப்பட்டது. எனவே, இந்தியப் பெரும் படகுகளின் ஊடுருவல் கண்டுங் காணாமல் விடப்பட்டது.

எவ்வாறாயினும், இன்று வடபுலத்த மீனவர்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதாரப் பிரச்சினைக்குத் துரிதமான, நியாயமான, நிலைக்கக்கூடிய தீர்வு தேவை. அவர்களைப் பொறுத்தவரை அவர்களுடைய வாழ்க்கையையும் தொழிலையும் இடையூறின்றிக் கொண்டு நடத்துவது முக்கியமானது. இந்திய மீனவர்களின் வயிற்றில் அடிக்கும் நோக்கம் அவர்கட்கு இல்லை. எனவே, இலங்கைக்குரிய கடற்பரப்பிலும் கரைப்பகுதியிலும் மிகையான மீன்பிடியைத் தடுக்கும் தேவை உள்ளது. அவர்களுடைய உடனடியான தொழிற் பாதுகாப்புக் கருதி அவர்களுடைய மீன்பிடி உபகரணங்கட்குச் சேதம் விளைவிக்கும் எந்தச் செயலையும் முற்றாகத் தடுக்க வேண்டும். நீண்ட கால மீன்வளம் பேணுவதை உறுதிசெய்ய மீனினப் பெருக்கத்திற்கும் கடற்பகுதியின் இயற் சூழலுக்கும் கேடான எக்காரியத்தையும் தவிர்க்க வேண்டும்.

மேற்கூறிய நோக்கில், இலங்கைக் கடற்பரப்பினுள் பெரிய மீன்பிடி இழுவைப் படகுகளின் நுழைவும் மீன் வளத்தைப் பாதிக்கும் சிறுகண் வலைகள் உட்பட்ட உபகரணங்களின் பாவனையும் ஏற்கத்தகாதன. அவற்றை நிறுத்துவதற்கு இந்திய-இலங்கை அரசாங்கங்கள் உடன்படாதிருக்க ஒரு நல்ல நியாயமும் இல்லை.

இலங்கை கடற்பரப்பினுள் இலங்கை அரசாங்க உடன்பாடின்றிக் கடற்கலங்கள் நுழைவது, ஒரு அத்து மீறல் மட்டுமல்ல, ஒரு எல்லைக்கப்பால் அது ஆக்கிர மிப்புச் செயலும் ஆகும். எனவே, அவ்வாறு கடல் எல்லையை மீறி இலங்கைக் கரைப்பகுதிக்கு நெருக்கமாக வரும் கடற்கலங்களை விரட்டுவதும், தேவையானால், பிடித்து நிரந்தரமாக மறிப்பதும் சரியானது. எனினும் அவ் வாறு பிடிக்கப்பட்ட படகுகளில் வரும் மீனவரைத் துன்புறுத்தவோ தாக்கிக் காயப்படுத்தவோ கொல்லவோ முயல்வது ஏற்கத்தகாதது. மீள மீள எச்சரித்த பின்பும்

**தமிழகத்து மீன்பிடிப் பெரு முதலாளிகளும் கடற்கரைக் கனி மணல் வளக் கொள்ளையர்களும் தமிழர்கள்தான். ஆனால், அவர்கள் தமிழினத்தின் எதிரிகளாவர். இது கடலின் இரு கரைகளிலும் வாழும் தமிழ் மக்களும் தமிழ் மீனவர்களும் கவனமாகச் சிந்திக்க வேண்டிய விடயம்.**

பெருந்தொகையான படகுகள் தென்னிந்தியாவிலிருந்து ஊடுருவுவது ஏன் என்ற கேள்வியை நாம் புறக்கணிக்க இயலாது.

இலங்கை இந்திய ஒப்பந்தம் ஒன்று 1974 இல் கச்சதீவை இலங்கைக்கு வழங்கியபோது, இலங்கை மீனவர்கள் இந்தியக் கரையை அண் டியும் இந்திய மீனவர்கள் இலங்கைக் கரையை அண்டியும் மீன்பிடிப்பதற்கு இருந்து வந்த உரிமைக்குத் தடை ஏற்பட்டது. அது இரு நாடுகளினதும் மீனவர்களைப் பாதித்தது. ஏனெனில், ஒரு கரையில் மீன் வளம் குறையும் பருவங்களில் மறுகரையில் மீன் வளம் நிறைவாயிருக்கும். மீன் பிடிப்பதற்குப் பயன்பட்ட வள்ளங்களும் வலைகளும் மரபு வழியானவை. அவை, மிகையான மீன்பிடிக்கோ மீன்களின் அழிப்பிற்கோ காரணமாகாதவை. கடந்த சில தசாப்தங்களில் பெரிய இயந்திரப் படகுகளதும் ஆழ்கடல் மீன்பிடிக் கப்பல்களதும் இழுவைப் படகுகளதும் சிறு கண்வலைகளதும் வருகையும் பெருக்கமும் தென்னிந்தியக் கரையோரம் முழுவதிலும் மீன் வளத்திற்குக் கேடு விளைத்துள்ளது. இன்றுவரை, பெரும் படகுக்காரர்க்கும் சிறு அளவில் மீன் பிடிப்போருக்குமிடையிலான முரண்பாடு இந்தியாவில் தொடருகிறது.

தமிழகக் கரையோர மீன்வளம் சிதைந்துள்ள நிலையில் மீனவர்கட்குள்ள தெரிவுகள் இரண்டே. ஒன்று ஆழ் கடல் மீன்பிடிக்கு மாறுவது. மற்றது இலங்கை கடற்பரப்பிற் தொழிலைத் தொடருவது. இலங்கையின் போர்ச் சூழலும் இலங்கைத் தமிழ் மீனவரின் நலன்கள் பற்றிய இலங்கை அரசாங்க அசட்டையும் சில சமயம் குரோதமான நோக்கும், இலங்கைக் கடற்பரப்பில் மீன் பிடிப்பதை ஊக்குவித்தன. இதிற் பெரிய பிரச்சினை இந்திய மீனவர்களின் வருகையல்ல. அவர்கள் பாவிக்கும் சட்ட விரோதமான மீன்பிடி முறைகளும் அளவு மீறியதும் கடற் சூழலுக்குக் கேடானதுமான மீன் வளக் கொள்ளையுமே.

இலங்கை மீனவர்களின் எதிரிகள் தமிழகத்தின் ஏழை மீனவர்களல்ல. வயிற்றுப் பிழைப்புக்காக அவர்கள் தமது சிறு படகுகளையும் மரபுவழிக் கருவிகளையும் பாவிப்பதையிட்டு இலங்கை மீனவர்கள் சினக்கப் போவதில்லை. மீன் முதலாளிகளின் பெரும் இழுவைப் படகுகளின் செயற்பாடே மீனவர்களின் கவலைக்குரியது.

இலங்கை மீனவர்கள் தங்களது குறுகியகால, நீண்ட கால நலன்கட்குக் கேடின்றி இலங்கைக் கடலில் அந்நியக் கலங்களின் மீன்பிடி பற்றிய ஒரு தெளிவான முடிவை எடுப்பதும் தமிழகத்தின் சாதாரண மீனவர்களது வாழ்வாதாரத்திற்குக் கேடற்ற விதமான ஒரு சமரசத்தை எட்டுவதும் இயலுமானது. அதைக் கவனமாக முன்னெடுக்க உதவுவதும் அதை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தையும் வடமாகாண சபையையும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் ஏனைய மக்கள் சார்புக் கட்சிகளையும் அமைப்புகளையும் வற்புறுத்துவது அனைத்துத் தமிழ் மக்களுடையதும் சமூகப் பொறுப்பாகும்.

இப் பிரச்சினையுடன் சேர்த்து இலங்கை-இந்திய மீனவர்கட்கு நீண்டகாலத்திற் தீமை விளைக்கக் கூடிய கூடங்குளம் அணு மின்-நிலையத்தையும் சேது சமுத்திரத் திட்டத்தையும் எதிர்ப்பதிலும் இலங்கை-இந்திய மீனவ சமூகங்களும் பொதுமக்களும் ஒத்துழைப்பது முக்கியமானது. தமிழகத்து மீன்பிடிப் பெரு முதலாளிகளும் கடற்கரைக் கனி மணல் வளக் கொள்ளையர்களும் தமிழர்கள்தான். ஆனால், அவர்கள் தமிழினத்தின் எதிரிகளாவர். இது கடலின் இரு கரைகளிலும் வாழும் தமிழ் மக்களும் தமிழ் மீனவர்களும் கவனமாகச் சிந்திக்க வேண்டிய விடயம்.

*நன்றி: தினக்குரல் (வார இதழ்)*

# மலையகமும் மாற்று அரசியலும்

*குறிஞ்சிவேலோன்*

மலையக தமிழ் மக்களுக்கு தாங்களே அரசியல் தொழிற்சங்கத் தலைமை தாங்கி வருவதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிற் சங்க அமைப்புக்கள் கூறி வருகின்றன. இதற்குக் காரணம் பாராளுமன்றத்திலும் மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் என்பவற்றில் வாக்குகள் பெற்று பிரதிநிதிகளைக் கொண்டிருப்பதேயாகும்.

இ.தொ.கா. இன்றைய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளைப் பெற்று நிற்கின்றது. அதே போன்று பாராளுமன்ற உறுப்புரிமையும் ஏனையோருக்கு இருந்து வருகின்றது. இவர்கள் எல்லோரும் மகிந்த சிந்தனைக்கும் ஜனாதிபதிக்கும் முன்னால் பணிந்து நிற்பவர்களாகவே இருந்து வருகின்றார்கள். இதனை பேரம் பேசும் அரசியல் என்று நாகரீகமாக அழைத்துக் கொள்கின்றார்கள். ஆனால் இவர்களது பேரப் பேச்சசுக்களானவை மலையக மக்களுக்கானவையாக இருப்பதில்லை. தமக்கான அமைச்சுப் பதவிகளுக்கும் ஏனைய பதவிகளுக்கும் உரியனவாகவே இருந்து வருகின்றன. அவற்றின் பலாபலன்கள் யாவும் இவர்களுக்கும் இவர்களைச் சார்ந்து நிற்போருக்கும் உரியனவாகவே இருந்து வருகின்றன. இதனை "நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்" என்பது போன்று விடயங்கள் அமைந்துக்கொள்ளுமே தவிர மக்களின் பிரச்சினைகளுக்கு எந்தத் தீர்வும் கிடைப்பதில்லை.

மேற்படியான மலையகத்தின் அரசியல் தொழிற்சங்க ஆதிக்கப் போக்கையும் வாக்கு அரசியல் ஏமாற்றையும் எவ்வளவு காலத்திற்கு மலையக மக்கள் சகித்துக்கொள்ளப் போகின்றார்கள் என்பது முக்கியமான கேள்வியாகின்றது. இதற்கான விடையை காணவேண்டுமாயின் சரியானதும் உறுதியானதுமான மாற்று அரசியல் ஒன்று அங்கே மேற்கிளம்ப வேண்டும். அந்த மாற்று அரசியலானது நிச்சயமாக மாக்சிச அரசியலாகவே அமைய முடியும். அந்த அரசியல் மலையகத்திற்கு அந்நியமான ஒன்று அல்ல. கடந்த நூற்றாண்டில் எடுத்து நோக்கின் மலையகத்தில் மாக்சிச அரசியல் பாரம்பரியமொன்று இருந்து வந்ததை தெளிவாக அடையாளம் காண முடியும். அத்தகைய அரசியல் வெறுமனே பாராளுமன்ற அரசியலாகவோ ஏமாற்று அரசியலாகவோ இருந்ததில்லை. மலையக தொழிலாளி வர்க்கத்தின் அடிப்படை உரிமைகளுக்கான போராட்ட அரசியலாகவும் தூர நோக்கில் மலையக மக்களை விடுவிக்கக் கூடிய கொள்கை அரசியலாகவும் இருந்து வந்திருக்கினறது.

இன்று மலையக மக்கள் அனுபவித்து வரும் உரிமைகள் எனப்படுபவை அன்றைய போராட்ட அரசியலின் ஊடாகவே வென்றெடுக்கப்பட்டவை என்பது நினைவூட்டப்பட வேண்டியவையாகும். எனவே இன்றைய சூழலில் அத்தகைய போராட்ட அரசியல் அனுபவங்களில் இருந்து மேலும் செழுமையுடைய மாக்சிச-லெனினிச போராட்ட அரசியலை சமூக மாற்றத்திற்கான அரசியலாக முன்னெடுக்க மலையக இளந் தலைமுறையினர் அர்ப்பணிப்போடு முன்வரல் வேண்டும்.

# பெருந்தோட்டங்களில்
## 60 ஆயிரம் மரங்களை வெட்டச் சதி

*மாத்தளை நிருபர்*

கண்டி மாத்தளை மாவட்டங்களில் தேயிலை உட்பட பெருந்தோட்ட செய்கையில் ஈடுப்பட்டுவரும் நிறுவனங்களில் **JEDB, SI.SPC**, எல்கடுவ பிளாண்டேஷன் என்பன முன்னிலையான மூன்று உற்பத்தி நிறுவனங்கள். மேற்படி 3 நிறுவனங்களும் குறைந்த நாள் வேலை, உரிய திகதியில் ஊதியம் வழங்காது விடல், பராமரிப்பின்மை என மிக மோசமாகவே தோட்டங்களையும் தொழிலாளரையும் நடத்தி வருகின்றன.

**JEDB, SI.SPC, EPL** ஆகிய நிறுவனங்கள் கடந்த 1997ம் ஆண்டிலிருந்து தொழிலாளர்களுக்கு கட்டாயமாக கிடைக்கவேண்டிய ஊழியர் சேமலாப நிதி (EPF) ஊழியர் நம்பிக்கை(ETF) நிதிகளை 16 வருடங்களிற்கு மேல் தொழிலாளருக்கு வைப்பிலிடாமல் மோசடி செய்து வருகின்றன. இந் நிதிகளைப் பெற வேண்டிய தொழிலாளர்கள் பலர் இறந்தும் விட்டதாக மக்கள் கூறுகின்றனர். மேற்படி நிறுவனங்கள் தொழிலாளர்களுக்கு சேர வேண்டிய சுமார் 2 பில்லியன் ரூபாய்களை வைப்பிலிட வேண்டியுள்ளது. 16 வருடங்களிற்கு மேல் இந்நிதிகளை வைப்பிலிடாமல் இருந்து வருவது எவ்வளவுப் பெரிய குற்றம்.

தொழிலாளர்களுக்கு சேர வேண்டிய அவர்களின் உழைப்பின் ஒரு பகுதியை பெற்றுக்கொடுக்க பொருளாதார நிபுணர்கள் முன்வைத்துள்ள ஆலோசனை என்னவென்றால் மாத்தளை, கண்டி, நுவரெலியா மாவட்டங்களில் **JEDB, SI.SPC, EPL** தோட்டங்களில் காணப்படும் 60 ஆயிரம் மரங்களை வெட்டி அதன் மூலம் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி என்பவற்றை வழங்கலாம் என்பதேயாகும்.

பொருந்தோட்ட நிறுவனங்களின் அரசாங்க நிர்வாகிகள் செய்த ஒழுங்கினத்தால் மரங்களுக்கு வந்த சோதனை கவலைக்கிடமானது. 60 ஆயிரம் மரங்கள் தகர்க்கப் படுவதனால் ஏற்பட போகும் அழிவுகளை அனுபவிக்க போகின்றவர்களும் சாதாரண மக்களே ஆவர். பாராளுமன்றம் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கிவிட்டதாக தகவல்கள் கூறுகின்றன. அரச வளங்கல் முகாமைத்துவ அமைச்சர் திசேரா மரங்கள் தற்போது வெட்டப்படாவிட்டால் பொருளாதார பெறுமதியை இழந்து விடும் என்கிறார்.

தோழிலாளர்களுக்கு செலுத்த வேண்டிய தொகை சுமார் 200 கோடியாகும். 60 ஆயிரம் மரங்களை வெட்டி கிடைக்கப் பெறும் வருமானமோ வெறும் 3 மில்லியன் ரூபாய்களே எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. மிகுதி தொகைக்கு மேற்படி நிறுவனங்கள் என்ன செய்யப் போகின்றன? துண்டு விழும் தொகையை அரசாங்கம் பொறுப்பேற்கப் போகின்றதா? அல்லது தொழிலாளர்களுக்கான பணம்தானே என அலட்சியத்தைத் தொடரப் போகின்றதா?

# மக்கள் பக்கம் நின்று...

**குட்டியான்:** *அண்னே சனாதிபதி கூட்டமைப்புக்கு பகிரங்க அழைப்பு விடுத்திருக்கார் போல..*
**சூறா:** *மார்ச் அமர்வுல ஜெனிவாகாரன் என்னத்த கிளிச்சீங்கன்னு கேட்பான் தானே தம்பி. அதுக்கு தான் இதெல்லாம்.*

**குட்டியான்:** *அண்னே மலையக பாராளுமன்ற உறுப்பினர்கள் பற்றி ஏதாவது கைவசம் இருக்கா*
**சூறா:** *ம.ம.மு இராதாகிருஷ்னனிடம் பாராளுமன்றத்துல பேசுறதே இல்லையாமே எனக் கேட்டால், இல்ல நாங்க நேரடியா ஜனாதிபதியிடமே மலையக மக்களின் பிரச்சினைப்பற்றி கதைச்சுரு வோம். அதுனால தான் சபையில பேசுறது குறைவு என்கிறார். அவர் உண்மையில் அலரி மாளிகை உறுப்பினராக இருப்பார் போல.*

**குட்டியான்:** *எதுக்கு அண்னே சபாநாயகர் தன் வீட்டுக்கு கூப்பிட்டு ஆளும், எதிர்தரப்புக்கெல்லாம் விருந்து கொடுத்தார்?*
**சூறா:** *எல்லாருமா சேர்ந்து வரவு செலவுத் திட்டத்தின் மூலம் சாதாரண உழைக்கும் மக்களின் கழுத்தை நெறிச்சுட்டோம் என்கிற சந்தோஷத்துல தான் தம்பி அத்தன தட புடல் ஏற்பாடு.*

**குட்டியான்:** *மன்னார் ஆயரையும் பயங்கரவாதின்னு அரசாங்கம் சொல்லுதாமே?*
**சூறா:** *தம்பி ஆரு ஆரெல்லாம் சுயாட்சி, சுயநிர் ணயம் பற்றி பேசுறாங்களோ அவுங்க அத்தன பேரும் அரசாங்க கணக்கின் படி பயங்கரவாதிகள் தானே.*

**குட்டியான்:** *மலையக அமைச்சர்கள், எம்.பிங்க பாராளுமன்றத்துல எப்பண்ணே பேசுவாங்க?*
**சூறா:** *வாக்களித்தவர்களே மௌனமாய் இருக்கப்போ உனக்கேன் வீண் வம்பு.*

**குட்டியான்:** *மண்டேலா அஞ்சலி நிகழ்ச்சியில சைகை மொழி வெளியீட்டாளர் ஏதோ தவறான சைகையை வெளிப்படுத்தினாராமே?*
**சூறா:** *ஆமா தம்பி நான் நினைக்குறேன் ஏகாதி பத்திய வல்லரசுகளுடன் மண்டேலா சமரசம் செய்துக் கொண்ட கோபத்திலும் ஒரு காலத்தில் சரியான வழியில் போராடிய மண்டேலாவிற்கு ஓபாமா போன்றவர்கள் போலி புகழாரம் செய்வதையும் பார்த்து கோபங் கொண்டு அந்த மனுசன் உணர்ச்சிவசப்பட்டிருப்பார் போல. சரி தம்பி பிறகொரு நாள் ஆறதலா பேசுவோம். மீண்டும் சந்திப்போம்.*

*மாசுரா*




*சைக்கிள் தோழர்கள்*

### 01.12.2013. எத்தனைக் காலந்தான் ஏமாற்றுவார்...

*தினசரி பத்திரிகை வாங்குவதற்காக ஓர் கடைக்கு சென்றிருந்த போது தெரிந்தவர் கடைக்கு அருகில் நின்றிருந்தார். "அண்னே நீங்கள் இந்த கடையிலா வேல என்றேன்" "இல்ல தம்பி மேல உள்ள பெரிய செலவு கடையில தான் வேல வெள்ளிக்கிழமை தொழுகைக்காக கடை மூடப்பட்டதால் பொழுதை போக்குவதற்காக இங்கு வந்தேன்" என்றார். அவரின் வேலை சம்பளம் பற்றியெல்லாம் கேட்டறிந்து கொண்ட நான் உங்களுக்கு நு.ஃ.குஇநு.வு.கு போன்றவை போடப்படுகின்றதா? என்று கேட்டேன். அவர் "தம்பி குறித்த கடையில் நான் 7 வருடங்களுக்கு மேல் வேலைச்செய்கிறேன். மிகுந்த கஷ்டப்பட்டு உழைத்து குடும்பத்த காப்பாத்தும அளவு பணம் சேத்துறுவன். ஆனால் கடையில் நு.ஃ.குஇநு.வு.கு போடுறது இல்ல" என்றார். டிபார்மண்டில இருந்து வரும் அதிகாரிகளுக்கு தெரியாதா? என்று கேட்க, பயிரே வேலிய மேயுற கத போங்க என்றவர், "பாருங்க தம்பி, தொழில் திணைக்களத்துல இருந்து வந்தா எங்களுக்கு ஏதாவது வேல சொல்லி வெளியிடத்திற்கு அனுப்பிருவாங்க இல்லென்னா, அவங்க கண்ணில பாடாம மறைந்திருக்க சொல்லுவாங்க. அப்படியும் இல்லென்னா வர்றவர்களிடம் இந்நபர் வந்து ஒரிரு கிழமைத்தான் ஆகுது, கூடிய சீக்கிரம் போடுறோம் என்பார்கள். இன்னொரு உத்தியும் வைச்சிருக்காங்க, கடையில் இருக்கும் மாசிக்கருவாடு போன்ற விலை அதிகமான பொருட்கள் உள்ளடங்கிய பட்ஜெட் பெக்கை கட்டி வந்திருக்கும் அதிகாரிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப வந்திருக்கும் வாகனத்தில் ஏற்றுவாங்க. அதிகாரிகளும் முதலாளிமாரிடம் சமரசம் செய்துக்கொள்வர்" என்றார்.*

*குறைந்த நாட் கூலியில் அதுவும் 8 மணித்தியாலயங்களுக்கு அதிகமாக உழைக்கும் கடைக் காரியாலய தொழிலாளர்களுக்கு அற்ப சலுகைகளை முதலாளிமார் வழங்குகின்றனர். உழைக்க முடியாத காலத்தில் அவர்களுக்குரிய ஆறுதலே நு.ஃ.குஇநு.வு.கு போன்ற வைப்புகளேயாகும். இதனை தொழிலாளர்களுக்கு மறுப்பது முதலாளித்துவ மரபு. இவ்வாறான அநியாயங்கள் அத்தனையையும் ஐக்கியப்பட்டு தகர்த்தெறிவதே பாட்டாளிவர்க்க மரபு என்பது புரிந்துக்கொள்ளப்பட வேண்டியது.*

• • •

### 26.12.2013. சட்டமும் நீதியும்...

*மாலை நேரம் மோட்டார் சைக்கிளில் எல்கடுவ நோக்கி செல்லும் போது ரத்துவத்த கீழ்பிரிவு பிளாண்டேஷன் காரியாலயத்திற்கு அருகில் எனக்கு நன்றாக தெரிந்த ஓர் அம்மா வந்துக்கொண்டிருந்தார். அந்த அம்மாவின் ஒரேயோரு ஆண் பிள்ளை கடந்த 2008ம் ஆண்டு சந்தேகத்தின் பெயரில் கைதுச்செய்யப்பட்டு இன்று வரை இன்றுவரை எதேச்சதிகாரமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அம்மாவிற்கு அருகில் போய் சைக்கிளை நிறுத்த என்னை அடையாளங்கண்டுக்கொண்டார். அம்மா எங்க போறிங்க என கேட்க, மாட்ட தேடி போன கணவர தேடிக்கிட்டுத்தான் என்றார். மிகவும் பாசமான குரலில் "என் புள்ளக்கி ஏதேனும் நல்ல விஷயம் நடக்காதா தம்பி? காலந்தோறும் இப்படியேவா கிடக்கிறது" எனத் தொடங்கி அரை மணித்தியாலத்திற்கு மேல் அந்தத் தாய் தன் மகனைப்பற்றிய மெல்லிய உணர்வுகளை பகிர்ந்துக் கொண்டாள்.*

*ஆயுத குழுக்களிற்கு தலைமை பொறுப்புக்களை வகித்த பலர் இன்று சுகபோக வாழ்க்கை அனுபவிக்க போராளிகள் நீதி விசாரணை எதுவும் இன்றியும் புணர்வாழ்வு என்ற பெயரிலும் சிறை கூடங்களில் இருந்து வருகின்றனர். விடுதலை என்ற பெயரில் வெளியே விட்டவர்களையும் நிம்மதியாக இருக்க விடாது ஆயிரத்து எட்டு தொந்தரவுகள். அது போதாதென்று புலிக்கு சீம் கார்ட் வாங்கிக் கொடுத்தான், லைசன்ஸ் எடுத்துக்கொடுத்தான், வாகனம் ஓட்டினான், பணம் கொடுக்கல் வாங்கல் செய்தான் என இன்னும் எத்தனையோ விதமான குற்றச்சாட்டுக்களில் சந்தேகத்தின் பெயரில் விசாரணையும் இடம்பெறாமலும் விடுதலைச் செய்யப்படாமலும் வருடக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இந்த அம்மாவின் பிள்ளையைப்போல் எத்தனையோ பிள்ளைகள் சிறையில்வாடுகின்றனர். போலி ஜனநாயகத்தில் உயர்வர்க்கத்திற்கு நீதி, சாதாரண மக்களுக்கு என்றுமே வெறும் மிதி.*

• • •

### 02.01.2014. சற்று சிந்தித்துப் பாருங்கள்...

*எமது கிராமத்தில் வசிக்கும் இளைஞர்கள் இருவர் மாலை நேரத்தில் சீவி சிங்காரிச்சி திருவிழா பார்க்க போற மாதிரி அழகா புறப்பட்டு போனார்கள். பக்கத்தில் அமர்ந்திருந்த பெரியவரிடம் ஏதாவது விசேசமா என்று கேட்டேன். அதெல்லாம் ஒன்னுமில்ல தம்பி, அவனுங்க இரண்டு பேரும் மாதம் தவறாம நெருங்கிய நண்பன் வீட்டிற்கு போவாங்க தம்பி என்றார். மனிதத்தொடர்புகளை மறந்துவரும் காலத்தில் நட்பு போற்றுபவர்களும் வாழத்தான் செய்றாங்க என்றேன்.*

*நான் சொன்னதை கேட்டவர் "அட போங்க தம்பி நட்பாவது கிட்பாவது. இவனுங்க போற வீட்ல உள்ள ஆம்பளைக்கு வெளிநாட்ல இருக்கும் அவ மனுஷி தவறாம மாதா மாதம் பணம் அனுப்புவா. அந்த பணத்துல இவன்கள் எல்லாம் சேர்ந்து பார்ட்டி போட்டு கூத்தடிக்கத்தான் போறானுக" என்றவர், மனைவியை வெளிநாட்டிற்கு அனுப்பி விட்டு அவளின் உழைப்பாலும் தியாகத்தாலும் வரும் பணத்தினை இப்படி சொரணையில்லாமல் உதாரித்தனமாய் குறுகிய விஷயங்களுக்காக செலவழிக்கும் இளைஞர்களை என்ன செய்வது என நொந்துக்கொண்டார். இளைஞர்களே சற்று சிந்தித்துப் பாருங்கள்.*

• • •

புதிய நீதி
Puthiya Neethi
පුදිය නීදි
முரசம் 03, ஜனவரி-பெப் 2014, பக்கம் 16, விலை ரூ.30. முழக்கம் 08

இல. 15/4இ மகிந்தாராம வீதி, கல்கிசை
தொ.பேசி: 0716 745 642, 0779 774 427 தொ.நகல்: 0112 473 757
WEB: www.ndpsl.org Email: puthiyaneethi2012@gmail.com

# மக்கள் பிரச்சினைகளைத் திசை திருப்பும் ஜெனிவாத் தீர்மானம்

நாட்டின் பொருளாதார நிலை மேன்மேலும் மோசமடைந்து செல்கிறது. மகிந்த ராஜபக்ச சகோதரர்களது ஆட்சி பெற்று வரும் பாரிய கடன்களுக்கு வட்டியும் முதலுமாகச் சேர்த்து நாட்டு மக்களே இறுக வேண்டியுள்ளது. ஒவ்வொரு இலங்கையரும் இன்று மூன்றரை லட்சம் ரூபாவிற்குப் பொதுக் கடனாளியாக இருக்கின்றனர். அதைவிட, ஒவ்வொரு தனி மனிதரும் குடும்பமும் வங்கிகள், நிதி நிறுவனங்கள், லீசிங் கம்பனிகள், அடகுக் கடைகள் போன்றவற்றிற்குக் கடனாளிகளாக இருக்கிறார்கள். அத்துடன் அன்றாடம் அதிகரித்துச் செல்லும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளால் தேவையான, போசாக்கு மிக்க உணவுகளைப் பெறமுடியாது அவதியுறுகிறார்கள். உணவுக்கு மட்டுமன்றி உடை, இருப்பிட, கல்வி, சுகாதாரத் தேவைகட்கு முன்னிலும் பன்மடங்கு பணம் செலவிட வேண்டியுள்ளது. அதேவேளை, வேலை வாய்ப்புக்கள் அருகி வருவதுடன் பாடசாலைகள் முதல் பல்கலைக் கழகங்கள் வரை கல்வி முடித்தவர்கள் தமக்கேற்ற வேலை வாய்ப்பில்லாது வேலையற்றோர் பட்டியலில் சேர்ந்து வருகிறார்கள். அவர்கட்கு வேலை வாய்ப்பை வழங்கக் கூடிய பொருளாதாரத் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

நவகொலனித்துவத்தின் கீழான நவ தாராள பொருளாதாரக் கொள்கையாலேயே இன்று நாடு வழிநடத்தப் படுகிறது. அதனால், உணவுப் பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை தாராள இறக்குமதி மூலம் திறந்த சந்தையிற் குவிக்கப்பட்டுள்ளன. நகரங்களின் பெரும் வர்த்தக நிறுவனங்கள் முதல் குக்கிராமக் கடைகள்வரை மேற்படி பொருட்கள் பரவிக் கிடக்கின்றன. எங்கும் எதிலும் நுகர்வுப் பண்பாடே ஊக்குவிக்கப் படுகிறது. உலகமயமாதலின் திறந்த சந்தையும் தாராள இறக்குமதியும் கொண்டுவந்த இந் நுகர்வுப் பண்பாடு மக்களை வாட்டி வதைக்கிறது. தாங்கள் பெறக்கூடிய சம்பளத்தையோ கூலியையோ கொண்டு தமது வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாத இக்கட்டான நிலையிலேயே மக்கள் உள்ளனர். நகரங்களில், ஐந்து பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு மாதம் 47,000 ரூபா தேவைப்படுகிறது. அரசாங்க ஊழியர்களது ஆரம்ப அடிப்படைச் சம்பளம் 11,000 ரூபா மட்டுமே. உதாரணமாக, ஒரு ஆசிரியரோ ஒரு லிகிதரோ சராசரியாகப் பெறும் ஆகக் கூடிய சம்பளம் ரூபா 25,000 வரையே ஆகும். அதிலும் ஓய்வூதியம் அல்லது சேமலாப நிதிக்கும் கடன்களுக்கும் கழிவுகள் போகக் கைக்கு வரும் பணம் மிகக் குறைந்த தொகையேயாகும். எனவே அரசாங்க, தனியார் துறையினர் மட்டுமன்றி அன்றாடத் தொழில் செய்வோரும் கடனாளிகளாகவே இருந்து வருகின்றார்கள். இந் நிலையில் தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள் மற்றும் அன்றாடத் தொழில் செய்து வாழ்வோரின் வாழ்க்கை நிலை மிக மோசமாகி வருகிறது. நாட்டின் மீதும் மக்களின் மீதும் திணிக்கப்பட்டுள்ள நவதாராள பொருளாதாரக் கொள்கையே இதன் அடிப்படைக் காரணமாகும்.

இவ்வாறு நாட்டின் ஒட்டு மொத்த உழைக்கும் மக்களையும் பொருளாதர நெருக்கடி பற்றிப் பிடித்து நெருக்கி வருகின்ற அதேவேளை, நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணாது "பிச்சைக்காரனுக்குப் புண் தேவைப்படுவது" போன்று ஆட்சி அதிகாரத்திற்கு வரவும் அதில் நீடித்து இருக்கவும் தேசிய இனப் பிரச்சினையின் தீர்வின்மை ஒரு வரப்பிரசாதமாக இருந்து வருகிறது. யுத்தம் முடிவுற்றுக் கடந்த நான்கரை ஆண்டுகளில், தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாத அதே வேளை, பேரினவாத ஒடுக்கு முறை புதிய புதிய வழிகளில் ராணுவ இருப்புடன் முன்னெடுக்கப் படுகிறது. ராஜபக்ச சகோதரர்களது ஆட்சியும் அவர்களது வழிகாட்டலிலான அரசாங்கமும் பேரினவாத அமைப்புக்களும், சிங்கள பௌத்த பேரினவாதப் பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்றன. அவற்றை எதிர்த்து நிற்கவோ வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்கவோ இயலாத நிலையிலேயே தமிழ்த் தரப்புத் தலைமைகள் இருந்து வருகின்றன. தமது வாக்கு வங்கிக்கு சேதம் ஏற்படாத அளவிற்குப் பேரினவாதத்தை எதிர்ப்பதாகக் காட்சி தருவதற்கு அப்பால், ஒடுக்கப்படும் தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்களுக்கு உறுதியான ஒரு வெகுஜனப் போராட்ட அரசியல் வேலைத் திட்டத்தை வகுத்துத் தலைமைதாங்கத் தமிழர் தரப்புக் கட்சிகட்கு முடியவில்லை. தெற்கே சிங்கள பௌத்த பேரினவாத ஒடுக்குமுறை என்றால் வடக்கு-கிழக்கில் குறுந் தமிழ்த் தேசியவாதம் முன்னெடுக்கப்படுகிறது. வெளித் தோற்றத்திற்கும் மேலெழுந்தவாரியாகவும் பார்க்கும் போது, தமிழ்த் தரப்புத் தலைமைகள் தமிழ் மக்களுக்காகப் பேசுவது போன்று தென்படும். ஆனால் அடிப்படையில் அவர்களிடத்தில் பழைமைவாத உயர் வர்க்க மேட்டுக்குடி ஆதிக்க அரசியலே தொடர்ந்தும் மேலோங்கி நிற்கிறது. இதனைக் கண்ணெதிரே காண்பதற்கு அமைவாக, வரலாற்றால் புறக்கணிக்கப்பட்ட ஜீ.ஜீ. பொன்னம்பலமும் எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் அவரவர் சாமாதிகளில் இருந்து வெளியே கொண்டு வந்து நிறுத்தப்படுகின்றனர். அவர்களது காலத்திலேயே நடைமுறைச் சாத்தியமற்றுக் காலாவதியாகிப்போன மலட்டுக் கொள்கைகள் பற்றி மீண்டும் உரத்து வாசிக்கப்படுகிறது. இது ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனத்தை மீண்டும் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் முயற்சியேயாகும்.

இவற்றிடையே தெற்கில் ராஜபக்ச சகோதரர்களது ஆட்சி ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் வரப்போகும் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் காட்டித் தமது ஆட்சி அதிகார இருப்பிற்கான வலுப்படுத்தல்களைச் செய்து வருகிறது. அதன் அடிப்படையிலேயே தெற்கு, மேற்கு மாகாண சபைகட்கான தேர்தல், ஜெனீவாக் கூட்டத் தொடர் முடியும் தறுவாயில் நடத்தப் படுகிறது. எனவே ஜெனீவாவில் அமெரிக்கா கொண்டுவர உள்ள தீர்மானம் மகிந்த ராஜபக்ச சகோதரர்களது ஆட்சிக்குப் பயன்படக் கூடிய ஒரு வாய்ப்பான அரசியற் கருவியாகும். அதேவேளை, ஜெனீவாத் தீர்மானத்தை ஆதரிப்பதாகக் கூறிவரும் தமிழ்த் தரப்புக்கட்குப் புலம் பெயர்ந்தோரிடம் இருந்து பணம் பருவ மழைபோற் சொரியும். ஆனால் ஜெனீவாத் தீர்மானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கும் தமிழ் மக்களுக்கு வெறும் ஏமாற்றமே எஞ்சக் கூடியதாகும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

எவ்வாறாயினும் ஒன்று மட்டும் தெளிவாகிறது. ஜெனீவாத் தீர்மானம் என்பது சிங்கள தமிழ் மக்களை அவர்களது பிரச்சினைகளிலிருந்து திசைதிருப்புவதற்கு ஏற்ற ஒரு கருவியாகவே பயன்படுகிறது. இதனை நாட்டின் அனைத்து மக்களும் ஆழ்ந்து சிந்திப்பது அவசியமாகும்.

# ஜே.வி.பி. தன்னை மாற்றியுள்ளதா?



**தாங்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளைக் கவனிக்கப் போவதாகவும் தங்கள் மீது பொய்யாகச் சுமத்தப்பட்ட இனவாதக் குற்றச்சாட்டை நீக்கப் போவதாகவும் புதிய தலைவர் கூறி இருக்கிறார். அவ்வாறாயின் தேசிய இனப் பிரச்சினை பற்றியும். அதற்கான அரசியல் தீர்வு பற்றியும் தெளிவான நிலைப்பாட்டை ஜே.வி.பி முன்வைக்குமா?**

*வெகுஜனன்*

அண்மையில் ஜே.வி.பி. எனப்படும் ஜனதா விமுக்தி பெரமுன (மக்கள் விடுதலை முன்னணி) தனது ஏழாவது மாநாட்டை நடத்தியது. பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸநாயக்கா அதன் புதிய தலைவராகத் தெரிவானார். ஜே.வி.பி. தனது ஐந்து அம்சக் கொள்கை அறிக்கையையும் வெளியிட்டுள்ளது. அதிக அளவுவிற் பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றும் வழிவகைகட்கான கொள்கைகளே அதிற் கூறப்பட்டுள்ளன. அதேவேளை, கடந்த காலங்களிற் பின்பற்றிய கொள்கைகள், நடைமுறைகள், போராட்டங்கள், அழிவுகள், தோல்விகள் பற்றி எதுவும் பேசப்படவில்லை. மறைந்த அதன் தலைவர் ரோகண விஜயவீர அறுபதுகளின் பிற்பகுதியில் ஜே.வி.பி.யை ஆரம்பித்து இளைஞர்கள், யுவதிகள் மூலம் அதிதீவிர ஆயுதக் கிளர்ச்சியை முன்னெடுத்தார். 1971லும் 1988-89லுமான இரு கிளர்ச்சிகளில் சுமார் ஒரு லட்சம் சிங்கள இளைஞர்களும் யுவதிகளும் இரத்தவெள்ளத்தில் கொன்றழிக்கப்பட்டனர். முற்றாகவே அழித்துவிட்டதாக ஆளும் வர்க்க சக்திகள் எக்காளமிடப்பட்ட போதும், ஜே.வி.பி. பாராளுமன்றப் பாதையூடே மீண்டும் வளர்ச்சி பெற்றது. அதனிடம் இன்றுவரை சிவப்புக் கொடிகளும் அரிவாள் சம்மட்டியும் குறுந்தடிகளும் இருந்து வருகின்றனவே ஒழிய, மாக்சிச லெனினிசம் என்பது இல்லாதாகவே காணப்படுகிறது. ஆனால் ஜே.வி.பி. இன்னமும் தன்னை இடதுசாரிக் கட்சியாகவே அடையாளப்படுத்துவதால் அதன் தவறான கொள்கைகள் நடைமுறைகள் யாவற்றையும் சிங்கள, தமிழ் பிற்போக்குவாதிகள் தமது இடதுசாரி எதிர்ப்புக்குப் பயன்படுத்துகின்றனர்.

புதிய தலைவராகத் தெரிவாகியுள்ள அனுரகுமார திஸாநாயக்கா தமிழ் ஊடகங்கட்கு வழங்கிய நேர்காணலில் ஜே.வி.பி. ஒரு இனவாதக் கட்சியல்ல என்று கூறி இருந்தார். வெறுமனே இனவாதம் இல்லை எனக் கூறி ஜே.வி.பி. தப்பிக் கொள்ள முடியாது. ஆரம்ப முதலே அதனிடம் அதிதீவிரவாதமும் பாராளுமன்ற சந்தர்ப்பவாதமும் இருந்துவந்தது போன்று, இனவாதமும் இருந்து வந்தது. அதன் முதல் வெளிப்பாடு அவர்கள் இளைஞர்கட்கு எடுத்த ஐந்து அரசியல் வகுப்புகளில் தெரிந்தது. மலையக மக்களான தோட்டத் தொழிலாளர்கட்கு எதிராக முன்வைத்த ஆரம்ப இனவாதக் கருத்துக்கள் வடக்கு கிழக்கு யுத்தத்தின் உச்ச கட்டம் வரை நீடித்தன. இப்போது அமைச்சராக இருந்து வரும் விமல் வீரவன்ச ஜே.வி.பி.யின் பிரச்சார செயலாளராக இருந்தபோது கக்கி வந்த இனவெறிக் கருத்துக்கள் தனியே அவருடையன மட்டுமல்ல. யுத்தம் சரியாக நடத்தப்படவில்லை என்று மகிந்த அரசின் மீது குற்றஞ்சுமத்தி நின்றதும் இதே ஜே.வி.பி. தான். ஒரு மாக்சிச இடதுசாரிக் கட்சி தேசிய இனங்கள் பற்றியும் அவர்களது தனித்துவ உரிமைகள் சம்பந்தமாகவும் கொண்டிருக்க வேண்டிய அடிப்படை அணுகுமுறைக்கும் நடைமுறைக்கும் நேர் எதிராகவே ஜே.வி.பி நடந்து கொண்டது. தேசிய இனப்பிரச்சினை என ஒன்று இலங்கையில் இல்லை என்ற நிலைப்பாட்டையே ஜே.வி.பி. இன்றும் கொண்டிருக்கிறது. இது மகிந்த சிந்தனைக்கும் ஜாதிக ஹெல உறுமய சிந்தனைக்கும் சமமானதாகும். அதனாலேயே 2005ம் ஆண்டில் மகிந்த சிந்தனையை உருவாக்கிய ஆட்சி அதிகார வேலைத்திட்டத்திற்கு ஜே.வி.பி. பங்களிக்க முடிந்தது.

ஜே.வி.பியின் அதிதீவிர ஆயுதக் கிளர்ச்சி மூலம் எதிரி வர்க்கத்தினருக்கும் ஏகாதிபத்திய சக்திகட்கும் எதிர்மறை நிலையில் உதவியது. அறுபதுகளில் இலங்கையின் சனத் தொகையில் 65 வீதமானவர்கள் இளைஞர் யுவதிகளாகக் காணப்பட்டனர். அன்றைய சர்வதேச புரட்சிகர எழுச்சிச் சூழலில் இவ் இளைஞர்கள் ஆளும் வர்க்கத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிர்காலச் சவாலாக மாறும் அபாயம் இருந்தது. எனவே இலங்கையில் அதிகரித்துக் காணப்பட்ட உழைக்கும் வர்க்க இளந்தலைமுறையினரை எந்த வகையிலேனும் அழிவுக்கு உட்படுத்ததும் தேவை ஆளும் வர்க்கத்தினருக்கும் ஏகாதிபத்தியவாதிகட்கும் இருந்தது. ஜே.வி.பி அதைக் கச்சிதமாகச் செய்து முடித்தது. இலங்கையின் சமூக அமைப்பை மாற்றியமைக்கக்கூடிய சரியான மூலோபாயத்தையும் உறுதியான போராட்டத் தந்திரோபாயத்தையும் முன்வைக்க முடியாது, தனியே இளைஞர்-யுவதிகளை ஆயுதபாணியாக்கிப் போராட்டத்தை முன்னெடுத்தமை பாரிய அழிவுகளையே ஏற்படுத்தியது. இதே வழிமுறையைத் தான், வடக்கு கிழக்கில் தமிழ் இளைஞர்கள் நவீன ஆயுதங்களுடன் முன்னெடுத்து ஏகாதிபத்திய, இந்திய மேலாதிக்க சக்திகளின் உள்ளார்ந்த நோக்கங்கட்கு உதவினர். இப் பெரிய அரசியல் வரலாற்றுத் தவற்றை ஜே.வி.பி. என்றுமே சுய விமர்சனத்துக்கு உட்படுத்தியதில்லை. மேலும் பாராளுமன்றப் பாதையில் ஆளும் தரப்பில் பங்காளியாகி அமைச்சர் பதவிகளும் பெற்று நாட்டிற்கும் மக்களுக்கும் சோஷலிச சேவை புரியலாம் என்று குறுக்குவழியிற் செயற்பட்டனர். விரைவாகவே அவை யாவும் தோல்வி கண்டதுடன் தாம் பெற்ற பாராளுமன்ற ஆசனங்களையும் இழந்தனர். சந்திரிகா அம்மையார் மகிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் கூட்டுச்சேர்ந்த ஜே.வி.பி., பின்பு, இலங்கையின் ராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகாவுடன் கூட்டுச் சேர்ந்தே ஒரு சில பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. இன்றைய பாராளுமன்ற உறுப்புரிமை ஜே.வி.பி.யின் பெயரில் இல்லை என்பது கவனிக்கத்தக்கது.

தாங்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளைக் கவனிக்கப் போவதாகவும் தங்கள் மீது பொய்யாகச் சுமத்தப்பட்ட இனவாதக் குற்றச்சாட்டை நீக்கப் போவதாகவும் புதிய தலைவர் கூறி இருக்கிறார். அவ்வாறாயின் தேசிய இனப் பிரச்சினை பற்றியும், அதற்கான அரசியல் தீர்வு பற்றியும் தெளிவான நிலைப்பாட்டை ஜே.வி.பி முன்வைக்குமா? சிங்கள மக்கள் மத்தியிலான தமது வாக்கு வங்கிக்குத் தீங்கு ஏற்படாது

12>>

# வடமாகாண சபையும் சர்வதேச விசாரணைத் தீர்மானமும்

*மோகன்*

வடமாகாண சபைக்கு எவ்வளவு அரசியல் அதிகாரம் இருக்கிறது என்று எனக்கும் தெரியும் உங்களுக்கும் தெரியும். அங்கே நாற்காலிகளில் அமர்ந்திருக்கிறவர்கட்கும் அது தெரியும். நாற்காலி கிடைக்காதவர்கட்கும் அது நன்றாகத் தெரியும். ஆனாலும் "ஆளும் கட்சியினர்" தங்களால் என்னென்னவோ எல்லாம் ஆகும் என்று இன்னமும் மக்களுக்குச் சொல்லிவருகிறார்கள். அதேவேளை, அவர்கள் ஆள்வதை விரும்பாத எதிர்க்கட்சியினர் அவர்களால் எதுவும் ஆகாது என்று கூவுவதற்கும் மேலாக, அவர்களால் ஆகக்கூடிய அற்பசொற்ப காரியங்களையும் தடுப்பதற்குத் தம்மாலான அத்தனையையும் செய்தும் வருகிறார்கள்.

எந்தச் சனநாயகவாதியும் முழு வடக்கிலும் கிழக்கிலும் அரச நிருவாகம் ஆயுதப் படையினரின் தலையீடின்றி நடப்பதை வரவேற்க வேண்டும். ஆனால் ஆயுதப் படையினரின் தயவில் தங்கள் அதிகாரத்தைத் தக்க வைத்திருப்பவர்கட்கு அது இயலாது. குடாநாட்டு மக்கள் கருத்துச் சுதந்திரத்தை 1970களிலேயே மெல்ல மெல்ல இழக்கத் தொடங்கி விட்டனர். இயக்கங்களின் ஆயுதக் கலாசாரமும் அரச படைகளின் அட்டூழியங்களும் சேர்ந்து தொடக்கி வைத்த ஒரு வன்முறைச் சூழல், முதலில் மக்களை அரசியலில் வெறும் பார்வையாளர்களாக்கிப், பின்பு எதையுமே பார்க்க விரும்பாதவர்களாகவும் ஆக்கியது. அரசியல் அலுத்து வெறுத்துப் போயிருந்த வடபகுதி மக்கள் சென்ற ஆண்டு வடமாகாண சபைத் தேர்தலில் த.தே. கூட்டமைப்பிற்கு வழங்கிய பெருவெற்றி கூட்டமைப்பின் வாக்குறுதிகளை நம்பியோ கூட்டமைப்பினரின் நம்பகத்தன்மையாலோ கிடைக்கவில்லை. வடபிரதேச மக்களை மிகவும் கேவலமாக திறந்த சிறைக் கைதிகளைப் போல நடத்தும் ஆயுதப் படைகளின் கெடுபிடிகளுக்கும் பெருகிவரும் குற்றச்செயல்களுக்கும் அவற்றிற்குத் துணை நிற்கும் ஆட்சிக்கும் எதிராகவே வடபுல மக்கள் வாக்களித்தார்கள். ஏழரை ஆண்டுக்கால மகிந்த சிந்தனை ஆட்சியின் கீழ் அனுபவித்தது போதும் என்று சொல்லி வாக்களித்தார்கள்.

1977இல் அரசாங்கத்தின் பாராபட்சத்தின் மீதான வெறுப்பால் மக்கள் அளித்த ஆணையைத் தமிழீழத்துக்குரிய அங்கீகாரம் என்று சிலர் இன்னமும் சொல்லி வருகிறார்கள். ஆனால் அன்று போல 2013 ஆண்டின் ஆணையும் எந்த வாக்குறுதியும் நிறைவேறும் என நம்பி வழங்கப்படவில்லை. தம்மால் இயலாத விடயங்களைச் சொல்லித் தேர்தல் பிரசாரத்தை நடத்திய த.தே. கூட்டமைப்பு ஆப்பிழுத்த குரங்கு போல நழுவ இயலாமற் தடுமாறுகிறது.

13வது சட்டத்திருத்தப்படி தனக்குக் கிடைக்க வேண்டிய அதிகாரங்கட்காக வடமாகாண சபை போராடுவது சரியானது. ஆனால் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு அப்பால் வடமாகாண சபையால் எதையும் செய்ய இயலாது. செய்யக் கூடிய ஆற்றலும் அதற்கோ அதன் பிரமுகர்கட்கோ இல்லை. மாகாணசபை ஆளுநர் ஒரு முன்னாள் படையதிகாரியாக இருப்பது ஏற்கத்தக்கதல்ல. மக்களாற் தெரிவு செய்யப்பட்ட ஒரு சபையை மக்கள் எங்கும் தெரிவு செய்யாத ஒரு முன்னாள் ராணுவ அதிகாரி கட்டுப்படுத்துவது சபையின் சீரான இயக்கத்துக்குக் கேடானது. எனினும் இப் பிரச்சினைகள் ஒரு அரைச் சர்வாதிகார அரச நிறுவனத்திற்குத் தனது இருப்புடன் தொடர்புடைய பிரச்சினைகளாகத் தெரிகின்றன. எனவே அவற்றுக்கான தீர்வுகளை முன்னெடுப்பதானால், அவை வடமாகாண சபையின் அதிகார வரையறைகட்குள் இயலாதன என்று விளங்கவேண்டும். அரசாங்கம் வடமாகாண சபையின் செயற்பாடுகளிற் சட்ட விரோதமாகக் குறக்கிடுகிறதென்றால் அதற்கு நீதிமன்ற மூலம் தீர்வை நாடலாம். ஆனால் இன்று நீதித் துறையை நம்பி எவ்வளவு தூரம் போக இயலும் என்பது வேறொரு கதை. எனவே வடமாகாண சபை தனது தீர்மானங்கள் மூலம் எதையும் சாதிக்க விரும்பினால் அதற்கு வேண்டிய ஆதரவை வடமாகாண மக்கள் நடுவிலும் நாடளாவிய முறையிலும் வெல்ல வேண்டும்.



நியாயமான தீர்மானங்களின் நடுவே கூட மாகாண சபைக்கு நோக்கங் கற்பிக்க காத்திருப்பவர்கட்கு வாய்ப்பான முறையில் நிறைவேற்றும் பயனற்ற தீர்மானங்கள், வட மாகாண சபையையும், த.தே. கூட்டமைப்பையும் மட்டுமன்றி அனைத்துத் தமிழ் மக்களையும் பாதிக்கக் கூடியவை. போரின்போது நடந்த கொடுமைகள் பற்றிய முறையான விசாரணை ஒன்று தேவை என வலியுறுத்துவது சரியானது. அது சர்வதேச விசாரணையாக இருக்கக் கோருவது வடமாகாண சபை நிறைவேற்ற உகந்த தீர்மானமல்ல. முதலாவதாகச் சர்வதேச சமூகம் என்பது அத்தகைய ஒரு விசாரணையை முன்னெடுக்குமாயின் அதற்குக் காரணம் தமிழ் மக்கள் மீதான அக்கறையாகாது. நமது தேசிய இனப் பிரச்சினையின் தீர்வு மீதான விருப்பும் ஆகாது. நிச்சயமாக அது எந்தத் தமிழ் அரசியற் தலைமையுமோ ஒரு அரசியல் அதிகாரமுமற்ற ஒரு மாகாண சபையுமே நிறைவேற்றும் தீர்மானத்தின் அடிப்படையிலுமாக இராது.

எனவே, அரசாங்கத்திற்கு எரிச்சலூட்டுவதற்கு மேலாக ஒன்றையும் சாதிக்காத ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதன் நோக்கமென்ன? யாரை மகிழ்விக்க அது நிறைவேறுகிறது என்று யோசித்தால் வெறும் தமிழ்த் தேசியவாத உணர்ச்சி அரசியலை முன்னெடுத்துத் தேசிய இனப் பிரச்சினையை மேலும் தூண்டிவிட விரும்புவோருக்காகவே அது முன்மொழியப்பட்டது என விளங்கும்.

மாறாக, அவ்வாறான ஒரு விசாரணையை உள்நாட்டில் குறிப்பிட்ட அரசியல் நோக்கங்கட்காக இயங்குவோரல்லாது பல்வேறு தரப்புக்கட்கும் ஏற்புடைய ஒரு விசாரணைக் குழுவைக் கொண்டு நடத்துமாறு வலியுறுத்தி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கலாம். அவ் விசாரணை, வெறுமனே அரசாங்கத் தரப்பின் மீறல்களை மட்டுமன்றி அனைத்து ஆயுதமேந்திய தரப்பினரதும் அரசியல் அதிகாரமுடையோரதும் செயல்களை விசாரிக்க வேண்டும் எனவும் இனப்பகையையும் இன வன்முறையையும் தூண்டும் முறையில் நிகழ்ந்த காரியங்களை விவாதிக்க வேண்டும் எனவும் அத் தீர்மானம் எடுத்துரைத்திருந்தால் தென்னிலங்கையிலும் அதற்கு ஒரு நம்பகம் ஏற்பட்டிருக்கும்.

மீளவும் போர் மூண்ட பின்பான சம்பவங்களை விசாரிப்பது ஏன் நமது உடனடித் தேவை என்பதை விளக்கிக் கற்ற பாடங்கள் ஆணைக் குழு தொடத் தவறிய விடயங்க ளைப் பற்றியும் சுட்டிக்காட்டி முழுமையான ஒரு விசாரணையை வற்புறுத்துவதையிட்டு யாரும் நியாய மாக ஆட்சேபிக்க இயலாது. இத்தனைக்கும் மேலாகச் சாட்சிகளின் பாதுகாப்பு சாட்சியங்கள் முறையாகவும் உரிய மரியாதையுடனும் கையாளப்பட வேண்டியமை போன்ற விடயங்களையும் வலியுறுத்த வேண்டியிருக்கும். சில பாதுகாப்பு உத்தரவாதங்களின்றி மக்கள் சாட்சியளிக்க விரும்பார்.

இப்போது அரசாங்கம் சர்வதேசத்தைக் கொஞ்சம் சாந்தப்படுத்தக் காணாமற் போனோர் பற்றிய விசாரணைகளைத் தொடங்கியுள்ளது. அந்த ஆணைக்குழு செய்ய வேண்டிய மேலதிகக் காரியங்கள் எவை என்று விளக்கமான ஒரு ஆலோசனையை முன்வைப்பதுடன் வடமாகாண சபை தனது குறுக்கீட்டை நிதானமாகவும் ஆக்கமாகவும் முன்னெடுத்திருந்தால் அதைப் பற்றிய பேரினவாதக் குற்றச்சாட்டுகட்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டிராது.

த.தே.கூவின் நோக்கங்கள் பற்றிய ஒரு கணிப்புமின்றி சில "இடது" அரசியல் அவதானிகளும் அரசியல்வாதிகளும் வடமாகாண சபையின் தீர்மானத்தை அங்கீகரித்துக் கருத்துரைத்துள்ளனர். சி.வி. விக்னேஸ்வரன் தேர்தலுக்கு முன்பு சொன்னதையே தான் இப்போது செய்கிறார் என்றும் வடமாகாண சபைத் தீர்மானம் மக்களின் மனநிலையையே வெளிப்படுத்துகின்றது என்றும் அத் தீர்மானம் மெச்சப்பட்டுள்ளது. அது போர்க்குற்றங்கள் பற்றி மட்டுமே பேசுகிறது. இனப்படுகொலை பற்றிப் பேசவில்லை என்று சில தமிழ் தீவிரவாத விமர்சனங்களும் எழுந்துள்ளன.

எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் எல்லாவிடத்தும் மக்களின் மனநிலையைப் பிரதிபலிக்கிற விதமாகவும் தேர்தல் வாக்குறுதிகளின் பிரகாரமும் தான் வடமாகாண சபையின் ஆளுந்தரப்பு நடந்து கொள்ளுகிறதா என்று விசாரிப்பது நல்லது. என்றைக்கு வடமாகாணசபை வடக்கிலும் கிழக்கிலும் மக்கள் வாழ்வாதாரங்களைச் சூறையாடும் விடயங்களில் உறுதியான ஒரு நிலைப்பாட்டை எடுக்கிறதோ அப்போதுதான் அதன் சொல்லுக்கு ஒரு பெறுமதி இருக்கும் என்பது எனது கணிப்பு.

• • •

# மன்னார் புதைகுழி யாருக்குச் சொந்தம்!

*மன்னார் நிருபர்*



யுத்தம் முடிந்து ஐந்து வருடங்கள் ஆகப் போகின்றன. ஆனால் அக் கொடிய யுத்தம் இழைத்த கொடுமைகள் தொடர்ந்து வெளிவந்து கொண்டே இருக்கின்றன. அதில் ஒன்றாகவே அண்மையில் அதிர்ச்சி தரும் வகையில் கண்டுகொள்ளப்பட்ட மன்னார்-திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி எலும்புக்கூடுகள் காட்சி தருகின்றன. அவை வெறும் காட்சிக்குரியன அல்ல. மக்களை அச்சுறுத்தக் கூடியனவாகும்.

இதுபோன்ற மனிதப் புதைகுழிகள் ஏற்கனவே இலங்கையில் தோண்டப்பட்டன. தெற்கே சூரியகந்த, வடக்கே செம்மணி, மலையகத்தின் மாத்தளை அந்த வரிசையில் இப்போது திருக்கேதீஸ்வரம். அடுத்து எங்கே தோண்டப்படுமோ என்ற பீதியே மக்கள் மத்தியில் நிலவி வருகிறது. ஏற்கனவே செம்மணி புதைகுழி விவகாரரம் பழைய கதையாகிவிட்டது. 1996ல் வடபகுதியில் 600 பேர் காணாமற் போயினர். செம்மணிப் புதைகுழி விவகாரத்தில், மாணவி கிரிசாந்தியும் அவரது தாயாரும் கூடச் சென்ற அயலவரும் செம்மணியில் கொன்று புதைக்கப்பட்டுப் பின் விசாரணையில் எலும்புக்கூடுகளாக மீட்கப்பட்டனர். அதன் பின் மேலும் சிலரது எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டு விசாரணைகளும் நடந்தன. பின்பு, அவை யாவும் கிடப்பிற் போடப்பட்டு யுத்தம் அவற்றை மறைத்தது. மாத்தளையில் 152 எலும்புக்கூடுகள் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்டன. அவை ஜே.வி.பி. கிளர்ச்சிக் காலத்தைச் சேர்ந்தவை என நம்பப்படுகிறது. வழமை போன்று விசாரணை கிடப்பில்தான்.

இந்நிலையில், திருக்கேதீஸ்வரத்தில் இதுவரை 72 வரையான எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. வழமை போன்று நீதி விசாரணை போன்ற தோற்றம் மட்டுமே காட்டப்படுகிறது. இப் புதைகுழிக்குக் காரணமானவர்கள் யார்? இப் பிரதேசத்தில் இந்திய ராணுவமும், புலிகள் இயக்கமும் ஏனைய இயக்கங்களும் கடைசியாக இலங்கை ராணுவமும் இருந்து வந்துள்ளன. அவர்கள் அனைவரும் ஆயுததாரிகள் மட்டுமன்றி வெவ்வேறு காரணங்கள் கூறி மக்களைக் கொன்றவர்கள். அந்த வகையில், இத் திருக்கேதீஸ்வரப் புதைகுழியானது இருந்த இடத்தில் கடைசியாக இலங்கை இராணுவத்தின் காவலரண்கள் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரும் காலப்பகுதிவரை இங்கு இருந்தமை குறிப்பிடக்கூடிய விடயமாகும். அதுமட்டுமன்றி, இப் பகுதியில் அமைந்திருந்த இராணுவ முகாம் மன்னாரில் அமைந்திருந்த பிரதான முகாமான தள்ளாடி இராணுவ முகாமுக்கு முன்னரங்கப் பாதுகாப்பு வழங்க அமைக்கப்பட்ட இடமாக இருந்துள்ளது. ஆனால் இலங்கை இராணுவம் தங்களுக்கும் இந்தப் புதைகுழிகளுக்கும் சம்பந்தமில்லையென அறிக்கை ஒன்றையும் விடுத்திருந்தது. பொலீஸ் ஊடகப் பேச்சாளர் இது புலிகளால் செய்யப்பட்டது என்றும் அறிக்கை விடுத்தார். எனவே உண்மை நிலை கண்டறியப்பட வேண்டும்.

மன்னார் மாவட்டத்தில் காணாமலாக்கப்பட்டவர்களின் விபரங்கள், எச்சங்கள் எவையும் உண்டா என்பதையும் மனித உரிமை அமைப்புக்கள், அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள் காணாமல் போனோரைக் கண்டறியும் அமைப்புக்கள் என்பன ஒன்றிணைந்து இந்த மனிதாபிமானமற்ற விடயத்தில் அக்கறையெடுத்து உண்மைகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வருதல் வேண்டும். ஆனால் அதற்கான முயற்சிகள் எதுவும் காணப்படவில்லை என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும்.

இலங்கை இராணுவத்தைப் பொறுத்தவரை இதுவரை எதுவித யுத்தக் குற்றங்களையும் இழைக்கவில்லை என்றே கூறி வருகின்றது. அந்த அடிப்படையில் இறுதி யுத்தத்தில் மக்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்டதற்கும், காணாமல் போகச் செய்யப்பட்டதற்கும், வடக்கில் சிறுவர் துர்ப்பிரயோகம் உட்படப் பெண்கள் மீதான பாலியல் வன்புணர்ச்சிகளுக்கும் தாம் பொறுப்பில்லை என்றால் இவ்வளவு அட்டூழியங்களையும் அநியாயங்களையும் இராணுவ கட்டுப்பாட்டில் இருந்த இடங்களில் யார் செய்தார்கள். இந்நிலையில் தான், ஜனாதிபதியானவர் ஒரே தேசம், ஒரே மக்கள், இன பேதம் வேண்டாம். மத பேதம் வேண்டாம் என்று மேடைகளில் பேசி வருகிறார். எனவே மன்னார்-திருக்கேதீஸ்வரம் புதைகுழி விடயம் சம்பந்தமாக நீதியான நேர்மையான உள்நாட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். மக்கள் அதற்கான அழுத்தங்களைப் பல்வேறு வெகுஜனப் போராட்டங்கள் மூலம் முன்னெடுக்க வேண்டும்.

• • •

# இரணைமடு குடிநீர்த்திட்டம்: நடப்பது என்ன?

மக்கள் குரலோன்

வடக்கின் மிகப்பெரியதும் அதிகளவு நீர் தேக்கக் கூடியதுமான கிளிநொச்சி மாவட்டத்தின் அதி முக்கிய நீர்ப்பாசனக் குளமான இரணைமடுவின் நீரைப் பற்றி வடக்குத் தமிழர்கள் மத்தியில் காரசாரமான விவாதிக்கப் படுகிறது. 5ம் நூற்றாண்டில் உருவான இக்குளம், 1902 தொட்டு 1920 வரையான காலத்தில் அன்றைய கொலனி ஆட்சியாளர்கள் புதுப்பித்துப் பெரிதாக்கப்பட்ட பாரிய நீர்ப் பாசனக் குளமாகும். அதன் மீளமைப்பின் நோக்கம் யாழ்ப்பாண மாவட்டத்தின் உணவுப் பாதுகாப்பு என்பதாகவே தெரிகிறது. அவ்வாறு உருவான ஒரு நீர்ப்பாசனத் திட்டம் இன்று வடக்கில் கடும் கருத்து மோதல்கட்கும் விவாதங்கட்கும் காரணமாக உள்ளது. இரணைமடு குடிநீர்த் திட்டத்தில் நடப்பது என்ன, யார் இலாபமடைவர், யார் நட்டமடைவர் என்ற கேள்விகட்கு அப்பால், இரணைமடுக் குள நீர் வழங்கல் திட்டத்தின் உண்மை நிலை பற்றிப் பார்ப்பது தகும்.



இரணைமடுக் குளம் மீளமைக்கப்பட்டு 94 வருடங்கள் ஆகின்றன. அதன் அணைக்கட்டின் நீளம் 3 கிலோ மீற்றர். அதன் கூறப்பட்ட நீர் கொள்ளளவு உயரம் 10 மீற்றர்(34 அடி) எனினும், உண்மையான நீர் கொள்ளளவு உயரம் 8.4 - 9.3 மீற்றர்(28 - 30 அடி) அளவிற்குள்தான் உள்ளது. இந் நீரைக்கொண்டு பூனகரி, பளை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகட்குச் சுத்தமான குடிநீரை வழங்கும் திட்டமாகவே திட்ட ஏற்பாட்டாளர்களான இலங்கை நீர்ப்பாசன அமைச்சும் அதற்கான நிதியளிப்பு நிறுவனமான ஆசிய அபிவிருத்தி வங்கியும் ஒரு குடிநீர்த் திட்டத்தை வரைந்துள்ளனர்.

ஆனால் இரணைமடு குளத்து நீரின் அடிப்படையில் யாழ்ப்பாணக் குடிநீர்த் திட்டத்தை முன்னெடுப்பதன் விளைவான சிக்கல்களையும் பிரச்சனைகளையும் ஏற்பாட்டாளர்கள் கவனிக்க வேண்டும். தற்போது இத் திட்டம் சம்மந்தமாக வட மாகாண முதலமைச்சர். சி.வி. விக்னேஸ்வரனுக்கும் கிளிநொச்சி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரனுக்குமிடையே உடன்பாடின்றி வாதப் பிரதிவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

இந் நிலையில், யாழ்ப்பாண மக்கட்கான குடிநீர்த் திட்ட நடைமுறைப்படுத்தலுக்கும் அப்பால், கிளிநொச்சி மாவட்ட மக்களும் விவசாயிகளும் குடிநீர்த் திட்டத்தை எதிர்க்கக் காரணம் என்ன என்பதை விசாரித்தால், இன்று தனி நிர்வாக மாவட்டமாக இயங்கிவரும் கிளிநொச்சி தேர்தல் தொகுதியைக் கொண்ட கிளிநொச்சி மாவட்டம், அடிப்படையில் ஒரு வரண்ட மாவட்டம் ஆகும். இம் மாவட்ட நிலத்தடி நீர் இரணைமடுக் குளத்தின் நீர்த்தேக்கத்தைச் சார்ந்தே அமைந்துள்ளது. அது மட்டுமன்றி அங்குள்ள மக்களின் பிரதான பொருளாதாரம் விவசாயமாகும். அங்கு இருபத்தெட்டாயிரம் ஹெக்ரயர் வயல் நிலங்கள் உள்ளன. அவற்றிற் காலபோகத்தில் இருபத்தோராயிரம் ஹெக்ரயரிலும் முக்கியமாகச் சிறு போகத்தில் ஆறாயிரம் ஹெக்ரயரிலும் நெற்செய்கைக்குக் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் இக் குளநீரையே நம்பி இருக்கின்றனர்.

இலங்கை நீர்ப்பாசன அமைச்சும் கடன் உதவி நிறுவனமான ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஏற்பாட்டாளர்களும் இரணைமடுக் குளத்தின் கொள்ளளவு உயரத்தை 0.6 மீற்றர் (இரண்டு அடி) உயர்த்திக் குளத்திலுள்ள மேலதிக நீரை யாழ்ப்பாணக் குடிநீர்த் திட்டத்திற்கு பயன்படுத்தலாம் என்கிறார்கள். ஆனால், அது சாத்தியமானதா? ஏனெனில் இரணைமடுக் குளத்து நீரை நம்பிச் சிறுபோகம் ஆறாயிரம் ஹெக்ரயர் மட்டுமே செய்கையாகிறது. நீர் மட்டத்தை இன்னும் இரண்டு அடி உயர்த்துவதால் மேலும் மூவாயிரம் ஹெக்ரயர் சிறுபோக நெற்செய்கை இயலுமே தவிர ஆறாயிரம் ஹெக்ரயர் சிறுபோக நெற்செய்கையைப் பதினாறாயிரம் ஹெக்ரயர் சிறுபோகமாக்க இயலாது என எதிர்ப்புத் தெரிவிக்கும் விவசாயிகள் சார்பிற் கூறப்படுகின்றது. இங்கு வட மாகாணச் சிறுபோகச் செய்கையில் 51 சதவீத நெற்செய்கையில் ஈடுபடும் கிளிநொச்சி மாவட்ட நெற்செய்கை வீழ்ச்சியடையின் ஏற்படத்தக்க விபரீத நிலைமையினையும் கருத்திற் கொண்டு விடயங்களை மிக அவதானமாக கையாளுதலும் அவசியம். யாழ்ப்பாண குடிநீர்த் திட்டம், யாழ்ப்பாண-கிளிநொச்சி பிரதேசவாத முரணுக்கு இட்டுச் செல்லுமோ என அஞ்சவும் இடம் உண்டு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இரணைமடு நீர்த் திட்டம் பற்றி நிகழும் எல்லை தாண்டிய கருத்து மோதல்கள் இவ்விடயத்தையும் சிந்திக்கத் தூண்டுகின்றன.

உண்மையாகவே, கிளிநொச்சி மாவட்ட நெற்செய்கை விவசாயிகட்குப் போதியதற்கும் மேலாகக் குளத்தில் நீர் இருப்பின் அதை யாழ்ப்பாணக் குடிநீர்த் திட்டத்துக்கு பயன்படுத்த ஆட்சேபனை இராது. ஆனால் அப்படி மேலதிகமாக நீர் இல்லை என்பதுதான் இன்றைய உண்மை நிலை. இக் கட்டுரை எழுதப்படும் வேளை வரை இரணைமடுக் குள நீரின் உயரம் 10 மீற்றரில் (34 அடியில்) இருந்து 2.5 மீற்றருக்கு (8 அடிக்கு) வீழ்ந்து விட்டது. இந்த இடத்திலிருந்து, இன்னொரு விடயத்தையும் ஆராய்தல் தகும். அதாவது ஆசிய அபிவிருத்தி வங்கி யாழ்ப்பாண குடிநீர்த் திட்டத்திற்கான இருபது பில்லியன் (2000 கோடி) ரூபா மில்லியன் கடன் வழங்குகிறது. அதனைக் கொண்டு அமையும் திட்டத்தால் யாழ்ப்பாண மக்களுக்குக் குடிநீர் கொடுக்க முடியாத நிலை வரும்போது அவர்கட்கான மாற்றுத் தீர்வு என்ன? இரணைமடு விவசாயிகளின் கருத்துப்படி இரணைமடுக் குளம் ஏழு ஆண்டுகட்கொரு முறை வற்றுகிறது. இரு முறை வான் பாய்கிறது. மூன்று ஆண்டுகள் வான் பாயாவிட்டாலும் அடியொட்ட வற்றாது. எனவே ஏழு ஆண்டுக்கு இரு முறை வரும் வரட்சியின் போது குடிநீருக்கு இரணைமடு குள நீரை நம்பியிருக்கும் யாழ்ப்பாண மாவட்ட மக்கள் எங்கே போவது என்ற இன்னுமொரு முக்கிய கேள்வியும் கேட்கப்படுகின்றது.

இக் கேள்விக்கு எதிர்ப் பதிலும் கூறப்படுகின்றது. அதாவது, தமிழீழ விடுதலைப் புலிகள் ஆதரித்த இரணைமடு யாழ்ப்பாண குடிநீர்த் திட்டத்தை தற்போதைய அரசியல்வாதிகள் ஏன் எதிர்க்கிறார்கள் எனக் கேள்விகள் எழுகின்றன. ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகள் அத் திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்த போது, யாழ்ப்பாணத்துக்கான குடிநீர்த் திட்டம் நீண்ட காலத் திட்டமாக அறிவிக்கப்படவில்லை என்பதுடன் அவர்கள் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐரோப்பிய ஒன்றியம் என்பவற்றுடன் முரண்படக் கூடாது எனும் காரணங்களினாலும் அவர்கள் அதை ஆதரித்திருக்கக்கூடும். எவ்வாறெனினும் அவர்களது பொருண்மியச் சூழல், நிலத்துறை நீர் பற்றிய ஆய்வறிஞர்கள் சூழலியலாளர்கள் என்போரைக் கலந்தாலோசித்தே அத்திட்டத்தைத் தீட்டியதாக அறியமுடிகிறது. எனவே அவர்கள் யாழ்ப்பாண குடாநாட்டு நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் திட்டமாகவே அதனை ஒப்புக் கொண்டார்களே தவிர நீண்ட காலத் திட்டமாக அதனைச் செய்ய உடன்படவில்லை என்றும் கூறப்படுகின்றது.

**இரணைமடுக் குளநீர் குடிநீர்த்திட்டம் சம்மந்தமாக நிலைப்பாடுகள் எப்படியிருப்பினும், முதலில் கிளிநொச்சி மாவட்ட நெல் உற்பத்தி பாதிக்கப்படாமல் இருப்பதுடன் கிளிநொச்சி மாவட்ட நிலத்தடி நீர் பாதுகாக்கப்படல் வேண்டும் என்பதை மறுக்கலாகாது. அதேவேளை, யாழ் குடாநாட்டு நிலத்தடி நீர் வளங்களைப் பாதுகாப்பதற்குரிய பொறிமுறை ஊடாக விவசாயிகள், சூழலியலாளர்கள், நீர்வள விற்பனர்கள் என்போருடன் இணைந்து உரிய வழிகளை வகுக்க வேண்டும்.**

இவ்விடத்து இன்னொன்றும் கருத்திற் கொள்ளத்தக்கது. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன நாட்டின் இயற்கை வளங்களைக் கொள்ளையடிப்பதிலும் அவற்றைத் தனியார்மயப்படுத்தி இலாபம் சம்பாதிப்பதிலும் முனைப்புடன் செயற்பட்டு வருவன. எனவே, தமது உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலில், யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வரும் சேவைத்துறை வளர்ச்சிகளை ஒட்டியும் புதிய தொழிற்சாலைகள், உணவகங்கள், உல்லாச விடுதிகள் என்பவற்றிற்கான தண்ணீர்த் தேவையையும் மையப்படுத்தியே யாழ்ப்பாணக் குடிநீர்த் திட்டத்தைச் செயற்படுத்த இலங்கை அரசும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் முன்வந்துள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளும் திறந்த பொருளாதார கொள்கையை ஏற்று நின்றமையால் அவர்களும் இரணைமடு குடிநீர்த்திட்டம் மூலம் தண்ணீர் தனியார் மயமாவதை ஆதரித்தமையில் வியப்பேதும் இருக்க முடியாது. ஏனெனில் தமது விடுதலையை ஏகாதிபத்திய துணையுடன் பெற முடியும் என்ற கனவை இத் திட்டத்தின் மூலம் உரமூட்டலாம் என விடுதலைப் புலிகள் எதிர்பார்த்திருக்கக் கூடும்.

எல்லாவற்றையும் தாண்டி யாழ் குடாநாட்டு நிலத்தடி நீரைப்பாதுகாப்பதற்கும் அவர்களது குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்வதற்குமான மாற்று வழி பற்றி ஆராய வேண்டும். அதாவது பிரித்தானிய ஆட்சிக் காலத்திலிருந்தே யாழ் குடாநாட்டு நிலத்தடி நீரை பாதுகாப்பதற்கான திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. 1879ஆம் ஆண்டு வடக்கின் அரச அதிபராயிருந்த டுவைனம் 1916ஆம் ஆண்டு இருந்த கோஸ்பேர்க் ஆகியோர் ஆனையிறவு நீரேரி, தொண்டமனாறு, நாவற்குழி உப்பு நீரேரிகளை நன்னீரேரிகளாக மாற்றுவதற்கான முன் மொழிவுகளைப் பரிசீலித்தனர். அதன் தொடற்சியாக 1930களில் அரசுப் பேரவை உறுப்பினராகவிருந்த பாலசிங்கமும் அதனை வலியுறுத்தினார். அதன் பின், நீர்ப்பாசனப் பொறியியலாளரான ச. ஆறுமுகம் யாழ்ப்பாணத்துக்கான நீர் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை 1950இல் சமர்ப்பித்தார். பிற்காலத்தில் அத் திட்டம் “பொறியியலாளர் ஆறுமுகம் திட்டம்” என அழைக்கப்பட்டது. பொறியியலாளர் ஆறுமுகத்தின் திட்டமானது மழை காலங்களிற் பெய்யும் மழை நீர் கடலுடன் சேராமலும் கடல் நீர் நன்னீருடன் கலக்காமலும் இருக்கத் தடுப்புச் சுவர்களை அமைத்து அதன் மூலம் யாழ் குடாநாட்டு நிலத்தடி நீரைப் பாதுகாப்பதாகவே அமைந்தது.

வட மாகாணத்தின் பெரு நிலப்பரப்பில் உருவாகி வடக்கு நோக்கிச் செல்லும் கனகராயன் ஆற்றைப் புளியங்குளம், மாங்குளம் ஊடாக இரணைமடுக் குளத்திற்குள் நிரப்பி, மேலதிகமாக வழிந்தோடும் நீரை ஆனையிறவு நீரேரிக்குள் சேர்ப்பதன் மூலம் ஆனையிறவு நீரேரியை நன்னீர் ஏரியாக மாற்றுதலும் ஆனையிறவு நீரேரியின் கிழக்குப் பகுதியை மண் அணை மூலம் கடலிலிருந்து வேறுபடுத்தி பின்பு முள்ளிவாய்க்காலில் இருந்து வரும் நீரினை இணைத்து வடமராட்சி நீரேரியுடன் அதன் வழியாக தொண்டமானாறு நீரேரியுடன் இணைத்து அவற்றையும் நன்னீர் ஏரிகளாக மாற்றுதலே பொறியியலாளர் ஆறுமுகத்தின் திட்டமாகும். இத் திட்டம், மிகக் குறைந்த செலவுடன் எந்த மக்கள் சமூகத்திற்கும் பாதிப்பின்றி யாழ்ப்பாணக் குடாநாட்டு நிலத்தடி நீரைப் பாதுகாத்தற்கான முன்மொழிவு ஆகும். அத்துடன் யாழ்ப்பாண விவசாயிகட்குப் போதிய நீர் முகாமைத்துவப் பயிற்சி வழங்க வேண்டும். நீர் மாசுபடல், நச்சுத் தன்மையடைதல், உவராதல் என்பவற்றைத் தவிர்க்க, எமது விவசாயிகள் கிருமி நாசினிகளையும் உரங்களையும் கைவிட்டு இயற்கை விவசாய முறைகளை பின்பற்றுமாறு அவர்கட்கு அறிவூட்டி மக்களிடையேயும் விவசாயிகளிடையேயும் பரந்த முறையில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பட்சத்தில், யாழ்ப்பாண குடாநாடு தனது நன்னீரைப் பாதுகாப்பதுடன், இரணைமடு குடிநீர்த் திட்டத்தை தவிர்ப்பதுடன் வேறு யாரிலும் தங்கியிராதவாறு யாழ்ப்பாண மக்களின் குடிநீர் பாவனையை இயலுமாக்க முடியும்.

அது மட்டுமன்றி, யாழ்ப்பாணக் குடாநாட்டினுட் காணப்படும் சிறு குளங்கள் குட்டைகள் என்பவற்றைப் பாதுகாத்து அவற்றுட் காணப்படும் மண்ணை அகற்றி நீரைச் சேமிப்பதும் நிலத்தடி நீரைப் பாதுகாத்தற்கான இன்னுமொரு முயற்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும். மழை நீரைச் சேமிப்பது அனைத்தினும் முக்கியமான விடயமாகும்.

இரணைமடுக் குளக் குடிநீர்த்திட்டத்தை மகிந்த சிந்தனை அரசாங்கம் ஆதரிக்கிறதென்றால், அதற்கு ஏதோ உள் நோக்கம் இருக்கிறது. தமிழர்கள் மத்தியில் அரசியற் பலவீனத்தைப் புகுத்தத் திட்டமிட்டு செயலாற்றுவதில் மகிந்த ராஜபக்ஷ வல்லவர். ஏனெனில் சுத்தமான குடிநீர் கோரிப் போராடிய வெலிவேரிய-ரத்துபஸ்வெல மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு மூன்று உயிர்களைப் பறித்து அப் போராட்டத்தையும் அடக்கி அப்பிரதேச சிங்கள மக்களின் குடிநீர்ப் பிரச்சனையை இதுவரை தீர்ப்பதற்கு ஆக்க பூர்வ நடவடிக்கை எதையும் மகிந்தரின் அரசு ஏன் எடுக்கவில்லை என்பது சிந்திக்க வேண்டியதாகும்.



இரணைமடுக் குளநீர் குடிநீர்த்திட்டம் சம்மந்தமான நிலைப்பாடுகள் எப்படியிருப்பினும், முதலில் கிளிநொச்சி மாவட்ட நெல் உற்பத்தி பாதிக்கப்படாமல் இருப்பதுடன் கிளிநொச்சி மாவட்ட நிலத்தடி நீர் பாதுகாக்கப்படல் வேண்டும் என்பதை மறுக்கலாகாது. அதேவேளை, யாழ் குடாநாட்டு நிலத்தடி நீர் வளங்களைப் பாதுகாப்பதற்குரிய பொறிமுறை வழிகளை விவசாயிகள், சூழலியலாளர்கள், நீர்வள விற்பன்னர்கள் என்போருடன் இணைந்து உரிய வழிகளை வகுக்க வேண்டும். இயலுமானவரை “பொறியியலாளர் ஆறுமுகத்தின் திட்டத்தைச்” செயற்படுத்தி வடபுல நிலத்தடி நீரைப் பாதுகாப்பது அவசியமாகும். அதை விடுத்து மக்கள் மத்தியில் நின்று, “எனது உயிர் போனாலும் இரணைமடு நீரைக் கொண்டு போக விடமாட்டேன்” என்று பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் சபதமிடுவதும் எப்படியும் இரணைமடு நீர் வேண்டும் என முதலமைச்சர் அடம் பிடிப்பதும் வடபுலத்து மக்கள் மத்தியில் குரோதம் விளையவே இடமளிக்கும். எனவே இப்பிரச்சனையை அவதானமாகக் கையாண்டு யாழ்ப்பாண, கிளிநொச்சி மாவட்ட மக்களினது குடிநீர், விவசாயப் பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டும். இதுவே நியாயம் வேண்டி நிற்கும் அனைத்து மக்களின் வேண்டுகோளாகும். • • •

# வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை

## 25

வெகுஜனன்

2008ம் ஆண்டின் நடுப்பகுதிக்குப் பின், வன்னிப் போர்க்களத்தில் குறிப்பிடத்தக்க ராணுவத் தாக்குதல்கள், நகர்வுகள், இடக் கைப்பற்றல்கள் இடம்பெற்று வந்தன. வன்னியின் மேற்குப் பிரதேசத்தில் நாச்சிக்குடாவை 21.08.2008ல் ராணுவம் கைப்பற்றியது. அதனைத் தொடர்ந்து மூன்று மாதங்களுக்கிடையில் புலிகளின் மிக முக்கிய கட்டுப்பாட்டுப் பகுதியாகவும் ராணுவ முக்கியத்துவம் மிக்க இடமாகவும் இருந்துவந்த பூனகரியை 15.11.2008ல் ராணுவம், கைப்பற்றியது. தமது பூனகரி ராணுவ நிலைகளில் இருந்தே புலிகள் பலாலி நோக்கித் தமது எறிகணை வீச்சை அவ்வப்போது நடாத்தி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அதே வேளை, ராணுவத்தினர், பலாலி படைத்தளத்திற்கு அருகில் இருந்த ஊரெழு எறிகணைத் தளத்திலிருந்து பூனகரிக்கும் ஏனைய புலிகளின் இலக்குகளுக்கும் பல்குழல் எறிகணைகளை ஏவிவந்தமை போர்க்கால ராணுவச் செயற்பாட்டில் முக்கியமானதாக இருந்து வந்தது.

வன்னியின் மேற்குப் பிரதேசத்திலிருந்து கிழக்கு நோக்கி முன்னேறுவதில் 58வது படையணி முனைப்புடன் இருந்தது. பூனகரி தன் வசமானதும் ராணுவத்தின் அடுத்த இலக்கு கிளிநொச்சியாகவே இருந்தது. ஏ-9 பாதையில் அமைந்திருந்த கிளிநொச்சி நகரத்தைக் கைப்பற்றுவது, இலங்கை ராணுவத்தைப் பொறுத்தவரை, யுத்த வெற்றியின் அரைப் பங்கை அடைவது போன்று இருந்தது. அதனால் கிளிநொச்சியைக் கைப்பற்றும் போர் மிகக் கடுமையாக இருக்கும் என்றே ராணுவத் தரப்பு எதிர்பார்த்தது. அவ்வாறு எடைபோடுவதற்கு வன்னிப் போர்க்களத்தில் கிளிநொச்சி புலிகளின் தலைநகரம் போன்று செயற்பட்டு வந்தமை முக்கியமானதாகக் கருதப்பட்டது. கிளிநொச்சியைத் தமது நிர்வாக மத்திய மையமாகப் புலிகள் கட்டியெழுப்பி வந்தமை பற்றி ஏற்கனவே ஆங்காங்கே இத் தொடரிற் கூறப்பட்டிருக்கிறது.

அத்தகைய கிளிநொச்சி, 02.01.2009ல் ராணுவத்திடம் வீழ்ச்சியடைந்தது. அதிற் குறிப்பிடவேண்டிய ஒரு விடயம் யாதெனில், ராணுவம் எதிர்பார்த்ததற்கு மாறாகப், புலிகள் கிளிநொச்சிக்கான போரை நடத்தவே இல்லை. அவர்கள் எவ்வித எதிர் தாக்குதலும் தொடுக்காது அங்கிருந்து விலகிச் சென்றனர். இது புலிகளின் யுத்ததந்திரப் பின்வாங்கல் என்றே பிரசாரப்படுத்தப்பட்டது. அதாவது 1995ம் ஆண்டின் "ரிவி ரச" ராணுவத் தாக்குதலுக்கு முகம் கொடுக்காது வலிகாமத்திலிருந்து தென்மராட்சிக்கும் பின்பு வன்னிப் பெருநிலப்பரப்பிற்கும் பின்வாங்கியது போன்றே கிளிநொச்சியிலிருந்தும் புலிகள் கிழக்கு நோக்கிப் பின்வாங்கிக் கொண்டனர். அவர்கள் கிளிநொச்சி மாவட்ட எல்லைக்கு அப்பால் முல்லைத்தீவின் எல்லைக்குள் தம்மை வைத்துக் கொண்டனர். அதாவது விசுவமடு, உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு போன்ற பகுதிகளுக்கு பின்வாங்கிச் சென்று தமது நிலைகளை வலுவாக்கிக் கொள்வதில் முனைப்புக் காட்டினர். விசுவமடுவில் புலிகளின் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனுக்குச் சகல வசதிகளும் பாதுகாப்பும் கொண்ட வீடு பாரிய செலவில் அமைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

அதேவேளை, முன்னேறி வந்த ராணுவம், விசுவமடுவின் ஒரு பகுதியோடு நின்றதுடன் தான் கைப்பற்றிய பகுதிகளை வலுப்படுத்திப் புலிகளின் எதிர்தாக்குதலை எதிர்கொள்ளத் தக்கவாறு நிலைகொண்டனர். இக் கட்டத்தில் புலிகளின் பின்வாங்கலுடன் மக்களும் இடம் விட்டு இடம் நகர்ந்த வண்ணம் இருந்தனர். முல்லைத்தீவின் கடற்கரைப் பகுதிகளையும் அதற்கடுத்த உட்கிராமங்களையும் உள்ளடக்கிய குறுகிய பிரதேசத்தில் சுமார் நாலு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இருந்தனர். இவ் எண்ணிக்கை, அப் பிரதேசத்தின் சூழலும் அங்குள்ள வளங்களும் மக்களின் தேவைகட்கு ஈடுகொடுக்க முடியாத நிலையை ஏற்படுத்தியது. போதிய தங்குமிட வசதியின்மையாலும் உணவு பெறுவதிற் பெருஞ் சிரமங்களாலும் மருத்துவ வசதி பெறமுடியாமையாலும் மக்கள் தமது அன்றாட வாழ்வைக் கழிப்பதிற் கடும் நெருக்கடிகளை எதிர் நோக்கினர். குறிப்பாகப் பெண்களும் குழந்தைகளும் முதியோரும் நோயாளிகளும் பெரும் துன்பங்களை அனுபவித்தனர். அதே வேளை, ராணுவப் பக்கத்திலிருந்து வந்த எறிகணை வீச்சுக்களாலும் விமானக் குண்டுத் தாக்குதல்களாலும் அவர்கள் உயிரிழப்புக்களையும் படுகாயங்களையும் சந்திக்க வேண்டியிருந்தது.

இந் நெருக்கடிச் சூழலில், 2009ம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து மக்கள் மத்தியில் புலிகளுக்கு எதிரான அதிருப்தி படிப்படியாக மேலெழும்பத் தொடங்கிற்று. அதே வேளை, நம்பிக்கையீனங்களும் வளர ஆரம்பித்தன. அதற்குப் பல காரணங்கள் இருந்தன. புலிகள், தமது நிர்வாகக் கட்டமைப்பில் கவனமாக இருந்தளவுக்கு மக்கள் எதிர் நோக்கிய உணவு உடை தங்குமிடம் போன்ற பிரச்சினைகளுக்கு வழியமைத்துக் கொடுக்கத் தவறியது. புலிகளை நம்பிச் சென்ற மக்கள் விரைவாக விரக்தி நோக்கித் தள்ளப்பட்டனர்.

அதேவேளை, புலிகள் இயக்கம் ராணுவத்தை எதிர்கொள்வதில் பல்வேறு உள்ளாந்த நெருக்கடிகளை எதிர்நோக்கியது. குறிப்பாக, குறிப்பிடக்கூடிய அளவு ஆயுத பலம் இருந்து வந்தபோதிலும் அதைப் பயன்படுத்தக்கூடிய ஆட்பலம் இல்லாதிருந்தது. புலிகளின் போர் இழப்பை ஈடு செய்யக் கூடியளவுக்கு ஆளணிக்குப் பற்றாக்குறை காணப்பட்டது. ஆதலால் வீட்டுக்கு ஒருவர் என்ற முந்திய நிலை வீட்டுக்கு இருவராக மாற்றப்பட்டு இளைஞர் யுவதிகளை வலுக் கட்டாயமாகப் பிடித்துச் செல்லும் வழிமுறையைப் பயன்படுத்துவதில் புலிகள் தீவிரமாக இருந்தனர். இதனால் மக்களுக்கும் புலிகளுக்கும் கடும் முரண்பாடுகளும் சில சந்தர்ப்பங்களில் புலிகளுடன் மோதும் நிலைக்கு மக்கள் முன்வந்த சம்பவங்களும் இடம் பெற்றன. பல குடும்பங்களும் பெற்றோரும் தமது

> புலிகள் இயக்கம் ராணுவத்தை எதிர்கொள்வதில் பல்வேறு உள்ளாந்த நெருக்கடிகளை எதிர்நோக்கியது. குறிப்பாக, குறிப்பிடக்கூடிய அளவு ஆயுத பலம் இருந்து வந்தபோதிலும் அதைப் பயன்படுத்தக்கூடிய ஆட்பலம் இல்லாதிருந்தது. புலிகளின் போர் இழப்பை ஈடுசெய்யக் கூடியளவுக்கு ஆளணிக்குப் பற்றாக்குறை காணப்பட்டது. ஆதலால் வீட்டுக்கு ஒருவர் என்ற முந்திய நிலை வீட்டுக்கு இருவராக மாற்றப்பட்டு, இளைஞர் யுவதிகளை வலுக் கட்டாயமாகப் பிடித்துச் செல்லும் வழிமுறையைப் பயன்படுத்துவதில் புலிகள் தீவிரமாக இருந்தனர்.




பிள்ளைகளைப் புலிகளிடம் பறிகொடுத்துப் பரிதவிப்பவர்களாகக் காணப்பட்டனர். "உங்களை விட ராணுவத்தினர் பரவாயில்லை" என்று கூறும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டனர்.

இச்சூழலில் இராணுவத்தினர் புலிகளின் பக்கத்தில் நின்ற மக்களைத் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் வருமாறு வேண்டுகோள் விடுத்தபடி இருந்தனர். மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதற்காகக் கிளிநொச்சிக்குக் கிழக்கேயும் உடையார்கட்டிற்கு மேற்காகவும் உள்ள தேவிபுரத்தில் முப்பத்தி ஐந்து சதுர கிலோமீற்றர் பிரதேசம் அரசாங்கத்தால் "பாதுகாப்பு வலயம்" எனப் பிரகடனம் செய்யப்பட்டது. மக்களை அப் பாதுகாப்பு வலயத்திற்கு வருமாறு ராணுவம் பிரச்சாரத்தை முன்னெடுத்தது. அதன் மூலம், புலிகள் இயக்கம் மக்களைக் கட்டாயப்படுத்தி மனிதக் கேடயமாகப் பயன்படுத்துவதாக அரசாங்கம் பரப்புரை செய்துவந்தது. அதேவேளை, புலிகள் இயக்கம் மக்களுக்கு நம்பிக்கை தரும் வகையிலான பரப்புரைகளைத் தமது தொடர்பு சாதனங்கள் மூலம் செய்து வந்தனர். தாங்கள் பலமிழக்கவில்லை என்ற விதமாகவும் ராணுவம் மிகப் பெரும் அழிவை எதிர் நோக்கப் போகிறது என்ற விதமாகவும் தீவிர பரப்புரைகள் இடம் பெற்று வந்தன. அதே நேரத்தில் புலம் பெயர்ந்த மேற்குலக நாடுகளில் புலிகள் இயக்கத்தினர் புலிகள் வெற்றி பெறப் போகிறார்கள் என்றும் போதிய நிதிவளம் தேவை என்றும் கூறி ஒவ்வொரு குடும்பமும் தனி நபர்களும் கட்டாயம் இரண்டாயிரம் ஈரோக்கள் (இலங்கை ரூபாவில் மூன்று லட்சம்) தர வேண்டும் என வற்புறுத்திப் பணந் திரட்டினர். அவ்வாறு தர மறுப்பவர்கள் இலங்கை திரும்பும்போது சிக்கல்களுக்கு உள்ளாவர் என்றும் மிரட்டிப் பணம் பெற்றுக் கொண்டனர். புலிகளின் தோல்விக்குப் பின் இவ்வாறு கறந்த பணத்திற்கு என்ன நடந்தது என்று இன்றுவரை எவருக்குமே தெரியாத மர்மச் சூழலே நிலவுகிறது.

முல்லைத்தீவின் குறுகிய பிரதேசத்தில் புலிகளின் கட்டுப்பாட்டு எல்லைகளுக்குள் மக்கள் உணவுக்கும் மருந்துக்கும் இருப்பிடத்திற்கும் அல்லற்பட்டு அலைந்த வேளையில் புலிகளிடம் போதியளவு பணப் புழக்கம் இருந்தது. அவர்களே அடகுக்கு தங்க நகைகளைப் பெற்றுப் ப்ணம் கொடுத்தனர். வியாபாரங்களில் ஈடுபட்டு பொருட்களை அதிக விலையில் மக்களுக்கு விற்று வந்தனர். வெளி நாடுகளுக்குத் தொலை தொடர்பை ஏற்படுத்தி நிமிடத்திற்கு நூறு இருநூறு முன்னூறு ரூபா வென வசூலித்தனர்.

வெளிநாடுகளில் இருந்து உறவினர்கள் நண்பர்கள் அனுப்பிய உண்டியல் பணத்தை மாற்றிக் கொடுப்பதிலும் புலிகளே அதிகார அங்கீ காரம் பெற்றவர்களாக இருந்தனர். இவ்வாறான செயல்கள் மூலம் தங்களை நம்பி வந்த மக்களுக்கு உதவ வேண் டும் என்ற மக்கள் சார்பு எண்ணமோ செயற்பாடோ புலிகளிடம் காணப்படவில்லை. ஒரு உண்மையான விடு தலை இயக்கத்திற்கு இருக்க வேண்டிய மக்கள் மீதான அக்கறையோ மக்களைப் பேணுவதோ புலிகள் இயக்கத்திடம் காணப்படாமலே இருந்து வந்தது.

அதேவேளை, ராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு மக்கள் செல்லத் தொடங்கினர். 2008இன் ஆரம்பத்தில் சுமார் 7000 மக்கள் அங்கு சென்றடைந்ததாக ஒரு தகவல் கூறியது மறுபுறத்தில், ராணுவத்தின் மீது கடும் எதிர்த் தாக்குதலுக்கு வியூகம் அமைப்பதில் புலித் தளபதிகள் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில், தெற்கில் மறைந்திருந்த புலிகள், வன்னிக்கு வெளியே கவனத்தைத் திருப்பும் சிவிலியன் இலக்குகள் மீதான தாக்குதல்களைத் தொடுத்தனர். இதில் ஒன்றாக 2009 பெப்ரவரி 21ம் திகதி கிழக்கு மாகாண அம்பாறை மாவட்டத்தின் கரமிட்டிய கிராமத்தில் தம்மை அடையாளம் காட்டாத ஆயுததாரிகள் நடாத்திய கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் பதினாறு விவசாயிகள் கொல்லப்பட்டனர். இதில் பெண்கள், வயோதிபர், குழந்தைகள் உள்ளடங்குவர். இக் கொலைக்குப் புலிகள் இயக்கமே காரணம் என்பது விரைவாகவே வெளிப்பட்டது.

மற்றொரு வகைத் தாக்குதலாகப், புலிகளின் இரண்டு சிறிய ரக விமானங்கள் கொழும்புத் துறைமுகத்தையும் விமானப்படைத் தலைமையகத்தையும் இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தின. ஆனால், அவை இரண்டும் இலக்குத் தவறின. விமானத்தைச் செலுத்திவந்த தற்கொலைப் புலிகள் வெடிகுண்டுகளுடன் கட்டிடங்களில் மோதி அழிவுற்றனர். இம் முயற்சிகள் புலிகளிடம் விமானப்படை ஒன்று இருக்கிறது என்ற ஊகம் உண்மையென உறுதிப்படுத்தின. அதன் பின்பு, புலிகளின் தற்கொலைத் தாக்குதல்கள் சில கொழும்பு நகரத்தில் இடம்பெற்றன. கொழும்பில் மறைந்திருந்து புலிகள் இயக்க நடவடிக்கையில் ஈடுபட்டவர்களே அவற்றை முன்னெடுத்து வந்தனர். இத் தாக்குதல்களில் சாதாரண சிங்கள தமிழ் மக்களே கொலைக்கும் படுகாயங்களுக்கும் உள்ளானார்கள். தமிழ்க் குறுந்தேசியவாத வக்கிரம் கொண்டோர் இத்தகைய தாக்குதல்களை நியாயப்படுத்தி உள் நாட்டிலும் புலம் பெயர்ந்த நாடுகளிலும் வீரப் பிரசாரம் செய்து வந்தனர். ராணுவ ஒடுக்கு முறையை எதிர்த்து நின்ற தமிழ் மக்களில் பெரும் பான்மையானோரும் இடதுசாரி ஜனநாயக முற்போக்குச் சக்திகளும் சிவில் இலக்குகள் மீதான இத்தகைய புலிகளின் தாக்குதல்களை நிராகரித்தனர்.

12>>>

# இலங்கையில் ஏகாதிபத்தியமும் சிங்கள தமிழ்த் தேசியங்களும்

சி.கா.செந்திவேல்

கடந்த இதழ்த் தொடர்ச்சி...

சுதந்திரம் என்றழைக்கப்படும் ஆட்சி அதிகாரக் கையளிப்பின் ஊடாகச் சிங்கள பௌத்த பெரும் தேசியவாத சக்திகள் பலம் பெறுவதற்கும் ஏகாதிபத்திய சக்திகள் வழிவகுத்து நின்றன. சிங்கள மக்களிடையே ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் முப்பதுகளின் ஆரம்பத்திலிருந்து இடதுசாரி இயக்கத்தினாலே முன்னெடுக்கப்பட்டது. அந்த இயக்கத்தின் செல்வாக்கு சிங்கள மக்களிடையே கணிசமான தாக்கங்களையும் ஏற்படுத்தி வந்தது. மக்களிடையே குறிப்பாகத் தொழிலாளர்கள் மற்றும் உழைக்கும் மக்களிடையே சமசமாஜ - கம்யூனிஸ்ட் இடதுசாரி இயக்கத்தினர் வெகுஜன இயக்கங்கள் போராட்டங்களை முன்னெடுத்து வந்தமையானது கனதி மிக்கவையும் வரலாற்று முக்கியத்துவம் கொண்டவைகளுமாகும். இவர்களது இடதுசாரி இயக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாடு பாராளுமன்றத்திற்கான ஆரம்பகாலத் தேர்தல்களிலும் பிரதிபலிக்கச் செய்தது.

ஆனால் இவ் இடதுசாரி இயக்கத்தின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தும் வகையில் சிங்கள மக்களிடையேயான தரகு முதலாளித்துவ சக்தியான ஐக்கிய தேசியக் கட்சியைப் பாதுகாத்து வளர்த்து ஆட்சி அதிகாரத்தில் வைத்திருப்பதில் ஏகாதிபத்தியம் முன்னின்றது. அக்கட்சி சிங்கள பௌத்த பெருந் தேசியவாத நிலைப்பாட்டை இறுகப்பற்றி முன்னெடுத்த போது ஏகாதிபத்தியம் அதற்குப் பின்புல ஆதரவு வழங்கி நின்றது. இங்கே ஒரு விடயம் கவனிக்கத்தக்கதாகும். தரகு முதலாளித்துவ ஏகாதி பத்திய அடிவருடிக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி யில் இருந்து எஸ்.டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்கா தலைமையில் தேசிய முதலாளித்துவக் கட்சியாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி உருவாக்கிய போது தம்மளவிலான ஏகாதிபத்திய எதிர்ப்பை எல்லைக்குட்பட்ட வகையில் கொண்டிருந்தது. அதே வேளை சிங்கள பௌத்த பெரும் தேசியவாதத்தை முனைப்படுத்தி முன்னெடுத்தும் கொண்டது. அத்தகைய நிலைப்பாடானது ஏகாதிபத்தியத்திற்கு எதிர்மறையாக உதவிக் கொண்டது. உதாரணமாக 1956ல் தனிச் சிங்களச் சட்டத்தைத் தேசிய முதலாளித்துவக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி கொண்டுவந்தபோது ஏகாதிபத்திய சக்திகள் அக மகிழ்ந்தனர். ஏனெனில் அச்சட்டம் நாட்டின் சிங்கள தமிழ் மக்களிடையே குறிப்பாக உழைக்கும் மக்களைப் பிரித்து வைக்கும் ஒன்று என்பதை ஏகாதிபத்தியம் தூர நோக்கில் கண்டு கொண்டது மட்டுமன்றித் தமது விரோதிகளான இடதுசாரி சக்திகளை அது பலவீனப்பத்தும் என்றும் நம்பினர். அவர்களது நம்பிக்கை வீண் போகவில்லை. இதனைக் கடந்த கால இலங்கையின் இடதுசாரி இயக்க அரசியல் வரலாறு நிரூபித்துக் கொண்டது.

இவ்வாறு சிங்கள பௌத்த பெருந்தேசியவாதம் ஏகாதிபத்தியத்தை எதிர்க்காத அதேவேளை ஏகாதிபத்தியமானது சிங்கள பௌத்த பெரும் தேசியவாதத்தின் தேசிய இனங்கள் மீதான ஒடுக்குமுறைக்குப் பின்புலமாகவும் ஆதரவாகவும் இருந்து வந்துள்ளது. இதனை முப்பது வருட கால தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தின் போது தெளிவாகக் காண முடிந்தது. ஏகாதிபத்தியத்தை ஆதரித்து நின்றதில் அரசியல் சக்திகள் மட்டுமன்றி பௌத்த மதப் பண்பாட்டு நிறுவனங்களும் ஏகாதிபத்தியத்தைச் சார்ந்தே இருந்து வந்துள்ளன. ஒரு சில இடதுசாரிச் சிந்தனை கொண்ட பௌத்த குருமார் எப்போதும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த நிலைப்பாட்டுடன் இருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இப்போதும் கூட சில குறிப்பிட்ட பௌத்த மதத்தின் பெயரிலான அமைப்புகளும் அதன் தலைமைப் பிக்குகளும் ஏகாதிபத்தியப் பின்புலத்துடன் செயல்பட்டு வருவதான பலத்த சந்தேகங்கள் கிளப்பப்பட்டே வருகின்றன.

எனவே இலங்கையில் தங்களைத் தக்க வைத்துக் கொள்வதற்கும் தமது பொருளாதார அரசியல் நலன்களைப் பாதுகாப்பதற்கும் ஏகாதிபத்தியம் சிங்கள பௌத்த பெரும் தேசியவாத சக்திகளுடன் இணைந்திருந்து வந்துள்ளமைமை, வரலாற்றத் தெளிவுடன் காணக் கூடியதாகும். இவ்வாறு ஏகாதிபத்தியமும் பெரும் தேசியவாதமும் கைகோர்த்து இணைந்து பயணிக்கும் சூழலில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து முறியடிக்க முற்படுவதாகக் கூறும் எந்தவொரு நேர்மையான இடதுசாரி சக்திகளும் பெரும் தேசியவாதத்தை உரியவாறு அடையாளம் கண்டு நிராகரிக்கவும் எதிர்க்கவும் முன்வரல் வேண்டும். அல்லாதுவிடின் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது அர்த்தமற்ற வெற்றுக் குரலாகவே இருக்கும்.

இவ்வாறான நிலையில் சிங்கள பௌத்த பெரும் தேசியத்தின் இன ஒடுக்குமுறையினை எதிர்ப்பதாகக் கூறி முன்னெழுந்த தமிழ்த் தேசியமானது தமிழ்க் குறுந் தேசியவாதமாகவே வளர்ச்சி பெற்றது. ஆனால் தமிழ்த் தேசியத்தை முற்போக்ககான கூறுகளின் அடிப்படையில் ஒரு பத்து ஆண்டுகள் மட்டுமே யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் என்னும் அமைப்பினால் முன்னெடுக்க முடிந்தது. அதனிடம் ஏகாதிபத்திய எதிர்ப்பும் தேசியத் தன்மைகளும் காணப்பட்டன. இருந்த போதிலும் அவ் அமைப்பினால் பத்து ஆண்டுகளுக்கு மேல் நீடித்து நிற்க முடியவில்லை. அதனைப் பழைமைவாதத் தமிழ் தேசிய வாதம் முறியடித்துக் கொண்டது. அன்றிலிருந்து இன்றுவரை தமிழ்த்தேசியம் என்பது பழைமை வாதக் குறுந்தேசியவாதப் பாதையிலேயே பயணித்து வந்துள்ளது. தெற்கின் சிங்கள பௌத்த பெரும் தேசியவாதத்தை எதிர்ப்பதாகக் கூறி இனவாதம், இனவெறி, மொழிவெறி, இனப் பழைமை, மதம், பண்பாடு என்பனவற்றை முன்னிறுத்தியே அரசியல் அரங்கில் தமிழ்த் தேசியமானது செயல்பட்டு வந்துள்ளது. தமிழ் மக்களிடையே இருந்து வந்த நிலவுடைமை வழிவந்த மேட்டுக்குடி உயர்சாதிய ஆதிக்க சக்திகளே அன்றும் இன்றும் தமிழ்த் தேசியவாதத்தின் பெயரிலான அரசியல் தலைமைத்துவமாக இருந்து வருகிறார்கள். இத்தலைமையானது ஒட்டுத்தமொத்த உழைக்கும் சிங்கள மக்களையும் இன மொழி மதக் காழ்ப்புணர்வுடன் எதிர்த்து வந்த அதே வேளை சிங்கள உயர் வர்க்க மேட்டுக்குடியினருடன் ஐக்கியம் பூண்டு வந்தனர். அத்துடன் மற்றிரு சமூகங்களாகவும் இன்று தேசிய இனங்களாகவும் இருந்து வரும் முஸ்லீம், மலையகத் தமிழர்களை ஒதுக்கியும் புறந்தள்ளியும் வந்துள்ளமை தமிழத் தேசியத் தலைமையிடம் காணக் கூடியதாகவே உள்ளது. இத்தலைமை ஒருபோதும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்றதும் இல்லை, உலகின் எந்தவொரு ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை ஆதரித்ததும் கிடையாது. இதில் உள்ள குறிப்பான விடயம் யாதெனில் அகிம்சைப் போராட்டம் நடாத்திய வேளைகளிலும் ஆயுதப் போராட்டம் முன்னெடுத்த கால கட்டத்திலும் தமிழ்த் தேசியத்தின் குறுந் தேசியவாத நிலைப்பாடானது ஏகாதிபத்தியத்தையும், அதன் சகபாடியான இந்திய பிராந்திய மேலாதிக்கவாதிகளைச் சார்ந்தும் எதிர்பார்த்துமே இருந்து வந்தனர் என்பதாகும். தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையையும் அதன் ஊடாகத் தாம் வைத்திருக்கும் தமிழீழப் பிரிவினையையும் ஏகாதிபத்தியவாதிகள் வென்றெடுத்துத் தருவார்கள் என்ற் எதிர்பார்ப்பிலேயே அன்றும் இன்று இருந்து வந்துள்ளனர். ஆனால் அமெரிக்க மேற்குலக ஏகாதிபத்திய சக்திகள் அவ்வப் போது தமது சுயரூபத்தை வெளிக்காட்டிவந்தனர்.

**“கடந்த நூற்றாண்டின் எண்பதுகளில் இருந்து, தான் வகுத்த நவ–தாராள பொருளாதார அரசியல் கொள்கைகளை உலக நாடுகளில் திணித்து வந்த ஏகாதிபத்தியம் உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலைக் கச்சிதமாக முன்னெடுத்து வந்துள்ளது. அதன் கீழேயே தாராளமயம், தனியார்மயம், உலகமயமாதல் என்பன அனைத்து நாடுகளிலும் கட்டாயமாகத் திணிக்கப்பட்டன. நவகொலனியத்துக்கு உள்ளான நாடுகள் மட்டுமன்றி, முன்னாள் சோஷலிச நாடுகளும் அதனை உள்வாங்கிக் கொண்டன.”**

2009ம் ஆண்டு இறுதி யுத்தத்தின்போது முள்ளிவாய்க்காலின் பல்லாயிரக்கணக்கான சாதாரண தமிழ் மக்களது பேரழிவுகளுக்கு அவர்கள் வழங்கிய பங்களிப்பை மறந்து இப்போது மீளவும் தமிழ் தேசியவாதத் தலைமைகள் ஏகாதிபத்தியத்தின் மீதான நம்பிக்கையினைக் கொண்டிருக்கும் அரசியல் அவலத்தைக் காண்கிறோம். அது மட்டுமன்றி வல்லமையான ஒரு ராணுவ அமைப்பாக இருந்து வந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்ட பின்பும் அந்த அழிப்பிற்கு சகல வகைகளிலும் உதவிகளும் ஒத்துழைப்புகளும் வழங்கிய அமெரிக்க மேற்குலக ஏகாதிபத்தியவாதிகளை இன்றும் மீட்பர்களாக எதிர்பார்த்து நிற்கும் தமிழ்க் குறுந் தேசியவாதத் தலைமையினையே வடக்கில் காண்கின்றோம். தமிழ்த் தேசியவாதிகளிடம் ஏகாதிபத்திய எதிர்ப்பு மருந்திற்கும் இல்லாதது போன்றே தெற்கின் சிங்கள உழைக்கும் வெகுஜனங்கள் மீதும் எதுவித கரிசனையோ அக்கறையோ அனுதாபமோ இல்லாத போக்கை ஆரம்பம் முதலே தமிழ்த் தேசியவாதிகள் பின்பற்றி வந்துள்ளனர். சிங்கள பௌத்த பெரும் தேசியத்தைக் கடைப்பிடிப்போருக்கும், சாதாரண தொழிலாளர்கள் விவசாயிகளான சிங்கள வெகுஜனங்களுக்குமிடையிலான வேறுப்பாட்டைப் பிரித்துப் பார்க்காது இனக்குரோத இனவெறிப் பார்வையில், எல்லாச் சிங்கள மக்களையும் நிராகரித்து நிற்பதில் இன்றும் தமிழ்த் தேசியம் படுபிற்போக்கான வர்க்க நிலைப்பாட்டையே கொண்டிருக்கிறது. இத்தகைய அரசியல் ஆதிக்கத்தின் ஊடாகவே தமிழ் மக்கள் குறுந்தமிழ் தேசியத்தால் திசை திருப்பப்பட்டு அழிவுகளுக்கும் அவலங்களுக்கும் உள்ளாகி வந்த அரசியல் வரலாறே மீண்டும் மீண்டும் தொடர்கிறது.



நன்றி: https://www.facebook.com/Awantha.artigala

**“இவ்வாறான நிலையில் சிங்கள பௌத்த பெரும் தேசியத்தின் இனஒடுக்குமுறையினை எதிர்ப்பதாகக் கூறி முன்னெழுந்த தமிழ்த் தேசியமானது தமிழ்க் குறுந்தேசியவாதமாகவே வளர்ச்சி பெற்றது. ஆனால் தமிழ்த் தேசியத்தை முற்போக்ககான கூறுகளின் அடிப்படையில் ஒரு பத்து ஆண்டுகள் மட்டுமே யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸினால் முன்னெடுக்க முடிந்தது. அதனிடம் ஏகாதிபத்திய எதிர்ப்பும் தேசியத் தன்மைகளும் காணப்பட்டன. இருந்த போதிலும் அவ் அமைப்பினால் பத்து ஆண்டுகளுக்கு மேல் நீடித்து நிற்க முடியவில்லை. அதனைப் பழைமைவாதத் தமிழ் தேசியவாதம் முறியடித்துக் கொண்டது”**

இவ்வாறு தெற்கிலே சிங்கள பௌத்த பெரும் தேசியவாதம் அல்லது பேரினவாதம் எனப்படுவதும் வடக்குக் கிழக்கில் தமிழ்க் குறுந்தேசியவாதம் என்பதும் ஒன்றுக்கு ஒன்று நேரெதிராக இருந்து வருவது போன்றே காட்சி கொடுத்து நிற்கிறது. இதற்குத் தலைமை தாங்கும் இருபுறத்து சிங்கள தமிழ்த் தேசியவாத சக்திகள் வர்க்க, சாதிய நிலையில் நிலவுடைமை வழியிலான உயர்வர்க்க உயர் சாதிய மேட்டுக்குடித் தலைமையைக் கொண்டதாகவே இருந்து வருகின்றன. மேற்கூறியவற்றில் அவர்களிடையே வர்க்க ஒற்றுமையும் ஒத்த இயல்புகளும் நடைமுறைகளும் உண்டு. அதன் அடிப்படையில் அவர்கள் மேற்கூறிய நிலைப்பாடுகளில் இணங்கிக் கொள்ளும் அதே வேளை ஏகாதிபத்தியத்தைத் தொழுது நிற்பதிலும் தமது விசுவாசத்தைக் கொண்டிருப்பதிலும் இருதரப்பு தேசியவாதிகள் எனப்படுவோர் சிங்கள தமிழ் வேறுபாடுகளுக்கு அப்பால் ஒரே தளத்திலேயே இருந்து வருகிறார்கள். இத்தகைய இருபுறத்து சிங்களத் தமிழ்த் தேசியவாத சக்திகளும் தத்தம் இன மொழி மத மக்களை ஏமாற்றுவதில் முன்னின்றும் வருவதைக் காண முடியும்.

இச்சூழலில் முழு இலங்கையையும் விழுங்கி அனைத்து மக்களையும் தமது ஆதிக்கத்திற்கு கொண்டு வர நிற்கும் ஏகாதிபத்தியத்தையும் அதன் மூலோபாயாப் பங்காளியான இந்திய பிராந்திய மேலாதிக்கத்தையும் அம்பலப்டுத்தி எதிர்த்து மக்கள் மத்தியில் பரந்துபட்ட எழுச்சியும் போராட்டங்களும் தோற்றுவிக்கப்பட வேண்டும். இதற்கு நாட்டின் நேர்மையான இடதுசாரி இயக்கங்களும் ஜனநாயக முற்போக்கு சக்திகளும் தம்மை அர்ப்பணித்து முன் செல்ல முன்வரல் வேண்டும். இதுவே இன்றைய தேவையாகும்.

• • •

# இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு 44

**இமயவரம்பன்**


ஜே.ஆர். ஜயவர்த்தன திட்டமிட்டுச் செயலாற்றுபவர் என்பதில் எவரும் உடன்படுவர். அவருடைய திட்டங்கள் நிறைவேறாமற் போனதுண்டு. நிறைவேறிய திட்டங்கள் கொடிய நீண்டகால விளைவுகளை ஈந்ததுமுண்டு. எனினும், எந்தவொரு நோக்கத்திற்கும் தடையாக அமையக்கூடிய எதையும் தவிர்ப்பதில் அவர் மிகுந்த கவனம் காட்டியுள்ளார். சர்வ வல்லமையுள்ள சனாதிபதியாகத் தன்னை நிறுவக்கூடிய ஒரு அரசியல் யாப்புக்குப் பாராளுமன்றத்தினுள் எவ்விதமான தடைக்கும் வாய்ப்பிருக்கவில்லை. அதை விடவும் தன்னைப் பகைத்து அல்லது மீறி எவரும் செயற்பட்டால் அவரைப் பாராளுமன்றத்திலிருந்து கழற்ற அவர் ஏலவே ஒப்பமிட்ட பதவி விலகற் கடிதம் ஜயவர்த்தனவிடம் இருந்தது. எனவே ஜயவர்த்தனவுக்குத் தடையாக அமையக்கூடிய ஒரே நிறுவனமாக இருந்தது உயர் நீதிமன்றம் மட்டுமே. அதைக் கட்டிப் போடுவதற்கான நடவடிக்கையை முன்கூட்டியே எடுப்பதால் அரசியல் யாப்பின் நிறைவேற்றத்தின் தொடர்பிலும் பின்னர் அதன் நடைமுறைப்படுத்தலின் தொடர்பிலும் எழக்கூடிய சட்டப் பிரச்சினைகளைத் தவிர்க்கவோ முறியடிக்கவோ இயலும் என்பது அவருடைய கணிப்பு.

நீதித் துறை பலகாலமாக நேரடி அரசியற் குறுக்கீடுகட்கு அப்பால் இயங்கி வந்தது. அதில் வர்க்கச் சார்புகளும் தனிமனிதக் குறைகள் சார்ந்த குற்றங்கள் இருந்தபோதும், வழக்குகள் முதல் நீதிபதிகளின் நியமனங்கள் வரை, அது நேரடியான அரசாங்கக் குறுக்கீட்டை ஏற்கவில்லை. ஏற்கப்பட்ட விதி முறைகட்கமைய நீதித்துறைப் பணிக்கால மூப்பின் அடிப்படையில் நீதிபதிகள் முதல் உயர் நீதிமன்ற நீதவான்களும் நீதியரசரும் வரை நியமிக்கப்பட்டனர். எனினும், காலத்துக்கு ஒவ்வாத பத்தாம் பசலித்தனங்கள் பலவும் நீதித்துறையில் இருந்தன. அவற்றிற் சிலவற்றை நீக்குவதற்கு 1970-77 காலத்தில் எடுத்த நடவடிக்கைகள் அடிப்படை யில் முன்னேற்றமானவையாயினும் நீதித் துறை நியமனங்களில் அரசியற் குறக்கீடு இருந்ததாகக் கூறப்பட்டது. எவ்வாறாயினும், நீதித் துறையின் அடிப்படை நியமங்கள் மீறப்பட்டதாகக் கூற இயலாது.

1977இல் ஆட்சிக்கு வந்த பின்பு ஜயவர்தன செய்த முக்கிய காரியமொன்று, புதிய நீதியரசராகத் தன்னுடைய நம்பிக்கைக்குரியவரும் நண்பருமான நெவில் சமரக்கோனை நியமித்தமையாகும். இந்த நியமனம் வழமைக்கு முரணானது என்று ஆட்சேபங்கள் எழுந்தன. அது சட்டவிரோதமானதல்ல எனினும் அதன் பின்னால் வரவிருந்த நீதித்துறை ஒழுங்கீனங்கட்கு அது அச்சாரமிட்டது. அதே நெவில் சமரக்கோன் 1984இல் ஜயவர்தனவுடன் முரண்பட்ட காரணத்தால், அவரது பதவி நீக்கத்திற்காக மிக ஒழுங்கீனமான முறையில் பாராளுமன்றத்தில் ஒரு சட்டமியற்றப்பட்டதை இங்கு குறிப்பிடலாம். நெவில் சமரக்கோன், விசாரணையைத் தவிர்த்துத் தானாகவே பதவி விலகினார். அந்தச் சட்டத் திருத்தமே, சென்ற ஆண்டு நீதியரசரைப் பதவி நீக்க மேலும் ஒழுங்கீனமான முறையிற் பயன்பட்டது.

1978இன் புதிய அரசியல் யாப்பு சனாதிபதியை எந்த விதமான நீதி விசாரணைக்கும் அப்பாற்பட்டவராக்கியது. அதைவிட, நீதித் துறையினருக்கு முன்னனைய ஏற்பாட்டில் இருந்த சில பாதுகாப்புக்களையும் விலக்கியது. இவற்றை நெவில் சமரக்கோன் கண்டு கொள்ளவில்லை. அத்துடன் நில்லாது, புதிய அரசியல் யாப்பைச் சட்டமாக்கிய கையோடு, ஜயவர்தன, பழைய உயர் நீதிமன்ற நீதவான்கள் பன்னிரண்டு பேரையும் பதவி நீக்கி அவர்களில் ஐந்து பேரை மட்டும் மீள நியமித்தார். புதிதாக நியமிக்கப்பட்ட ஏழு பேரும் மூப்பின் அடிப்படையில் நியமிக்கப்படவில்லை என்பது முக்கியமானது. அதையிட்டு நெவில் சமரக்கோன் மறுப்புக் கூறவில்லை.

சனாதிபதி ஜயவர்தனவின் விருப்புத் தெரிவுகளான உயர் நீதிமன்ற நீதவான்களைக் கொண்டு அவர் எத்தகைய காரியங்களைச் செய்யக்கூடுமெனப் பலராற் கற்பனை செய்ய இயலவில்லை. 1981ம் ஆண்டு முன்னாட் பிரதமர் சிரிமா பண்டாரநாயக்கவினதும் முன்னாள் நீதி அமைச்சர் ஃபிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கவினதும் குடியியல் உரிமைகளை 7 ஆண்டுகட்குப் பறித்து அவர்களைப் பாராளுமன்றத்திலிருந்து விலக்குவதற்கு ஒரு "நீதி விசாரணையை" நடத்தி ஜயவர்தன விரும்பியவாறே ஒரு தீர்ப்பை வழங்கிய பெருமை புதிதாக நியமிக்கப்பட்ட மூன்று நீதவான்கட்குரியது. அதற்கான சன்மானங்களை அவர்கள் பின்னர் பெற்றனர் என்றுங் கூற வேண்டும். முக்கியமாக நீதவான் சர்வானந்தா நெவில் சமரக்கோனின் பதவி விலகலை அடுத்து நீதியரசராகப் பதவிப் பெற்றதுடன் ஓய்வுக்குப் பின்பு கொழும்பு மாகாணசபை ஆளுனராகவும் பதவி பெற்றார்.



முன்னாள் நீதியரசர் சர்வானந்தா

நீதித் துறையின் சுயாதீனத்துக்கு இவ்வாறு குழிபறித்த ஜயவர்தனவின் நிறைவேற்றதிகாரம் அப்பட்டமான அதிகாரத் துஷ்பிரயோகமாக வெளிப்பட்ட இன்னொரு துறை பொலீஸ் துறையாகும். பொலிஸ் துறையினர் நாட்டில் சட்டமும் ஒழுங்கும் மீறப்பட்ட பல சந்தர்ப்பங்களுக்குத் தொடக்கப் புள்ளியாக 1977இல் தேர்தல் முடிந்த பின்பு ஸ்ரீ.ல.சு. கட்சியினருக்கு எதிரான யு.என்.பி. குண்டர்களின் வன்முறையின் போது, பொலிஸ் துறைக்கு 2-3 வாரம் 'விடுப்பு வழங்கியுள்ளதாக' ஜயவர்தன கூச்சமின்றி அறிவித்தார். அதன் பின்பு, பல வேறு நிகழ்வுகளின் போது சனாதிபதியினதும் ஆளுங் கட்சியினதும் மனமறிந்து அதற்கமைய நடப்பது பல உயர் அதிகாரிகளின் வழமையாகி விட்டது.

பாராளுமன்ற இடைத் தேர்தல்கள் முதல் சர்வசன வாக்கெடுப்பு, சனாதிபதித் தேர்தல் வரை அப்பட்டமான மீறல்கள் நடந்தன என்பதை விடவும், அவை நடந்தமையைப் பொது மக்களுக்குக் கூச்சநாச்சமின்றி அறிவிக்கும் தோரணையில் அரசாங்கம் நடந்து கொண்டதற்கு உச்சமான உதாரணமாக 1982இல் சர்வசன வாக்கெடுப்பின் போது, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பீற்றர் கெனமனின் வாக்கு, அவர் காலையில் வாக்குச் சாவடியை அடைய முன்னமே இடப்பட்டதைக் கூறலாம். அவ்வாறே ஹெக்ற்றர் கொப்பேகடுவவுக்கும் நடந்தது. வாக்குச் சாவடிகளில் துப்பாக்கிகளைக் கொண்டு அதிகாரிகளை மிரட்டிக் கள்ள வாக்களித்த பல நிகழ்வுகளையும் 1980களிற் காண முடிந்தது.

## சட்டம் அவர் கையில், நீதி அவர் காலடிக் கீழ்!

பொலிஸ் அதிகாரிகள் அரசாங்கக் கட்சிக்கு உடன்பாடாக நடக்கும்வரை அவர்களுடைய அத்துமீறல்கள் கணக்கிற்கு வரா என்ற சைகை மிகவும் அப்பட்டமாகத் தெரிவிக்கப்பட்ட நிகழ்வுக்கு முன்னாள் சமசமாஜக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் விவியன் குணவர்தன முகம் கொடுத்தார். 1980ம் ஆண்டு, அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றிற் கலந்து கொண்ட பின்பு வீதிவழியே ஆதரவாளர்களுடன் திரும்பிச் செல்கையில் இது நடந்தது. கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஒரு பொலிஸ் உப அத்தியட்சகர் தெருவில் வைத்து அவரைக் கைதுசெய்து பொய்க் குற்றச்சாட்டுகளின் பேரில் அவரை மிகவுங் கடுமையாக நடத்தினார். அச் செயல்கள் தன் அடிப்படை உரிமை மீறல்களென்று விவியன் குணவர்தன நீதிமன்றத்தில் முறையிட்டார். பொலிசாரின் துன்புறுத்தல்களை உறுதிப்படுத்த இயலாத போதும், பொலிஸ் அதிகாரியின் நடத்தை பாரிய அத்துமீறல் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆனால் அந்த அதிகாரி எத்தகைய தண்டனைக்கும் ஆளாகவில்லை. மாறாக மெச்சப்பட்டார். அதுமட்டுமன்றி அவ் வழக்கை விசாரித்த நீதிபதிகளின் வீடுகளைக் காடையர்கள் கல்லெறிந்து தாக்கினர். ஜயவர்தன அந்தக் காடைத்தனத்தையும் கருத்துச் சுதந்திரமென்று மெச்சினார்.

இவ்வாறான நிகழ்வுகளின் முக்கிய தாக்கம் என்னவெனில், அரசாங்கத்திற்கு உடன்பாடற்ற எவரையும் தொல்லைக்குட்படுத்தப் பொலிஸ் துறையினர் அஞ்ச வேண்டியதில்லை என்ற செய்தி பகிரங்கமாகக் கூறப்படுவதாகும். அச் செய்தி, பொலிஸ் அத்து மீறல்களைப் பற்றி முறையிடுவதற்குப் பலரையும் தயங்கவைத்தது.

**தன்னிறைவு என்பது இலங்கை போன்ற ஒரு நாட்டின் பூரணமான இறக்குமதித் தடைமூலம் பெறக்கூடியதல்ல. எவற்றைத் தம் தேவை கருதி இறக்குமதியாக்குவது, எவற்றை ஏற்றுமதியாக்குவது என்பன தெளிவான ஒரு பொருளாதாரத் திட்டத்தின் அடிப்படையில் முடிவாகாவிடின், நாட்டின் தன்னிறைவைக் கருதி மேற்கொள்ளப்பட்ட உற்பத்தி முயற்சிகளும் பாதிக்கப்படும் என்பதை 1970களின் நடுப்பகுதியிற் காண முடிந்தது.**

தேர்தல்களில் ஆள்மாறாட்ட மோசடிகள் எப்போதும் நடந்துள்ளன. பொதுவாக, ஊரில் இல்லாதோர், வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கப்படாத இறந்தோர், நிச்சயமாக வாக்களிக்க மாட்டாதவர்கள் போன்றோரின் பெயர்களில் வாக்குக்கள் அளிக்கப்படும். பொருள் வசதியும் ஆள் வலிமையும் உள்ள கட்சியினர் எப்போதுமே இவ்வாறான காரியங்களில் ஈடுபடுவர். பெரும்பாலான நேரங்களில் அவை அகப்படுவதில்லை. ஏனெனில் வேட்பாளர்களின் முகவர்கள் விவரமறிந்தவர்களாகவும் விழிப்புடனும் இருந்தாலொழிய ஆள்மாறாட்டக்காரர் எவரையும் பிடிக்க இயலாது. இவ்வாறான காரியங்கள் கடுமையான தண்டனைக்குரிய குற்றங்கள் என்றபோதும், ஒரு சிலரே அகப்பட்டுச் சிறிய தண்டனைகளுடன் தப்பிவிடுவர். மிக நெருக்கமான போட்டியில்லாத போது இவ்வாறான ஆள் மாறாட்டம் தேர்தல் இறுதி முடிவுகளைப் பாதிப்பது அரிது. ஆயினும், அரசியல் செல்வாக்கும் ஆட்சி அதிகாரமும் உள்ளவர்கள் தேர்தல் அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இவ்வாறான செயல்களில் ஈடுபடும்போது, தேர்தல் முடிவுகளை ஆள் மாறாட்டம் தீர்மானித்ததுண்டு.

பிற தேர்தல் விதிகளும் மிகக் கண்டிப்பானவை. தேர்தல் பிரசாரக் காலம், வாக்காளர்களைக் கவரும் முயற்சிகள், வாக்குச்சாவடி அயலில் வேட்பாளர் சார்பிலான செயற்பாடுகள், வாக்காளர்களை வாகனங்களில் வாக்குச் சாவடிக்குக் கொண்டு வருதல் என்பனவும் மிகுந்த கட்டுப் பாட்டுக்குட்பட்ட விடயங்களே. அவற்றின் மீறல்களை விட முக்கியமாகப், பொய் வாக்குறுதிகள், மிரட்டல், லஞ்சம், வாக்காளர்களை மறிப்பது போன்றவையும் வேறுபடும் அளவுகளில் நடந்துள்ளன. ஆயினும் அவற்றைச் செய்வோர் தாம் அகப்படாமற் செய்வதிற் கவனமாயிருப்பர். ஏனெனில், வெற்றி பெற்ற வேட்பாளரோ அவரது முகவர்களோ இவ்வாறான குற்றங்கட்குப் பொறுப்பானவர்கள் என நீதிமன்றத்தில் நிறுவ இயலுமாயின், அவரது தேர்தல் செல்லாமலாவதுடன் வேட்பாளரும் அடுத்து வரக்கூடிய தேர்தல்களிற் போட்டியிடும் தகுதியையும் இழக்கக்கூடும். தேர்தல் மனுக்களில் அரிதாக ஒன்றிரண்டு வென்று, தேர்தல் ஒழுங்கீனத்தின் அடிப்படையில் வென்றவர் பதவி இழந்து பாராளுமன்றத் தொகுதிக்கு இடைத்தேர்தல் நடந்ததும் உண்டு.

ஜயவர்தன ஆட்சியின் கீழ், ஆள் மாறாட்டம் பெருமளவில் நடந்தது போக, அது அப்பட்டமாகச் சட்டத்திற்கு அஞ்சாமற் செய்யப்பட்டமை முக்கியமானது. ஆளுங்கட்சி வேட்பாளர்கள் கைத்துப்பாக்கியுடன் சென்று தேர்தல் அதிகாரிகளை மிரட்டியபோதும் யாரும் தண்டிக்கப்படவில்லை. இவ்வாறான அத்துமீறல்கட்குச் சிகரம்வைத்தாற்போல வாக்குப் பெட்டிகளினுள் ஆளுங்கட்சி வேட்பாளருக்கோ சர்வசன வாக்கெடுப்பாயின் அரசாங்கப் பிரேரணைக்கு ஆதரவாகவோ தயாரிக்கப்பட்ட வாக்குச் சீட்டுக்களை அடைவதும் வாக்குப் பெட்டிகளையே மாற்றுவதுங்கூட நிகழ்ந்துள்ளன. இக் காரியங்களில் அரசாங்கம் படையினரையும் பயன்படுத்திய சூழலை யாழ்ப்பாணத்தில் 1981இல் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலின் போது மக்கள் கண்டனர். அக்காலத்திலேயே யாழ்ப்பாண நூலகமும் சிவில் உடை தரித்த காவற் படையினரால் எரிக்கப்பட்டது.

பாராளுமன்றத்தினுள் தனது பூரண ஆதிக்கத்தை உறுதிப்படுத்த ஜயவர்தன மேற் கொண்ட நடவடிக்கைகள் பல நீதிமன்றத்தின் அதிகாரத்தையும் சுயாதீனத்தையும் பாதித்தன. இன்றைய அதிகாரத் துர்ப்பிரயோகத்தின் வேர்கள் எங்கே என்று தேடுவோமாயின் ஜயவர்தனவின் நிறைவேற்றதிகாரத்தினுள் அவற்றைக் காணலாம். அவற்றிற் சில பற்றியும் பாராளுமன்ற முறையின் ஒழுங்கீனங்கள் பற்றியும் அடுத்த பகுதியில் கவனிப்போம்.

• • •

# தனியார் மயமாகும் கல்வி

## இலவசக் கல்வி சாகடிக்கப்படுகிறது

**சிறி மனோகரன்**

இன்றைய கல்வி முறைக்கான அடிப்படைகள் 19ம் நூற்றாண்டில் பிரித்தானியர் ஆட்சியின் ஊடாக உருவாயின. பிரித்தானியக் கொலனியவாதிகள் விருத்தி செய்த கல்வி முறையானது அவர்களது நிருவாகத்திற்கு தேவையான ஆளணியை உருவாக்கிப் பயிற்றுவிப்பதையும் பிருத்தானியச் சமூக நியமங்களை நிலைநிறுவுதலையும் பிரதான நோக்காகக் கொண்டிருந்தது.


1944ல் சீ.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா குழுவினரின் விதந்துரையின் படி இலவசக் கல்வியும், புலமைப்பரிசில் திட்டமும் முக்கியத்துவம் பெற்றன. சுதந்திரத்தின் பின், கல்விக் கொள்கை தொடர்பான பல வெள்ளை அறிக்கைகளும் சீர்திருத்தங்களும் அறிமுகமாயின.

1946-1963 காலப் பகுதியில் பாடசாலைகளின் தொகை அதிகரித்தது. பல்கலைக் கல்வியிலும் (1960களிலிருந்து) கிராமப்புற மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் பங்குபற்றத் தொடங்கினர். குறிப்பாக 6-12ம் வகுப்புகளில் 1970களில் 452,908 ஆகவிருந்த மாணவர்கள் தொகை 1977ல் 912,240 ஆக அதிகரித்தது.

கல்வியைப் படிப்படியாகத் தனியார் மயப்படுத்தும் திட்டத்தை உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்னா சென்ற ஆண்டு அக்டோபர் 29ம் திகதி கொழும்பில் இடம் பெற்ற கருத்தரங்கில் அவரே தெரிவித்திருந்தார்: "பிரித்தானியாவின் பல்கலைக் கழகம் ஒன்று இலங்கையில் ஒரு வளாகத்தை நிறுவ உள்ளது. இதில் 10,000 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இவர்களில் 6000 பேர் வெளிநாட்டவர்களாயும், 4000 பேர் உள்நாட்டவராயும் இருப்பர். 2012ல் உத்தேச திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட சமயம் 'தீவிரவாதிகளால்' அது தடுக்கப்பட்டது.

"வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் இலங்கையில் அவற்றின் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு ஏதுவாக 99 வருட குத்தகையில் காணிகள் வழங்கப்படும். "சென்ற வருடம் இலங்கை மாணவர்கள் 15,000 பேர் உயர் கல்விக்காக வெளிநாடு சென்றனர். இவர்களில் 3,000 பேர் அமெரிக்கா சென்றனர்.

"அரசாங்கம் 2015 அளவில் ஐந்து புதிய தனியார் பல்கலைக் கழகங்களை நிறுவ எதிர்பார்க்கிறது. இதன் மூலம் 100 கோடி அமெரிக்க டொலர்களைப் பெறலாமென




**உயர் மத்தியதர வர்க்கத்தினர் இன்று பெரும் பொருட் செலவுடன் ஆங்கில மொழி மூலமாக சர்வதேசப் பாடசாலைகளில் புதிய சந்ததியினருக்கு கல்வியைப் பெற்றுக் கொடுக்க முன் நிற்கின்றனர். இதனை மேலும் ஊக்குவிக்கும் வகையில் பல தனியார் பல்கலைக் கழகங்களும் செயற்படத் தொடங்கியுள்ளன. இலங்கையில் தற்போது கம்பனிகள் சட்டத்தின் கீழ் 29 தனியார் பல்கலைக் கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதில், மாலபே தனியார் பல்கலைக் கழகத்திற்கு வைத்திய பட்டத்தினை வழங்குவதற்கான அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. 75 இலட்சம் ரூபாவுடன் "மாலேபே சைதம்" நிறுவனத்தில் வைத்தியப் பட்டத்தைப் பெறலாம்**

எதிர்பார்க்கிறது. அந்த ஆண்டில் 5000 அந்நிய மாணவர்களை அனுமதிப்பதன் மூலம் பத்துக் கோடி அ.டொலர்களை வருமானமாகப் பெற உத்தேசித்துள்ளோம்".

உயர் மத்தியதர வர்க்கத்தினர் இன்று பெரும் பொருட் செலவுடன் ஆங்கில மொழி மூலமாக சர்வதேசப் பாடசாலைகளில் புதிய சந்ததியினருக்கு கல்வியைப் பெற்றுக் கொடுக்க முன் நிற்கின்றனர். இதனை மேலும் ஊக்குவிக்கும் வகையில் பல தனியார் பல்கலைக் கழகங்களும் செயற்படத் தொடங்கியுள்ளன. இலங்கையில் தற்போது கம்பனிகள் சட்டத்தின் கீழ் 29 தனியார் பல்கலைக் கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதில், மாலபே தனியார் பல்கலைக் கழகத்திற்கு வைத்திய பட்டத்தினை வழங்குவதற்கான அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக 75 இலட்சம் ரூபாவுடன் "மாலேபே சைதம்" நிறுவனத்தில் வைத்தியப் பட்டத்தைப் பெறக் கூடிய நிலை காணப்படுகிறது.

இன்று சுமார் 20 இலட்சம் மாணவர்கள் தமது தாய் நாட்டை விட்டு மேலை நாடுகளில் கல்வி பயிலுகின்றனர். ஐக்கிய அமெரிக்காவில் மட்டும் 8 இலட்சம் வெளிநாட்டு மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். இவர்களில் 80,000 பேர் இந்திய மாணவர்கள். இவர்களால் ஐக்கிய அமெரிக்காவுக்கு ஆண்டு தோறும் 1500 கோடி டொலர் வெளிநாட்டுச் செலவாணி கிட்டுகின்றது.

அண்மைக் காலங்களில் நாட்டில் அதிகரித்துச் செல்லும் சர்வதேசப் பாடசாலைகள் காரணமாக கன்னங்கரா அவர்களால் முன்வைக்கப்பட்ட சுய மொழிக் கொள்கை வலுவிழக்கும் நிலையை எட்டியுள்ளது. இலங்கையில் இன்று வசதியான குடும்பங்களைச் சேர்ந்த 18 சதவீதமான பாடசாலை மாணவர்கள் சர்வதேச பாடசாலைகளில் ஆங்கில மொழியிலான கல்வியையே பெறுகின்றனர் என ஓர் ஆய்வு கூறுகிறது. சென்ற வருடம் கல்விக்கு 6 சதவீதம் ஒதுக்கீடு செய்யவேண்டு மென்ற கோரிக்கையை முன் வைத்து பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்

சிரேஷ்ட விரிவுரையாளரான ஞானசீலன் ஜெயசீலன் அப்போது பின்வருமாறு கூறியிருந்தார். கல்விக்கு 1.8 சதவீதம் ஒதுக்கப்பட்டுள்ளது பல்கலைக் கழகங்களுக்கு தசம் 27 சதவீதம் (0.27) மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. 6 சதவீதம் ஒதுக்கீடு செய்தால் பல்கலைக் கழகங்களுக்கான ஒதுக்கீடு ஒரு சதவீதத்திலிருந்து 1.5 சதவீதமாக உயரும். அதே சமயம் பாடசாலைகளுக்கான ஒதுக்கீடு 4.5 சதவீதமாக உயரும். நமது நாட்டில் 1950 இலிருந்து 2012 வரை கல்விக்கான ஒதுக்கீடு படிப்படியாக குறைந்துள்ளமையை புள்ளி விபரங்கள் வெளிக்காட்டுகின்றன.

நிதிப்பற்றாக்குறை காரணமாக சுமார் 1500 பாடசாலைகள் மூடப்படவுள்ளதாக கல்வித்துறை ஆர்வலர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். இந்தப் பாடசாலைகள் அனைத்தும் கிராமப்புறங்களில் உள்ளவைகளாகவிருந் தால் ஆச்சரியப்பட ஒன்று மில்லை. 2000ம் ஆண்டிலிருந்து 2010 வரை 291 அரச பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. அதே சமயம் தனியார் பாடசாலைகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்படுகிறது. 2011ல் உலக வங்கி இலங்கைப் பாடசாலைக் கல்வியை மாற்றுதல் தொடர்பாக அறிக்கை சமர்ப்பித்தது எனத்தெரிவித்த விரிவுரையாளர் ஜெயசீலன் அவர்கள் பின்வரும் தகவல்களையும் வெளியிட்டார்.

இலங்கை 49 சதவீதமான பாடசாலைகளில் மலசல கூட வசதியில்லை யெனவும் 18 சதவீதமான பாடசாலைகளில் குடிநீர் வசதியில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. மேல் மாகாணத்தின் 3 சதவீதமான பாடசாலைகளுடன் ஒப்பிட்டால் வடக்கு கிழக்கில் 23 சதவீதமான பாடசாலைகளில் குப்பை கூளங்களை துப்பரவு செய்வதற்கான வசதியில்லை. இலங்கையில் 29 சதவீதமான பாடசாலைகளியே உயர் கல்வியில் விஞ்ஞானப் பிரிவு உள்ளது. கிராமப்புறப் பாடசாலைகளில் ஆங்கில, கணித, கணனி ஆசிரியர்கள் இல்லை.

நாட்டில் இளைஞர் வேலையின்மை 20 சதவீதமெனத் தகவல் வெளியாகியிருக்கும் நிலையில் அவர்களில் தகுதி யானவர்களை கல்விச் செயற்பாட்டில் இணைத்துக் கொள்ளத் தடையாய் இருப்பது நிதி வசதியின் மையே. யுத்தம் முடிந்த நிலையில் பாதுகாப்புத் துறைக்கு யுத்த காலத்தில் ஒதுக்கிய நிதியை விட கூடுதலான நிதி ஒதுக்கும் அரசு கல்விக்கு மொத் தத் தேசிய உற்பத்தியில் ஆறு சதவீதத்தை ஒதுக்க மறுக்கிறது. இவை யாவும் கல்வியைத் தனியார்மயப்படுத்தும் உள்நோக்கமுடைய முயற்சிகளே.

2014ம் ஆண்டிற்கான கல்வி ஒதுக்கீடு 12,500 கோடி ரூபாயாகும். இது மொத்த தேசிய உற்பத்தியில் 1.8 சதவீதம் மட்டுமே. ஒதுக்கிய தொகையில் சம்பளம் வழங்க மட்டும் 8,000 கோடி ரூபா தேவை. மிகுதி 4,500 கோடி ரூபாவைக் கொண்டு மாணவர் சீருடை, மாணவர்களுக்கான பாடநூல்கள், கட்டிடங்களைப் புனரமைத்தல் என்பனவற்றை நிறைவுசெய்ய வேண்டியுள்ளது. விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு நிதிப்பற்றாக்குறையால் செய்யப் படாமலுள்ளது.


பாடசாலைகள் பெற்றோரிடமிருந்து அன்பளிப்புக்களை ஏற்கக்கூடாதென வர்த்தகமானி அறிவித்தல்கள் வெளியாகியுள்ள நிலையில் பாடசாலைகளுக்கு வர்ணம் பூசுவதற்கு மாணவர்களிடமிருந்து ஆயிரம் ரூபா வீதம் பகிரங்கமாக வசூலிக்கப்படுகிறது. குறித்த ஒரு ஸ்தாபனத்திடமிருந்து மட்டுமே வர்ணங்களைப் பெற வேண்டுமென்றும் அதிகாரிகள் நிர்ப்பந்திக்கின்றனர்.

மக்கள் நலனை முதன்மைப்படுத்தி செயற்பட்ட சேனக்க பிபிலேயவர்களை மறந்து சுகாதாரத் துறை தனியார் வசமாகிக் கொண்டிருக்கிறது. கிராமப்புற சிறார்களும் சிறந்த கல்வியைப் பெறவேண்டுமென்று செயற்பட்ட கன்னங்கரா அவர்களையும் மறந்து கல்வியும் தனியார் மயமாகிறது. கல்வி பின்தங்கிய மக்களுக்குச் சென்றடைய வேண்டுமென்று செயற்பட்ட ஹன்டி பேரின்பநாயகம், ஈழகேசரிப் பொன்னையா போன்றோரை நினைவு கொள்ளத் தமிழ்த் தேசியவாதிகள் தயங்குகின்றனர்.

இலங்கையில் கல்வித் துறையில் ஊழல் 33 சதவீதம் என இலங்கை ற்ரான்ஸ்பெரன்சி இன்ற்றநாசனல் 2012 செப்டம்பரில் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது.

இலாப நோக்கின் காரணமாகத் தனியார் துறையினர் விதிமுறைக்கு மாறாக தகுதி குறைந்த மாணவர்களுக்கு அனுமதி வழங்குகின்றனர். அண்மையில் இங்கிலாந்தின் லண்டன் மெற்ரோபொலிட்டன் பல்கலைக்கழகம் தனக்கு அரசாங்கம் வழங்கிய பல சலுகைகளைப் பயன்படுத்தி ஏராளமான வெளிநாட்டு மாணவர்களுக்கு (2,500 பேர்) அனுமதி வழங்கியுள்ளது. மாணவர்கள் வழங்கிய கல்விக் கட்டணம் 30,000 இலிருந்து 40,000 பவுண்களாகும்.

இந்தியாவில் கல்வி தனியார்மயமாவதை எதிர்த்து மக்கள் பெரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். அவ்வாறான நிகழ்வொன்று சென்னையில் 2012ம் ஆண்டு யூலை 17ம் திகதி இடம் பெற்றது. "கல்வி தனியார்மய ஒழிப்பு" என்ற தொனிப் பொருளில் இடம்பெற்ற மகாநாட்டில் பேராசிரியர் கருணானந்தம் "கல்வி ஆதிக்க வர்க்கத்தின் கருவியாக இருந்து வந்துள்ளதென மார்க்ஸ் கூறியிருந்தார். பல ஆயிரம் ஆண்டுகளாக மனு தர்மத்தின் படி சூத்திர, வைசிய, தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டது. கல்வியை யார்



பெறவேண்டுமென்று ஆதிக்க சாதியினர் தீர்மானித்தனர். ஆதிக்க வர்க்கத்திற்குத் தொண்டூழியம் செய்வதற்காக உழைக்கும் மக்களுக்கு கல்வி மறுக்கப்பட்டது. கல்வியை யார் பெற வேண்டும்" என் பதை தரும சாத்திரங்கள் வரையறுக்கின்றன. ஒடுக்கப்பட்ட பிரிவினர் தவறிப் போய் அறி வுதரும் விடயங்களைக் கேட்டால் "ஈயத்தைக் காய்ச்சி ஊற்று" என்று சொல்லுகின்றன தரும சாத்திரங்கள்." எனத் தெரிவித்திருந்தார். மேலும் அவர் "நாம் விரும்பும் கல்வி என்பது உழைக்கும் மக்களுக்கான கல்வி. நாம் விரும்பும் கல்வி மக்களிடமிருந்து மாணவர்களை அந்நியப்படுத்தாத கல்வி" எனக்கூறி இருந்தார்.

உலகமயமாதலின் கீழ் ஏனைய விடயங்களைப் போன்று கல்வியையும் தனியார் மயப்படுத்துவதை மகிந்த சிந்தனை அரசாங்கம் வேகப்படுத்தி வருகிறது. இந் நிலையில் இதற்கு எதிராகவும் கல்விக்கு மொத்த தேசிய உற்பத்தியில் ஆறு சதவீதம் ஒதுக்கப்பட வேண்டும் என்று பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனமும் நூறு நாட்கள் போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்தன. மாணவர்கள் அதற்கு ஆதரவு தெரிவித்துப் போராட்டங்களில் ஈடுபட்டனர். ஆனால் அப் போராட்டங்களை முறியடித்து நசுக்குவதில் அரசாங்கம் முன்நின்றது. எனவே கல்வியைத் தனியார் மயப்படுத்தும் நாசாகாரத் திட்டத்தை ஆசிரியர்களும் மாணவர்களும் மட்டுமன்றி அனைத்து மக்களும் எதிர்த்துத் தடுத்து நிறுத்த முன்வரல் வேண்டும். இல்லாவிடின் உழைக்கும் மக்கள் பெற்று வந்த இலவசக் கல்வி, தாய் மொழிக் கல்வி போன்றவற்றை உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலுக்குப் பலியிட்டு சாதாரண குடும்ப மாணவர்கள் கல்விக்கான தமது சுதந்திரத்தையும் அடிப்படை உரிமையினையும் இழக்க வேண்டி ஏற்படும்.

• • •

# கற்பிட்டி அனல் மின்நிலையம்:

## தொழில் நுட்பக் கோளாறா நிருவாகக் கெடுபிடியா?

*தேசபக்தன்*

கற்பிட்டி அனல் மின்நிலையம் தொழில்நுட்பப் பிரச்சினைகளாற் பல தடவைகள் இயங்காமல் நின்றுள்ளது. இப்போது அதன் இரண்டாவது கட்டத்தை நிறுவிச் செயற்படுத்து முன்னர் மேலுமொரு கோளாற்றின் காரணமாக அது செயலிழந்துள்ளது. அதைத் திருத்துவதற்கு, அதைச் செய்ய வேண்டியவர்களான சீனப் பொறியியலாளர்களின் இடத்தில் இந்திய நிபுணர்களை அழைக்கும் திட்டமும் அறிவிக்கப்பட்டது. எனினும் இப்போது மீண்டும் சீன நிபுணர்களே வந்து முழுமையான ஒரு விசாரணையை நடத்திப் பிரச்சனையைத் தீர்ப்பார்கள் என்று தெரிவித்துள்ளார்கள்.


இப் பிரச்சனைக்குத் தொழில்நுட்பத்திற்கும் அப்பாற்பட்ட காரணங்களும் உள்ளதாக ஐயுறுவதற்குள்ளது. முதலாவதாக, இத்தகைய நிலக்கரி அனல்மின் தொழில் நுட்பம் இலங்கைக்குப் புதியது. ஆனால் சீனாவுக்கோ பல வேறு நாடுகட்கோ புதியதல்ல. சீனா இதைப் போன்ற பல அனல் மின் நிலையங்களை நீண்டகாலமாகச் சீனாவில் நிறுவிப் பயன்படுத்தி வந்துள்ளதுடன் பல அயல் நாடுகளிலும் நிறுவியுள்ளது. இதுவரை வேறெந்த நாட்டிலும் சீனாவின் நிலக்கரி அனல்மின் நிலையங்கள் தராதளவு தொல்லைகள் இலங்கையில் மட்டும் நிகழக் காரணம் என்ன என்பதை நாம் விசாரிக்க வேண்டும்.

சீன அனல் மின் நிலையம் கோளாறுகளின்றி இயங்கும் என்பதற்கு யாரும் உத்தரவாதம் தர இயலாது. ஆயினும் சில பிரச்சனைகளை நோக்கும் போது, அனைத்துக் கோளாறுகளும் முற்றாகவே தொழில்நுட்பக் கோளாறுகளாகத் தெரியவில்லை. முதன் முறையாக ஏற்பட்ட பெரிய முறிவுக்குக் காரணம், மிகையாகச் சுமையேற்றியமை என்று தெரிய வந்தது. அனுபவசாலிகளான மின் பொறியியலாளர்கள் பலர் உள்ள ஒரு நிறுவனத்தில் அத்தகைய ஒரு பிழை தற்செயலாகவோ தவறுதலாகவோ நடந்திருக்க நியாயமில்லை.

மற்றைய கோளாறுகட்கான காரணங்கள் நிர்மாணக் கோளாறுகளா, இயந்திரக் கோளாறுகளா இயந்திரப் பராமரிப்புக் கோளாறுகளா, திட்டமிட்ட குழிபறிப்பு வேலைகளா அல்லது அனைத்தினதும் கலவையா என்பதை அறிவதற்கு நமக்கு இயலாது. ஆனால் அது விசாரிக்க வேண்டிய விடயம். இவற்றுக்கு அப்பால், இலங்கை மின்சார சபையின் நடத்தை பற்றிய சில விடயங்களும் முக்கியமானவை. முதலாவதும் முக்கியமானதுமாக இலங்கையின் அரசாங்கத் தொழில் நிறுவனங்களில் ஊழல் மிகுந்த நிறுவனங்களுள் மின்சார சபை முக்கியமானது. தனியார் மின் உற்பத்தி நிறுவனங்கள் சில இப்போது மின்சார சபைக்கு மின்சாரம் வழங்குவதன் மூலம் பெரும் பணம் சம்பாதிக்கின்றன.

நாட்டிற்கான மின்சார உற்பத்தியில் அவர்களுடைய பங்கு குறைவதை அவர்கள் விரும்ப நியாயமில்லை. எனவே கற்பிட்டி மின் முறிவுகளில் அவர்களுக்கு ஒரு முக்கிய பங்கு இருப்பதை நாம் எதிர்பார்க்கலாம். அண்மையில் ஒரு மின் பொறியியற் பட்டதாரி அரசியற் பிரமுகர் வெளியிட்ட அறிக்கையில் மின் பொறியியலாளரான சம்பிக ரணவக்க பொறுப்பில் இல்லாததாலேயே பிரச்சனைகள் ஏற்படுகின்றன என்ற விதமாகக் கூறியிருந்தார். இது பொருந்தாக் கூற்று. ஏனெனில் ஒரு நிறுவனம் செவ்வையாக இயங்க் அதற்கு பொறுப்பான அமைச்சர் ஒரு குறையாக இருக்கத் தேவையில்லை.

ஆனால் அண்மையில் முறிவைப் பற்றிய் விசாரணை நடத்தச் சீனப் பொறியியலாளர்கள் வருகிற வேளையில் முக்கியமான மின் தொழில்நுட்ப உயர்மட்ட அலுவலர்கள் யப்பானுக்குப் பயணம் மேற் கொண்டுள்ளமை அவர்களின் தொழில்சார் அக்கறையின் ஒரு அளவு கோலாகிறது. உண்மையில் மின்சார சபையின் முக்கியமான ஒரு குறைபாடாக அங்கு மின் பொறியியலாளர்களின் ஆதிக்கத்தையும் பிற துறையினரை ஒதுக்கிப் புறந்தள்ளும் போக்கையும் கொள்ளலாம். ஒரு மின் உற்பத்தி நிறுவனத்திற்கு அத்தியாவசியமானவர்கள் குடிசார் (சிவில்), இயந்திர (மெக்கானிக்கர்) பொறியியலாளர்களுமே. நீர் மின்வலு நிலையங்களின் நிறுவலில் குடிசார் பொறியியலாளர்களும் பராமரிப்பில் இயந்திரப் பொறியியலாளர்களும் முக்கியமாவர். அனைத்து



நன்றி: https://www.facebook.com/Awantha.artigala

**நாமறியாத எந்தத் தொழில் நுட்பமும் பல பிரச்சினைகளுடனேயே நம்மை வந்தடைகிறது. ஆனால் நாம் தயாராக இல்லாததும் போதாமல் பல வேறு அரசியல் சுய லாப நோக்கங்களும் குறுக்கிடும் போது தேவைக்கு மீறிய துன்பங்களை முழு நாடும் மக்களும் அனுபவிக்க நேரிடலாம். கற்பிட்டியின் பிரச்சனைகள் வெறுந் தொழில் நுட்பப் பிரச்சனைகளானால், அவற்றைச் சீன நிபுணர்கள் தீர்க்க இயலும். அதற்கப்பாலான பிரச்சனைகளைத் தீர்ப்பதானால் முதலிற் பல அரசியற் பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டி யிருக்கும்.**

அனல் மின் நிலையங்களும் மிகப் பெருமளவில் இயந்திரப் பொறியியலாளர்களை நம்பியிருப்பன. உலகெங்கும் உள்ள மின் உற்பத்தி நிறுவனங்களில் இயந்திரப் பொறியியலாளர்களே பெரும்பான்மையினராக உள்ள போது இலங்கையில் நிலைமை தலைகீழாக உள்ளது. இது விசாரிக்கப்பட வேண்டியது.

கடந்த சில தசாப்தங்களாக இயந்திரப் பொறியியலாளர்களைச் சேவையிற் சேர்ப்பதற்குத் திட்டமிட்ட முறையிற் தடைகள் ஏற்பட்டுள்ளன. எந்த முக்கிய நிருவாகப் பொறுப்பிலும் மின் பொறியியலாளர் தவிர்ந்த எவரும் இல்லாமல் கவனிக்கப்பட்டுள்ளது. இது மின்சார சபைக்குள் ஒருவிதமான துறைசார் "சாதியம்" செயற்படுவதையே குறிக்கிறது.

இப்போது நிலக்கரி அனல் மின் நிலையம் உருவாகியுள்ள போது அதன் 90 சதவீதமான அலுவல்களைக் கவனிக்கவேண்டிய இயந்திரப் பொறியியலாளர்களின் இடத்தில் எரிபொருளின் தகன அறை முதல் புகை போக்கி வரை கொதிகலன் மூதல் கொதிநீராவி ஒடுக்கி உட்பட்ட நீராவிச் சுழலி வரையும் மின் பிறப்பாக்கி வரையிலுங் கூட அவசியமான அடிப்படை அறிவோ அனுபவமோ அற்ற மின் பொறியியலாளர்களைப் பொறுப்பில்வைத்து ஒரு அனல் மின் நிலையத்தை எவ்வாறு செவ்வனே நடத்த இயலும்? மின் பொறியியலாளர்களது முக்கிய பங்கு மின் விநியோகப் பக்கத்திற்குரியது. அதில் அவர்கட்குப் போதிய நிபுணத்துவம் உள்ளது. இப்போது நடப்பது நாயின் வேலையைக் கழுதை செய்வதைப் போன்றது.

ஒருவர் பொறியியற் பட்டதாரி என்பதாலோ தொழில் அனுபவம் உள்ளவர் என்பதாலோ மட்டும் அவரால் ஒரு புதிய தொழில்நுட்பச் சூழலிற் செவ்வையாக இயங்க இயலாது. ஒரு அனல் மின் நிலையம் பல நூறு பொறியியலாளர்களையும் தொழில்நுட்பவியலாளர்களையும் உதவியாளர்களையும் கொண்டு இயங்குவது. அனல் மின் நிலையம் கட்டியெழுப்பப்பட்ட காலத்தில் அவர்கள் அங்குள்ள பல்வேறு உபகரணங்களைச் சரிவரக் கையாளப் பயிற்றப்பட்டிருக்க வேண்டும். இது எவ்வளவு தூரம் செவ்வையாக நடந்துள்ளது என்பது இன்னொரு கேள்வி.

இலங்கைக்கு இந்த அனல் மின் நிலையத்தைக் கையளித்த போது மேற்கூறியவாறான பிரச்சனைகளத் தீர்க்கச் சீனா ஓரளவேனும் உதவியிருக்கலாம். ஆயினும் அதை முறையாகச் செய்வதற்கு இலங்கை அரசாங்கத்திற்கும் மின்சார சபைக்கும் ஒரு பாரிய பொறுப்பு இருந்தது. அனல் மின் நிலையத்தின் கையளிப்பின் போது அதன் சீரான இயக்கத்திற்குத் தேவையான அனைத்து விடயங்களையும் பட்டியலிட்டு அவற்றை நிறைவு செய்வதையும் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக்கியிருந்தால் சில பிரச்சனைகளைத் தவிர்த்திருக்கலாம். அதுவே ஒழுங்குமுறையான நடவடிக்கையுமாகும்.

இவ்விதமான பிரச்சனைகள் முன்னர் சோவியத் தொழில் நுட்பத்துடன் கட்டப்பட்ட தொழில் நிறுவனங்களில் ஏற்பட்டுள்ளன. நாமறியாத எந்தத் தொழில் நுட்பமும் பல பிரச்சினைகளுடனேயே நம்மை வந்தடைகிறது. ஆனால் நாம் தயாராக இல்லாததும் போதாமல் பல வேறு அரசியல் சுய லாப நோக்கங்களும் குறுக்கிடும் போது தேவைக்கு மீறிய துன்பங்களை முழு நாடும் மக்களும் அனுபவிக்க நேரிடலாம்.

கற்பிட்டியின் பிரச்சனைகள் வெறுந் தொழில் நுட்பப் பிரச்சனைகளானால், அவற்றைச் சீன நிபுணர்கள் தீர்க்க இயலும். அதற்கப்பாலான பிரச்சனைகளைத் தீர்ப்பதானால் முதலிற் பல அரசியற் பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டியிருக்கும். எவ்வாறாயினும் அனல் மின் நிலையத்தை நிறுவிய சீன அரசாங்க நிறுவனம் தனது பொறுப்பைத் தட்டிக் கழிக்க இயலாது.

•••

## வட்டுக்கோட்டை... 08...

இந் நிலையில், அதுவரையிலான இருபுறத்து யுத்த முன் னெடுப்புக்களும் சமாந்தரமாகச் செல்வதாகவும் சம்பலத்துடன் இருப்பதாக நம்பப்பட்டது. குறிப்பிட்ட காலப் பகுதிவரை அதிற் பகுதியளவிலான உண்மை இருந்துவந்தது. ஆனால் ராஜபக்ஷ சகோதரர்களின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பதவி ஏற்புடன் போர் முறையிலும் போர்த் தயாரிப்பிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. அதன் வளர்ச் சியாக 2006ம் ஆண்டிற்குப் பின், போரானது கூர்ங் கோண வடிவில் உச்சத்தை நோக்கிச் செல்லும் வகையில் இருதரப்புக்களும் இயங்கின. போரின் இத்தகைய வளர்ச்சி, இலங்கை ராணுவம் கிளிநொச்சியைக் கைப்பற்றியதுடனும் புலிகளின் பின்வாங்குதலுடனும் மேலும் அழிவின் உச்சத்தை நோக்கிச் செல்ல ஆரம்பித்தது.

கிளிநொச்சியைப் புலிகள் கைவிட்ட வேளை, சுமார் நான்கு லட்சம் மக்களில் எம்முடன் வர விரும்பியோர் வரலாம் ராணுவக் கட்டுப்பாட்டுக்குள் போக விரும்பியோர் போக லாம் என்னும் அறிவிப்பைப் புலிகள் விடுத்திருப்பார்களேயா னால் கணிசமான மக்களின் உயிர் இழப்பைத் தவிர்த்திருக்க முடியும். அத்தகைய முடிவு மக்கள் சார்பானதாகவும் இருந்தி ருக்கும். ஆனால் புலிகள் அவ்வாறு செய்யாது ஒரு புறத்தில் வெறும் நம்பிக்கையைப் பரப்பியும் மறுபுறத்தில் அச்சுறுத் தல்கள் மூலம் பெருந்தொகையான மக்களைத் தம்முடன் வைத்திருப்பதற்கும் முயன்று வந்தனர். மக்களில் ஒரு பகுதி யினர் புலிகள் இயக்கம் பற்றியும் அதன் தலைவர் மீதான அதீத நம்பிக்கையிலும் இருந்தனர். அத்தகையோருக்கு நாட் டினதும் சர்வதேசத்தினதும் அரசியல் பொருளாதார வளர்ச்சிப் போக்கையும் அமெரிக்க-மேற்குலக இந்திய வல்லரசுகளின் உள்ளார்ந்த நோக்கங்களையும் விளங்க இயலவில்லை. இது புலிகள் இயக்கம் பற்றிய ஒரு வகையான "மூடநம்பிக்கை" என்றும் கூறலாம். இவ்வாறு கூறுவது, பேரினவாத ஒடுக்குமுறை யுத்தத்தின் மூலம் அரசியல் தீர்வு காண்பது என்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான நிலைப்பாட்டினை ஏற்றுக் கொள்வது என்றும் ஆகாது.

யுத்தத்தின் அடுத்தகட்ட நகர்வுகளும் கோர அழிவுகளும் பற்றி அடுத்த பகுதியிற் பார்ப்போம்.

•••

# ஏமாறுகிறார்களா? ஏமாற்றுகிறார்களா?


*மோகன்*

ஜெனீவாவில் நடக்கவுள்ள கூத்துப் பார்க்கக் கூட்டங் கூட்டமாகப் போகிறார்கள். 'எரிந்த கட்சி - எரியாத கட்சி' என்று என்ன தான் எதிர்ப்பாட்டுப்பாடிக் கூத்தை நடத்தினாலும், வருடாவருடம் கூத்து ஒரே விதமாகவே ஆடிமுடியும். முடிவில் ஒரு விசாரணைக்கான ஆணையும் வராது என்று சர்வதேச விசாரணையைக் கேட்கிற கட்சிக்கும் தெரியும் அதை எதிர்க்கிற கட்சிக்கும் தெரியும். ஆனாலும் கூத்துக்கு முந்தின நாட்களில் உள்ள பரபரப்பு இருக்கிறதல்லவா, அதை யாராலும் விலக்க இயலாது.

சர்வதேச விசாரணைகள்பற்றி நாம் அறியாமல் இருக்க இயலாது. இலங்கையில் நடந்ததை விட மோசமான விடயங்கள் நடந்த சில நாடுகளிலும் தொடர்ந்து நடக்கிற நாடுகளிலும் சர்வதேச விசாரணைகள் நடக்கவில்லை. வேறு இடங்களில் நடந்திருக்கிறது. எங்கே ஏன் நடக்கிறது என்று விசாரித்தால் நடத்துவதற்குப் பொறுப்பானவார்களுக்குப் பகையானவர்கள் மட்டுமே விசாரணைக்கு உட்படுவதைக் காணுவோம். மற்றப்படி எந்த நாட்டையோ அதன் அரசாங்கத்தையோ ஆட்சித் தலைவரையோ தண்டிக்க எந்தக் காரணமோ விளக்கமோ நியாயமோ தேவையில்லை எனவும் நாம் அறிவோம். ஆனாலும், ஐ.நா. மனித உரிமைக் கழகத்தின் வருடாந்த நாடக விழா நெருங்கும் போது பலரும் தாம் காணப் போகிற நாடகம் தாம் விரும்பிய கதையையே கூறும் என எதிர்பார்ப்பர். அவர்களுக்கு உருவேற்றி விடுகிற மாதிரி ஊடகங்களும் உடுக்கடித்துப் பாடும். நாடகத்தை நம்பகமாக்குகிற மாதிரி ராஜதந்திர வட்டாரங்களில் பெரிய தோற்றங்களும் காட்டப்படும்.

அண்மையில் தென், மத்திய ஆசியாவுக்கான அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் வந்து போனதும் சிலருடைய எதிர்பார்ப்புக்களை வலுப்படுத்தியுள்ளது. பிரித்தானியப் பிரதமர் இங்கு வந்து பேசியதற்கும் மேலாக, இலங்கை சர்வதேச விசாரணையொன்றை எதிர்நோக்க நேரிடும் என்று மீண்டும் பிரித்தானியாவில் எச்சரித்தார். இப்போது பிரித்தானிய எதிர்க்கட்சித் தலைவர் பிரித்தானியப் பிரதமர் தான் செய்யப்போவதாக மிரட்டிய விதமாக ஜெனீவாவிற் செய்ய வேண்டும் என்று சவால் விடுத்துள்ளார். புலம் பெயர்ந்த தமிழரிடையே பிரித்தானிய ஆளுங் கட்சி தனது செல்வாக்கை வளர்க்க ஆடுகிற நாடகம் பற்றி எதிர்க்கட்சித் தலைவருக்கு மனக் குடைச்சல். எவர் என்ன வேடம் போட்டு நடித்தாலும் வசனங்களை மாற்றிப் பேசினாலும் முடிவில் நடக்கப் போவது ஒன்று தான்.

இந்தியா இலங்கையுடனான தனது பொருளாதார உறவைப் பாதிக்கும்படி எதையும் செய்யாது. மேற்குலகு இலங்கையைத் தண்டிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு இன்னமும் தயாராக இல்லை. ஏனெனில் எந்தத் தண்டனையும் இலங்கையை அவர்களின் பிடிக்குட் கொண்டுவர உதவாது. ஆனால் பலவாறான மிரட்டல்கள் உதவும். இந்த மிரட்டல்கள் மனித உரிமைக் கழகத் தீர்மான எல்லைகட்கு வெளியில் தலைமறைவாகத் தொடர்ந்தும் நடந்து வருகின்றன. மேற்குலக நோக்கங்களுள் தமிழ் மக்களுக்கு நிவாரணமோ விடிவோ பெற்றுத் தருவது உள்ளடங்காது. இது தமிழ்த் தலைமைகட்குத் தெளிவாகத் தெரிந்த விடயம். யானை முதுகில் அமர்ந்திருக்கிற குருவி தானே யானையை வழிநடத்துவதாகப் பேசுவது எவ்வளவு அபத்தமோ, அவ்வளவு அபத் தமாகத் தாங்களே இலங்கை பற்றிய மேற்குலகின் கொள்கையை வழி நடத்துவதாகக் காட்டிக்கொள்ளுகிற புலம் பெயர் தமிழ்த் தேசியவாதக் குழுக்களுக்கும் தெரியும். ஆனாலும் எல்லாரும் ஜெனீவாவில் கூத்துப் பார்க்கப் போகிறார்கள். கூத்து எப்பிடி முடிந்தாலும் தாங்கள் சொன்னபடிதான் நடந்தது என்று உரிமை கோருவார்கள். ஏனெனில் அமெரிக்காவும் இந்தியாவும் இலங்கையுடன் பேரம் பேசித் தடியும் முறியாமல் பாம்பும் சாகாத மாதிரி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவார்கள்.



**உண்மையில் பிச்சைக்காரனின் புண் போல, தேசிய இன ஒடுக்கல் தொடர்வது குறுந் தமிழ்த் தேசியத்தின் அத்தியாவசியத் தேவையாகத் தொடர்கிறது. அது உக்கிரமாக உள்ளவரை, தமிழ் மக்கள் கவனிக்க வேண்டிய பிற முக்கிய பிரச்சனைகளிலிருந்து அவர்களின் கவனத்தை விலக்கலாம். அமெரிக்காவும் மேற்குலகும் பற்றி வளர்க்கப்படுகிற கனவுகளை நாம் மேற்கூறிய நோக்கங்களுடனும் சேர்த்துக் கவனித்தால் குறந் தமிழ்த் தேசியத்தின் உண்மையான முகம் விளங்கும்.**

சர்வதேச விசாரணை ஒன்று உடனடியாக வரும் வாய்ப்பு இல்லை என்பதால் இலங்கை அரசாங்கம், உள்ளார்ந்த மகிழ்வுடன், ஜெனீவாத் தீர்மானம் பற்றி அதிருப்தி தெரிவிக்கும்.

இந்த லட்சணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமல்லாது வடமாகாண சபையும் ஏன் சர்வதேச விசாரணையைக் கோரித் தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டும்? இத்தகைய தீர்மானங்கள் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அவர்களை விமர்சிக்கிற பிற குறுந்தமிழ்த் தேசிய நிறுவனங்களும் புலம்பெயர் மேட்டுக் குடிக் குழுக்களும் சாதிக்க எண்ணுவது என்ன? தங்களுடைய செயல்களின் விளைவுகள் தமிழ் மக்களுக்கு எவ்விதத்திலும் பயனுள்ளவை என்று அவர்கள் எண்ணுகிறார்களா?

ஜெனீவா தீர்மானம் எவ்வாறு அமையும் என்பதைச் சிறிதளவேனும் பாதிக்கக்கூடியது இலங்கை அரசாங்கம் எடுக்கிற நடவடிக்கைகளாக அமையலாமே ஒழியத் தமிழ்த் தேசியத் தரப்பினரின் ஆரவாரங்களல்ல என்றால், அந்த ஆரவாரங்களின் நோக்கம் தமிழ் மக்களிடையே அமெரிக்க, மேற்குலகக் குறுக்கீடுகள் பற்றிய மயக்கங்களை உருவாக்குவதற்கு மேலாக வேறெதுவுமாக இருக்க இயலுமா?

இந்த ஏமாற்று வேலையின் பிரதிபலனாகத் தமிழ் மக்களுக்கு ஒரு நன்மையும் கிட்டாது என்பது ஒரு புறமிருக்கத், தமிழ்த் தேசியவாதிகளின் தீர்மானங்கட்கும் மேலாக, வட மாகாண சபை, சிங்களப் பேரினவாதிகளுக்குத் தீனியிடுவதை விட்டால் ஒரு பெறுமதியுமற்றதான ஒரு செயல் மூலம், தனக்குக் கிடைக்கவேண்டிய உரிமைகளைக் கோருவதற்கு ஆதரவான தென்னிலங்கைக் குரல்களைப் பலவீனப்படுத்தியுள்ளது. குறுந்தமிழ்த் தேசியம் என்றுமே தென்னிலங்கையிலிருந்து வந்துள்ள இனவாதமற்ற நியாய உணர்வுள்ள சக்திகளை விரும்பியதில்லை. அவர்களின் வளர்ச்சியை விடப் பேரினவாதிகளின் எழுச்சியே குறந் தமிழ்த் தேசியவாதத்தின் அரசியலுக்கு வசதியானது. அதனால் தமிழ் மக்களுக்கு என்ன கேடு விளைந்தாலும் அவர்களுக்குக் கவலையில்லை.

உண்மையில் பிச்சைக்காரனின் புண் போல, தேசிய இன ஒடுக்கல் தொடர்வது குறுந் தமிழ்த் தேசியத்தின் அத்தியாவசியத் தேவையாகத் தொடர்கிறது. அது உக்கிரமாக உள்ள வரை, தமிழ் மக்கள் கவனிக்க வேண்டிய பிற முக்கிய பிரச்சனைகளிலிருந்து அவர்களின் கவனத்தை விலக்கலாம். அமெரிக்காவும் மேற்குலகும் பற்றி வளர்க்கப்படுகிற கனவுகளை நாம் மேற்கூறிய நோக்கங்களுடனும் சேர்த்துக் கவனித்தால் குறுந்தமிழ்த் தேசியத்தின் உண்மையான முகம் விளங்கும்.

வட மாகாண சபை நிறைவேற்றிய தீர்மானம் தமிழ் மக்களின் மன உணர்வைப் பிரதிபலிப்பது எனச் சிலர் மெச்சுகிறார்கள். அப்படியானால் தமிழ் மக்களின் வாழ்வை நேரடியாகப் பாதிக்கும் மீனவப் பிரச்சனை, சம்பூர் அனல் மின் நிலையம் என்பன பற்றியும் மாகாண சபை தீர்மானங்களை நிறைவேற்றுமா?

• • •

# இளைஞர்கள் உழைக்கும் மக்களுடன் கைகோர்க்க வேண்டும்

*மலைச் செல்வன்*

தற்போதய ஆளும் அரசாங்கத்தின் அமைச்சரவை அந்தஸ்துள்ள இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும ஊடகங்களக்கு அறிக்கை ஒன்றை விட்டிருந்தார். அதாவது கடந்த கால அரசாங்கங்கள் இளைஞர்களின் பிரச்சினைகளை கண்டுகொள்ளாததால் தான் நாடு முக்கிய இளைஞர் எழுச்சிப் போராட்டங்களை சந்தித்ததாகவும் இனியொரு இளைஞர் எழுச்சி ஏற்படாது எனத் தமது அரசாங்கம் உறுதியாக நம்புவதாகவும் குறிப்பிட்டார் அதற்கான காரணம் தமது அரசாங்கம் இளைஞர்களின் மேம்பாட்டிற்காக பாரிய வேலைத்திட்டங்கள் மேற்கொள்வதால் கடந்த காலத்தை போன்று இளைஞர் கிளர்ச்சிகளை சந்திக்க மாட்டோம் எனவும் தெரிவித்திருந்தார்.

அரசாங்கத்தின் எதிர்ப்பார்ப்பின் படி எழுச்சி போராட்டங்கள் ஏற்பட போவதில்லை என்பது உண்மைத்தான். காரணம் திடகாத்திரமான போராட்ட இளைஞர்களை உருவாக்குவதில் மூலப்பங்கு வகிக்கும் கல்வியானது இன்று உலக வங்கி சர்வதேச நாணய நிதிய நிகழ்ச்சி நிரலில் சிக்குண்டு தனியார் மயமாகி விற்பனை பண்டமாக நகர்வதாலும் தரமான மாணவர் தரப்பை எதிர்பார்க்க முடிவதில்லை. 78களில் கொண்டுவரப்பட்ட திறந்த பொருளாதார தனியார்மய தாராளமய கொள்கையோடு வரக்கூடிய எல்லா கிருமிகளும் வந்து சேர்ந்து விட்டன. அவற்றின் பாரிய தாக்கம் பொருளாதார அரசியல் சமூகப் பண்பாட்டுத் தளங்களில் குறைவிருத்தியையும் சமூக அடிப்படையில் வறுமையையும் உருவாக்கிவிட்டன. அதேவேளை சமூக அக்கறை, சமுதாயச் சார்பு சிந்தனை என்பன இளந்தளைமுறையினரிடம் இருந்து மிகவும் அந்நியப்பட்டு எல்லாவற்றிலும் போட்டித் தன்மையே மேலோங்கி வளர்ந்து வருகின்றது. சுரண்டலும் ஏற்றத்தாழ்வும் நிறைந்த இந்தப் பழைய சமுதாய அமைப்பிலேயே சூழலுக்கு ஏற்ப தம்மை சமரசம் செய் துக்கொண்டு வாழ்பவர்களாக இளைஞர்கள் கட்டிவைக்கப்பட்டுள்ளனர். பிற்போக்கான விடயங்களை மட்டும் உலகமய நிகழ்ச்சி நிரலின் கீழ் பெருமளவில் முன்தள்ளும் சினிமா, சின்னத்திரை, இணையப் பாவனை, அச்சு ஊடகங்கள் மூலம் நாளாந்தம் இளைஞர்களின் மூலை சலவை செய்யப்படுகின்றது.



**சமூக அக்கறை, சமுதாயச் சார்பு சிந்தனை என்பன இளந் தளைமுறையினரிடம் இருந்து மிகவும் அந்நி யப்பட்டு எல்லாவற்றிலும் போட்டித் தன்மையே மேலோங்கி வளர்ந்து வருகின்றது. சுரண்டலும் ஏற்றத் தாழ்வும் நிறைந்த இந்தப் பழைய சமுதாய அமைப்பிலேயே சூழலுக்கு ஏற்ப தம்மை சமரசம் செய்துக் கொண்டு வாழ்பவர்களாக இளைஞர்கள் கட்டி வைக்கப்பட்டுள்ளனர்.**

இலங்கையின் சனத்தொகையில் அன்னளவாக 05 மில்லியன் பேர் இளைஞர்களாகக் காணப்படுவதுடன் அவர்களில் 10%ற்கு மேற்பட்டோர் வேலையில்லாப் பிர்ச்சினைக்கு முகம் கொடுக்கின்றனர். மோசமாகிச் செல்லும் பொருளாதார நெருக்கடி, விலையேற்றம், வீட்டுக் கடன் சுமைகளாலும் இளைஞர் சமுதாயம் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்படுகின்றனர. பொருளாதார வளர்ச்சிக்கு என்ற பெயரில் கடைவிரிக்கும் உல்லாச பிரயாணக் கைத்தொழிலிலும், (சூதாட்டம் முதல் விபச்சாரம் வரை) புதியப் பொருளாதாரத்திட்டங்களிலும் குறி வைக்கப்படுபவர்கள் இளைஞர்களாகவே இருக்கின்றனர். நலிவடைந்து செல்லும் கைத்தொழிற்துறை, விவசாயத் துறை என்பவற்றினால் வாழ் விழந்து நகருக்கு தொழில் தேடி இடம்பெயரும் இளைஞர்கள் உழைப்பு, பாலியல் சுரண்டலுக்குள்ளாகின்றனர். இவ்வாறன நிலைமைகளிற்கு மூலக்காரணம் என்னவென்பது விஞ்ஞானப்பூர்வமாக ஆய்ந்து பார்க்கப்பட வேண்டியதாகும்.

நவ காலனித்துவ தாராளமய உலகமயப் பொருளாதார நிகழ்ச்சி நிரலினால் பொருளாதார, பண்பாட்டு வாழ்வில் நெருக்கடிகளை முகங்கொடுக்கும் இளைஞர்கள் சமூகப் பிரச்சினைகளை விஞ்ஞானப் பூர்வமாக விளங்கிக் கொள்வதன் ஊடாக இளைஞர் யுவதிகள் உணர்ச்சிகரமான குறுகிய நோக்கங்களைக் கொண்ட உணர்ச்சி வயப்பட்ட போராட்டங்களுக்குச் செல்லாது இந்தப் பழைய சமுதாயக் கட்டமைப்பையே முழுமையாக தகர்க்க அனைத்துத் தரப்பு மக்களுடனும் இணைந்த மக்கள் போராட்டங்களையே முன்னெடுக்க வேண்டும். 1971, 1988-89 காலக் கட்டத்தில் தெற்கில் இடம்பெற்ற இளைஞர்ப் போராட்டங்களினதும் மூன்று தசாப்த காலமாக வடகிழக்கில் இடம்பெற்ற ஆயுதம் ஏந்திய போராட்டங்களினதும் தோல்வி, அழிவுகளில் இருந்து இளைஞர்கள் விஞ்ஞான பூர்வமான மறு ஆய்வின் மூலம் உரியப் படிப்பினையைப் பெறுவது இன்றையத் தேவையாகும்.

• • •

# ஆம் ஆத்மி கட்சி: அயோக்கியர்களின் யோக்கிதை பற்றிய கதை

உலகோன்

"ஆம் ஆத்மி" கட்சியும் அதன் நிறுவகர் அர்விந்த் கேஜ்ரிவாலும் இந்திய அரசியலின் அதிமுக்கிய பேசுபொருளாக்கப் பட்டிருக்கிறார்கள். ஒருபுறம் அறிவுஜீவிகளாலும் சிவில் சமூகப் பிரதிநிதிகளாலும், மறுபுறம் ஊடகங்களாலும், மாற்று அரசியலுக்கான மார்க்கமாயும் சரியான வழிமுறையாயும் "ஆம் ஆத்மி" ஊதிப் பெருப்பிக்கப்படுகிறது. அதன் பின்னணியில் இக் கட்டுரை அக் கட்சியை விளங்க முயல்கிறது. ஆம் ஆத்மி கட்சி என்றால் சாதாரண மனிதனின் கட்சி என்று பொருள்படும். அது, அண்ணா ஹசாரேயின் ஊழல் எதிர்ப்புக் கூட்டணியில் இருந்து பிரிந்த குழுவினர் சென்ற ஆண்டு உருவாக்கிய கட்சியாகும். ஊழல் எதிர்ப்புப் போராளிகள் என்ற அவர்களில் பிம்பமும் சாதாரண நடுத்தர வர்க்த்தினர் நடத்துகிற கட்சி என்ற எண்ணமும், கடந்த டிசெம்பர் மாத டில்லி சட்டமன்றத் தேர்தலில் அக் கட்சி பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்று ஆட்சியமைக்க வழிவகுத்தது. டில்லியில் அதிகரித்துள்ள ஊழலும் தேசிய கட்சிகளின் மீதான மக்களின் வெறுப்பும் மக்களிடையே ஆம் ஆத்மி கட்சி வரவேற்பைப் பெறக் காரணமாகின. அது இந்தியாவின் அரசியல் நிறுவனத்துக்கு ஒரு பெரிய சவாலாகியுள்ளது. காங்கிரஸ், பாரதிய ஜனதாக் கட்சி ஆகிய இரு பெரும் கட்சிகட்கும் வெளியே, புதிதாக உருவாக்கப்பட்ட ஒரு கட்சி ஆட்சியைக் கைப்பற்றியமை இரு தேசியக் கட்சிகளுக்கும் பெரியதொரு அதிர்ச்சி வைத்தியம் வழங்கியது.

வேலையின்மை வீதத்தின் உயர்வு, அத்தியாவசியப் பொருட்களின் விலையுயர்வு, பொருளாதாரத் தேக்கம் ஆகியவற்றை இந்தியா எதிர்நோக்குகின்ற காலப்பகுதியில் கவர்ச்சியான வாக்குறுதிகளை அளித்ததன் மூலம், இந்தியாவில் வளர்ந்துள்ள நடுத்தர வர்க்கத்தின் வாக்குகளைக் கவர்ந்து, ஊழலை ஒழிப்பதன் மூலம் அனைத்தையும் சரியாக்கலாம் என்ற தாரக மந்திரத்தோடு ஆம் ஆத்மி ஆட்சிபீடமேறியது.

ஆம் ஆத்மி ஒன்றும் புரட்சிகரக் கட்சியல்ல. அக் கட்சியில் முக்கியமான அனைவரும் அரசாங்கத்தில் உயர் பதவி வகித்தவர்களும் என்.ஜி.ஓக்களை நடாத்துபவர்களும் தனியார் துறையில் பெரிய பதவிகளில் இருந்து ஓய்வுபெற்றவர்களும் என, உயர் நடுத்தர வர்க்கத்தினரால் அலங்கரிக்கப்பட்ட கட்சியாகும். பதவிக்கு வந்ததும் அவர்களது உறுப்பினர்களின் கேவலமான நடத்தையும், பேச்சும், பதவிச் சண்டையும் அவர்களின் யோக்கிதையை வெளிப்படுத்தின. தங்களது செயற்பாடுகளின் ஊடாக அவர்கள் தாமாகவே அம்பலப்பட்டார்கள்.



பாராளுமன்ற ஜனநாயகத்தின் அடிப்படை தேர்தலும் தேர்தலிற் போட்டியிடும் கட்சிகளுமே. மக்களுக்குத் தேர்தல்களின் மீதும் பாரம்பரியக் கட்சிகளின் மீதும் வெறுப்பும் சலிப்பும் ஏற்படும் போது பாராளுமன்ற ஜனநாயகத்தைத் தூக்கி நிறுத்தப் புதிய கட்சிகளும் புதிய வேடங்களும் வேடந்தாங்கிகளும் தேவை. பாராளுமன்ற அரசியல் மீதான மக்களின் நம்பிக்கைகளை அவை மீள உயிர்ப்பிக்கின்றன. உண்மையில், பாராளுமன்ற அரசியல் மீதான மக்களின் நம்பிக்கையீனம் புரட்சிகர அரசியல் மீதான நம்பிக்கையாக மாறாமல் தவிர்ப்பதற்கான தரகர்களாக இக் கட்சிகள் செயற்படுகின்றன. பாராளுமன்ற ஜனநாயகத்தின் புதிய மீட்பர்களாகத் தங்களை இனங்காட்டிக் கொள்வதனூடு அவர்கள் பாராளுமன்ற ஜனநாயகத்தைக் காக்குங் கரங்களாகிறார்கள்.

அண்மையில் தனியார் முதலீட்டை ஊக்குவிக்கத் தடையாக உள்ள அனைத்தையும் அகற்ற வேண்டும் என்பதே தனது பொருளாதாரக் கொள்கை என்று ராய்ட்டர் நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் கேஜ்ரிவால் சொன்னார். தனியார் மூலதனத்துக்குச் சாமரை வீசும் ஆம் ஆத்மி கட்சி, ஊழலை ஒழித்தால் எல்லாப் பிரச்சனைகளும் தீர்ந்துவிடும் என்று மனமறிந்து பொய்யுரைக்கிறது. அவர்களைப் பொறுத்தவரை, ஊழலை ஒழிப்பது என்று பேசுவதுதான் வாக்குகளைப் பெறுவதற்கு அதி கவர்ச்சியான வழிமுறை என்று தெரியும். மற்றப்படி,

**அண்மையில் தனியார் முதலீட்டை ஊக்குவிக்கத் தடையாக உள்ள அனைத்தையும் அகற்ற வேண்டும் என்பதே தனது பொருளாதாரக் கொள்கை என்று ராய்ட்டர் நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் கேஜ்ரிவால் சொன்னார். தனியார் மூலதனத்துக்குச் சாமரை வீசும் ஆம் ஆத்மி கட்சி, ஊழலை ஒழித்தால் எல்லாப் பிரச்சனைகளும் தீர்ந்துவிடும் என்று மனமறிந்து பொய்யுரைக்கிறது.**

அவர்களிடம் எவ்விதமான கோட்பாடும் கிடையாது. அண்ணா ஹசாரேயின் ஊழல் எதிர்ப்பு நாடகத்தின் புதிய வடிவமாகவே ஆம் ஆத்மி செயற்படுகிறது.

டில்லியில் ஆபிரிக்கப் பெண்களை அச்சுறுத்திய ஆம் ஆத்மியின் சட்ட மந்திரி, சட்டத்தை கையிலெடுத்து அறச் சீற்றமடைந்த கேவலமான நிகழ்வை நியாயப்படுத்தியதன் மூலம் ஆம் ஆத்மி தனது பிற்போக்குத்தனத்தை நிறுவியது. பெண்கள், வெளிநாட்டவர், வெளி மாநிலத்தவர் என டெல்லி வாலா அல்லாத அனைவரையும் நெறிப்படுத்தும் பொலிஸ்காரன் வேலையை ஆம் ஆத்மி டெல்லியெங்கும் செய்ய முயல்கிறது.

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் பெயரில் ஆம் ஆத்மி ஆட்சி எடுத்த விலைக்குறைப்பு >>15

# வெனசுவேலாவிலும் உக்ரேனிலும் என்ன நடக்கிறது?

இப்போது உக்ரேனிலும் வெனசுவேலாவிலும் சர்வாதிகார அரசாங்கத்திற்கெதிராக மக்கள் போராடுகிறார்கள் என்று எமக்கு சொல்லப்படும் அதேவேளை, தாய்லாந்தில் நல்லாட்சி நடத்தும் அரசாங்கத்துக்கெதிராகச் சிலர் நியாமற்ற அராஜகமான போராட்டங்களில் ஈடுபட்டுச் சட்ட ஒழுங்கைச் சீர்குலைப்பதாக எமக்குச் சொல்லப்படுகிறது. உக்ரேனிலும் வெனசுவேலாவிலும் மக்கள் போராட்டங்களுக்கு ஆதரவளிக்கும் அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் எக்காரணங் கொண்டும் அமைதியான போராட்டங்களை அரசாங்கங்கள் தடுப்பதை அனுமதிக்க முடியாது என அறிவிக்கின்றன. மறுபுறம் தாய்லாந்தின் மக்கள் போராட்டங்களைக் வன்மையாகக் கண்டிக்கிறார்கள். இப்போது நடப்பவை புதிய உலக ஒழுங்கின் ஆட்சி மாற்றத்திற்கான புதிய அலையைத் தோற்றுவிக்கும் பாணியிலேயே நடந்தேறுகின்றன.

*வெனசுவேலாவிலும் உக்ரேனிலும் அமெரிக்க ஆதரவுடன் நடைபெறும் போராட்டங்கள் வன்முறை வடிவங்களை எடுக்கின்றன. அவை திட்டமிட்டே வன்முறையை ஏவுகின்றன. இது ஒரு புதிய பாணியை உருவாக்குகிறது. திட்டமிட்ட வன்முறையும் அரச சொத்துக்களுக்கு விளையும் சேதமும், தவிர்க்கவியலாது, அரசாங்கத்தைப் பதில் வன்முறைக்கு உந்துகிறது. உக்ரேனில் நடப்பது அதுவே. இவ்வாறு அமெரிக்கா ஒரு வகையில் "மனிதாபிமானத் தலையீட்டுக்கான" நியாயத்துக்கு வழிகோலுகிறது.*

## சில போராட்டங்களும் பல செய்திகளும்


உக்ரேனிய அரச எதிர்ப்பாளர்கள்


2000ம் ஆண்டை ஒட்டிய காலத்தில் முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளாக இருந்த ஐரோப்பிய நாடுகளில் அமெரிக்கா "நிறப் புரட்சிகள்" என்ற பெயரில் மக்கள் எழுச்சிகளினூடு ஆட்சி மாற்றங்களைத் தூண்டி, அந் நாடுகளில் தனக்குச் சார்பான ஆட்சிகளை உறுதி செய்தது. அவ் வகையில் 2003 இல் ஜோர்ஜியாவில் நடந்த ரோஸ் புரட்சியும் 2004இல் உக்ரேனில் நடந்த ஓரெஞ்சுப் புரட்சியும் 2005இல் கசக்ஸ்தானில் இடம்பெற்ற ற்யூலிப் புரட்சியும் 2006இல் பெலரூஸில் இடம்பெற்ற ஜீன்ஸ் புரட்சியும் குறிப்பிடத்தக்கவை. 1989இல் யுகோஸ்லாவியாவின் வெல்வெட் புரட்சியின் வழியாக, அமெரிக்கா திட்டமிட்ட நிறப்புரட்சிகள் அமெரிக்க ஆதரவு என்.ஜீ.ஓக்களின் ஆதரவுடன் கிழக்கு ஐரோப்பாவில் நடந்தேறி அமெரிக்க சார்பு ஆட்சிகளைப் பதவியிலிருத்தின.

அதன் பின்னர் 'அரபு வசந்தம்' வீசியது. மக்களின் தன்னெழுச்சியான போராட்டங்கள் திசைதிருப்பப்பட்டன. அவ்வாறான திசைதிருப்புதலில் சமூக வலைத்தளங்கள் முக்கிய பங்காற்றின. துனிசியாவில் பென் அலி, எகிப்தில் முபாராக் எனத் தலைகள் மாறின. ஆனால் பிரச்சனை தீரவில்லை. எனினும் அச் சூழலைத் தனக்கு வாய்ப்பாக்கிய அமெரிக்கா அரபு வசந்தத்தின் பெயரால் லிபியாவில் ஒரு ஆட்சி மாற்றத்தை நிகழ்த்தியது. அதையே சிரியாவிலும் செய்ய முயல்கிறது. சிரியாவிற் சந்தித்த பின்னடைவால் அமெரிக்கா தனது அரபு வசந்த அலையை முடிவுக்குக் கொண்டு வந்தது. இப்போது அமெரிக்காவும் மேற்குலகும் புதிய வழிமுறைகளைத் தேடுகிறார்கள். அவற்றை உக்ரேனிலும் வெனசுவேலா விலும் முயல்கிறார்கள்.

ஹியூகோ சாவேஸின் மரணத்தின் பின், அவரது வலதுகரமாக இயங்கிய நிக்கலஸ் மடுரா வெனசுவேலாவின் சனாதிபதியாகத் தெரிவானார். வெனசுவேலாவைத் தொடர்ந்தும் மக்கள் நல அரசாகக் கொண்டு செல்ல முயல்கிறார். ஆனால் தனது கொல்லைப்புறம் தனது கட்டுப்பாட்டில் இல்லாமைய ஏற்க அமெரிக்காவுக்கு இயலவில்லை. ஆட்சி மாற்றத்துக்கான சதிகளில் அது ஈடுபடுகிறது. வெனசுவேலாவில் அமைதியின்மையை ஏற்படுத்துவதன் மூலம் தனது நேரடித் தலையீட்டையோ குறைந்தபட்சம் மறைமுகத் தலையீட்டையோ செய்ய முயல்கிறது. சாவேஸின் மறைவுக்குப் பின் அமெரிக்காவும் வெனசுவேலாவின் வலதுசாரி முதலாளித்துவ எதிர்க்கட்சிகளும் மக்கள் போராட்டங்களினூடு ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவர முயல்கின்றன. அதற்கு அமைவாகத் திட்டமிட்ட வகையில் அத்தியாவசியப் பொருட்களைப் பதுக்கிச் செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்குகிறார்கள். கறுப்புப் பணத்தை அமெரிக்க டொலர்களில் புழக்கத்தில் விடுவதன் மூலம் வெனசுவேலா நாணய மதிப்பிறக்கத்தைத் தூண்டி, அதன் ஊடாகப் பணவீக்கத்தை ஏற்படுத்த முயல்கின்றனர். இதுதான் வெனசுவேலாவில் அண்மைக்காலமாக நடக்கும் அரசாங்கத்துக்கெதிரான மக்கள் போராட்டங்கள் என்று எமக்குச் சொல்லப்படுகிற போராட்டங்களின் கதைச் சுருக்கம்.

இப்போது வெனசுவேலா பலமுனைகளில் நெருக்கடிகளை எதிர்நோக்குகிறது. அவற்றை வெற்றிகொண்டு மடுரா முன்செல்வாராயின் அது இலத்தீன் அமெரிக்காவின் ஏனைய இடதுசாரிச் சார்பு அரசாங்கங்களுக்கு உந்துசக்தியைத் தரும். அல்லாதவிடத்து, வெனசுவேலாவிற் போன்று, ஏனைய இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் அமெரிக்கா தனது ஆட்சி மாற்ற முயற்சிகளைத் தீவிரமாக்கும். மக்கள் ஒன்றுசேர்ந்து சதித்திட்டங்களை முறியடித்து முன்செல்வார்களாயின் இலத்தீன் அமெரிக்காவின் எதிர்காலம் ஒளிமயமானதாக இருக்கும்.

கிழக்கு ஐரோப்பாவில் நிறப்புரட்சிகள் அமெரிக்க சார்பு ஆட்சிகளை உருவாக்கியபோதும் அவை நீண்டகாலம் நிலைக்கவில்லை. சில காலத்திலேயே ரஷ்யாவின் ஆதரவுடன் எதிர்ப் புரட்சிகள் அரங்கேறின. அதற்கு கோடுகாட்டுவதாய் 2008இல் ரஷ்யா ஜோர்ஜியாவின் அத்துமீறலுக்கு பதிலளிக்கும் வகையில் தனது படைகளை அனுப்பி ஜோர்ஜியப் படைகளை ஓட ஓட விரட்டியது. இது வல்லரசு அரசியலில் ரஷ்யாவின் மீள்வருகையை உறுதிப்படுத்தியது. அதைத் தொடர்ந்து அமெரிக்க எதிர்ப்பு ஆட்சிகள் உக்ரேன் உட்பட்ட பல கிழக்கு ஐரோப்பிய நாடுகளிற் பதவிக்கு வந்தன. அப் போக்கைத் தடுக்கு முகமாகவும் ரஷ்யாவைத் தனிமைப்படுத்து முகமாகவும் ஐரோப்பிய ஒன்றியம் பல கிழக்கு ஐரோப்பிய நாடுகளை ஐரோப்பிய >>15




## MARXIST LENINIST NEW DEMCORACY 50வது இதழ்

### புதிய — ஜனநாயக மாக்சிச — லெனினிசக் கட்சியின் ஆங்கிலத் தத்துவார்த்த ஏடு

இலங்கைச் சூழலில் தத்துவார்த்த இதழ்களின் வரவும் இருப்பும் தொடர்ச்சியும் மிகவும் அரிதானது. அவ்வகையில் ஒரு நீண்ட பயணத்தின் பின்னர் தனது 50வது இதழாக வெளிவந்திருக்கும் Marxist-Leninist New Democracy (தமிழில்: செம்பதாகை-இணைய இதழ்)முக்கியமான மைல்கல்லை எட்டிநிற்கின்றது. இன்றைய நிலையில் இலங்கையில் அரசியல் கட்சிகள் எதுவுமே தத்துவார்த்த இதழ்களை வெளியிடாத நிலையில் புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் ஆங்கிலத் தத்துவார்த்த ஏடான ML New Demcoracy 50வது இதழைக் கொண்டு வருவதில் பெருமையும் திருப்தியும் கொள்ள வேண்டும்.

எமது சமூகத்தை பீடித்திருக்கின்ற பிணி எதையும் தத்துவார்த்த அடிப்படையில் அணுகத் தவறுகின்றமையே பெரும்பாலான பாராளுமன்றக் கட்சிகளுக்கு தத்துவார்த்த அடிப்படையென்ற ஒன்று இல்லாத காரணத்தால் அவர்கள் தத்துவத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஆனால் ஒரு மாக்சிய-லெனினிசக் கட்சி என்ற அடிப்படையில் புதிய-ஜனநாயக மாக்சிய-லெனினிசக் கட்சி தத்துவார்த்த விவாதங்களுக்கு முக்கியத்துவம் வழங்குகிறது. எதுவுமே முடிந்த முடிபல்ல. மார்க்சியம் ஒரு சிந்தனை முறை. அது வளர்ச்சியடைந்து தத்தம் சூழலுக்கேற்ப விரிவாக்கப்பட வேண்டும். அதற்கான விவாதங்களையும் கருத்துப் பரிமாறல்களையும் மேற்கொள்ளும் ஒரு களமான New Democracy இருந்து வருகிறது. இது இதன் சிறப்பம்சமாகும். நாட்டுக்குள்ளும் நாட்டுக்கு வெளியிலும் தென்னாசியச் சூழலில் மார்க்சிய லெனினிசத்தை விளங்கப்படுவதிலும் விரிவாக்குவதிலும் New Democracy குறிப்பிடத்தக்க பணியை ஆற்றியுள்ளது. 50வது New Democracy இதழானது இலங்கைச் சூழலில் மார்ச்சிய லெனினிசத்தின் ஊடாக அரசியலை விளங்கிக்கொள்வதற்கேற்ற வகையிலான கட்டுரைகளையும் குறிப்புக்களையும் தாங்கி வந்துள்ளது.

### திட்டமிடப்பட்ட நில அபகரிப்பு...01>>>

அன்று கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற் றத்தை டி.எஸ். சேனநாயக்காவும் ஐக்கிய தேசியக் கட்சி யும் மூன்று மாவட்டங்களிலும் திட்டமிட்டவாறு இன்றும் முன்னெடுக்கப்படுகிறது. ஆனால் இன்றைய வடக்கில் இத் திட்டமிட்ட சிங்கள் குடியேற்றம் அரசாங்கத்தாலும் ராணுவ உதவியாலும் முன்னெடுக்கப்படுகிறது. தமிழ் மக் களின் பூர்விகக் காணிகள் ராணுவத் தேவைக்கெனவும் குடியேற்றங்களுக்கும் என அபகரிக்கப்படுகின்றன. நிலமற்ற மக்களுக்கு நிலம் வழங்குவதும் அதில் அவர்கள் வாழ வழிவகுத்துக் கொடுப்பதும் தவறு எனக் கூற முடியாது. அவ்வாறான நிலம் வழங்கலை அந்த மக்களுக்குரிய மாகாணங்களின் மாவட்டங்களிலேயே வழங்க வேண்டுமே தவிர அடுத்த மாவட்டங்களில் அல்ல. அதுவும் அம்மாவட்டங்களில் பாரம்பரியமாக நிலங்களையும் வீடுகளையும் விவசாய முயற்சிகளையும் முன்னெடுத்து வந்த மக்களை அகதிகளாக்கிவிட்டு அவர்களது நிலங்களை ராணுவத்தின் துப்பாக்கி முனையில் அபகரிப்பது எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளவோ நியாயப்படுத்தவோ முடியாத ஒன்றாகும்.

ஏற்கனவே பலாலி, காங்கேசன்துறை, மயிலிட்டி, குரும்பசிட்டி, வசாவிளான், கட்டுவன், வீமன்காமம், தையிட்டி உள்ளிட்ட வலி வடக்கின் 6624 ஏக்கர் நிலத்தை ராணுவத்தின் மூலம் அரசாங்கம் அபகரித்து நிற்கிறது. அதேவேளை வடக்கின் வெவ்வேறு பிரதேசங்களில் சிறிய அளவிலும் பெரிய அளவிலும் ராணுவம் நிலை கொண்டுள்ள காணிகளைத் தமதாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டும் வருகின்றனர். கிளிநொச்சி மாவட்டத்தில் கரும்புச் செய்கைக்கெனப் பெரும் தொகை நிலத்தைச் சுவீகரிக்க ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. அதேவேளை முல்லைத் தீவு மாவட்டத்தில் சுமார் முப்பதினாயிரம் ஏக்கர் நிலங்களை மாவட்டத்தின் பல்வேறு பூர்வீகக் கிராமங்களில் இருந்து அபகரித்துக் கொள்ள விரைவான நடவடிக்கைகளை ராணுவமும் அரசாங்கமும் செய்து வருகின்றனர். இதுபற்றிய முழு விபரத்தை அண்மைய மாகாணசபைக் கூட்டத்தில் முன்வைத்த மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் திட்டமிட்ட இந்நில ஆக்கிரமிப்பை நிறுத்த வேண்டும் என்ற தீர்மானத்தையும் முன்மொழிந்தார். இத் தீர்மானம் எவ்வித எதிர்ப்பும் இன்றி நிறைவேறியதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. இவ்வாறான திட்டமிட்ட நில ஆக்கிரமிப்பு அபகரிப்புகளை ஈ.பி.டி.பியினரும் எதிர்த்தே வருகின்றனர். அதன் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தனது அதிருப்தி கண்டனத்தை அண்மைக்காலத்தில் வெளியிட்டும் வந்துள்ளார்.

இங்கே காணவேண்டிய உண்மை யாதெனில் மகிந்த சிந்தனையின் கீழான வடக்குக் கிழக்கின் குறிப்பாக வடக்கிலான திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அவ்வாறே ராணுவத்தின் மூலம் இடம் பெறும் நில அபகரிப்பு கைவிடப்பட்டு மக்க ளின் நிலங்கள் மக்களுக்கு கையளிக்கப்பட வேண்டும். தமிழ் தேசிய இனத்திற்கெதிரான மேற்படி இன ஒடுக்கு முறையினை அனைத்து ஜனநாயக இடதுசாரி முற்போக்கு சக்திகளும் எதிர்த்து நிற்பது அவசியமாகும்.

### ஜே.வி.பி...05>>>

இவர்களால் இனப்பிரச்சினை பற்றிய நேர்மையான மாக்சிச இடதுசாரி நிலைப்பாட்டை ஜே.வி.பி முன்வைக்குமா. அக்கட்சிக்குள் இருந்தே இரண்டு வருடங்கள் முன்பு கணிசமான பகுதியினர் வெளியேறி முன்னிலை சோ'லிசக் கட்சியாகினர். அவர்களும் தேசிய இனப் பிரச்சினையிலும் ஏனைய பிரச்சினைகளிலும் தெளிவான மாக்சிச லெனினிச இடதுசாரி நிலைப்பாட்டை எடுப்பதற்குச் சிரமமான கட்டத்தைத் தாண்ட வேண்டியுள்ளனர். எவ்வாறாயினும், தெற்கிலே சிங்கள மக்கள் மத்தியில் தேசிய இனப் பிரச்சினை பற்றிய சரியான புரிதலை ஏற்படுத்துவது இன்றைய சூழலில் அவசியத் தேவையாகும். அதன் மூலமே நாட்டின் இறைமையையும் சுதந்திரத்தையும் சுயாதிபத்தியத்தையும் பாதுகாக்க முடியும்.

### வெனசுவேலாவிலும்... 14...

ஒன்றியத்துக்குள் இணையுமாறு அழைத்தது. அதில் ஒரு அங்கமே இப்போது உக்ரேனில் தூண்டிவிடப்பட்டுள்ள மக்கள் போராட்டங்கள். உக்ரேனியத் தலைநகர் கீவ்வில் மக்கள் வீதிகளில் இறங்கிக் அரசாங்கத்திற்கெதிரான கலகங்களில் ஈடுபடுவதாகவும் அரசாங்கக் கட்டிடங்களை அடித்து நொருக்குவதாகவும் எங்களுக்குச் சொல்லப்படுகிறது.

உக்ரேனிய ஜனாதிபதி அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் எதிர்பார்த்தபடி ஐரோப்பிய ஒன்றியத்துடன் பொருளாதார உடன்படிக்கை ஒன்றுக்கு உடன்படுவார் எனக் காத்திருந்த வேளை அவர் அதை நிராகரித்ததை அமெரிக்காவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்து பொருளாதார வளர்ச்சியடையும் அற்புதமான வாய்ப்பை அரசாங்கம் நழுவவிட்டு விட்டது என்று பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஓரெஞ்சுப் புரட்சியில் செயற்பட்டது போலவே உக்ரேனிய தலைநகரில் இயங்கும் அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றிய நிதியுதவியில் இயங்கும் என்.ஜி.ஓக்கள் களத்தில் இறங்கின. அதன் விளைவுகளே இப்போது உக்ரேனின் தலைநகர் கீவ்வில் நடப்பவை. இப்போராட்டங்கள் உக்ரேனில் தலைநகரில் மட்டுமே நடைபெறுகின்றமை கவனிக்கத்தக்க விடயமாகும். அவை நாட்டின் பிற பகுதிகளுக்குப் பரவவில்லை. இது இப்போராட்டங்களின் தன்மைக்கு சான்று பகரப் போதுமானது.

வெனசுவேலாவிலும் உக்ரேனிலும் அமெரிக்க ஆதரவுடன் நடைபெறும் போராட்டங்கள் வன்முறை வடிவங்களை எடுக்கின்றன. அவை திட்டமிட்டே வன்முறையை ஏவகின்றன. இது ஒரு புதிய பாணியை உருவாக்குகிறது. திட்டமிட்ட வன்முறையும் அரச சொத்துக்களுக்கு விளையும் சேதமும், தவிர்க்கவியலாது, அரசாங்கத்தைப் பதில் வன்முறைக்கு உந்துகிறது. உக்ரேனில் நடப்பது அதுவே. இவ்வாறு அமெரிக்கா ஒருவகையில் "மனிதாபிமானத் தலையீட்டுக்கான" நியாயத்துக்கு வழிகோலுகிறது. நாடுகளில் தலையிடுவதற்கான புதிய வழிகளை அமெரிக்கா தயாராக்குகிறது என உறுதியாகச் சொல்லலாம்.

• • •

### ஆம் ஆத்மி... 14...

நடவடிக்கைகள் அதனை றிலையன்ஸ் எனும் பெரு முதலாளிய நிறுவனத்தின் எசமானும் இரண்டு பெரிய கட்சிகளதும் முக்கிய தலைவர்களைத் தன் சட்டைப் பைகளுள் வைத்திருப்பவருமான முகேஷ் அம்பானியுடன் மோத வைத்தன. காங்கிரஸ் தனது ஆதரவை விலக்கிய நிலையில் மிகத் தந்திரமாக ஆட்சியிலிருந்து விலகிய ஆம் ஆத்மி தனது உறுதியற்ற ஆட்சியிலிருந்து தப்பியதுடன் வரவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் தன்னை மக்களின் நண்பன் என்று காட்ட ஒரு வாய்ப்பையும் ஏற்படுத்திக்கொண்டுள்ளது.

இது ஒருபுறமிருக்க, காந்தியின் மறு வடிவமாகக் காட்டப்பட்டவரும் ஊழல் எதிர்ப்புக் கூட்டணியின் பிதாமகருமான அண்ணா ஹசாரே, தான் இன்னமும் முற்றாக ஓரங்கட்டப்படவில்லை என உணர்த்தும் விதமாக, மேற்கு வங்கத்தில் மோசமான அடக்குமுறை ஆட்சி நடத்தும் மம்தா முகர்ஜியின் த்ரினாமுல் காங்கிரசுக்குத் தன் ஆதரவைத் தெரிவித்துத் தனது அரசியல் வறுமையைப் புலப்படுத்தியுள்ளார்.

மொத்தத்தில், யோக்கியர்கள் என்று சொல்லிக்கொள்ளும் அயோக்கியர்களின் யோக்கியதைதான் பாராளுமன்றப் பாதையில் பயணிக்கிற அனைத்துக் கட்சிகளின் யோக்கிதையுமாகும்.

• • •

## பங்குனித் திருவிழா



துன்பங்கள் பட்டது நம்மினம் - மேலும்
தொல்லைப் பட விடலாகுமோ
நண்பர் பலருளர் மேற்கிலே - அவர்
நல்ல உதவிகள் நாடுவோம்

வீரக்கதை முன்னம் பேசினீர் - பிற
பேர்கள் தயவின்று நாடுமீர்
பேரங்களாற் பயன் ஆகுமோ - வரப்
போவது என்னென்று கூறுவீர்.

லங்கை அரசுடன் கோபமாய் - அவர்
உள்ளமை எங்களின் லாபமே
எங்கள் நலன் விளைவாகிடும் - வல்ல
அந்நியரின் துணை கூடினால்

எந்த அரசைச் சினப்பினும் - அவர்
தங்கள் நலத்தினை நாடுவார்
சொந்த வலிமை மறந்து நாம் - பிறர்
சோரத் தனங்கட்கு வீழ்வமோ

பங்குனி மாதம் திருவிழா - பனி
தங்கு மலைமிகும் நாட்டிலே
அங்கு அனைவருங் கூடுவார் - அவர்
எங்கள் துயர்களைப் போக்குவார்

அன்றொரு நாள் வந்த அந்நியர் - தந்த
அல்லல் மறந்திடல் ஆகுமோ?
இன்னும் வரவுள்ள பேர்களும் - எமை
இன்னல் செய் தேய்த்தவர் அல்லவா

போர்க்குற்ற மீது விசாரணை - இனக்
கொலைபற்றி மேலும் விசாரணை
தீர்மானம் பற்பல செய்குவோம் - அவர்
தாள்களில் வைத்து வணங்குவோம்

மனித உரிமைகள் மீறலும் - எங்கள்
மண்ணின் உரிமைகள் மீறலும்
சனநாயகம் காத்திட வல்ல நீர் - சரி
செய்து தருமென வேண்டுவோம்.

மனித உரிமைகள் மீறுவோர் - பிறர்
மண்ணின் உரிமைகள் மீறுவோர்
சனநாயகம் சாய்ப்பவர் கால்களில் - நீவிர்
சாய்ந்து நலன்வரக் கூடுமோ!

மீனவர்கள் படும் துன்பமும் - விவ
சாயிகள் மண் பறிபோவதும்
ஏனென்று கேட்வும் வக்கிலீர் - பிறர்
காலினில் வீழத் துடிக்கிறீர்!

உங்களையும் நம்பி நம்மினம் - இனி
ஏதையும் ஒப்படைக்கின்றதின்
மண்ணிற் பரியொன்று செய்ததன் - முது
கேறிக் கடல்வழி போகலாம்

புத்தியுடன் இவர் பேசுறார் - எனின்
போதனை யாரோ வழங்கினார்?
மெத்தச் சினத்தோடிருக்கிறார் - இனி
மெல்லக் கழருவம் நாங்களும்

பங்குனி மாதம் திருவிழா - பனி
தங்கு மலைமிகும் நாட்டிலே
அங்கு அவரிடம் ஓடுவோம் - அவர்
என்ன சொன்னாலும் ஓமென்னுவோம்

பங்குனி மாதத் திருவிழா - போல்
வேறும் பலப்பல தேடுவார்
எங்களிடம் அவர் மீளுவார் - பொய்கள்
மெத்தவுமே அவர் கூறுவார்

துன்புறு மாந்தர்கள் யாவரும் - ஒரு
தன்மையர் என்பதைத் தேருவோம்
நம்வலிமை தன்னை நம்புவோம் - நமைப்
போன்றவர் நட்பினை நாடுவோம்

-புவனம்-



# கடன் பெற்ற விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்

## புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி வேண்டுகோள்

விவசாயிகளுக்கு உதவி செய்வதாகக் கூறி வட்டிக்கு விவசாயக் கடன் வழங்கிய வங்கிகள் இப்போது வட்டியையும் முதலையும் வழங்குமாறு விவசாயிகளின் கழுத்துக்களைப் பிடித்து நெருக்கி வருகின்றன.ஏற்கனவே பெருமழை காரணமாக வெங்காயம், கிழங்கு மற்றும் உபஉணவு உற்பத்தியில் அழிவுகள் ஏற்பட்டதனால் விவசாயிகள் பெருநட்டமடைந்தனர். பின்பு வறட்சி காரணமாகப் பெரும்போக நெற்செய்கையிலும் அழிவு ஏற்பட்டது இவ்வாறு நட்டத்தின் மேல் நட்டம் ஏற்பட்ட நிலையில் செய்வதறியாது திகைத்து தடுமாறி நிற்கும் விவசாயிகளை கடன் கொடுத்த வங்கிகள் மிரட்டியும் விரட்டியும் வருவது கண்டனத்துக்கும் விசனத்திற்கும் உரியதாகும். இதனால் சில விவசாயிகள் தற்கொலைக்கும் தற்கொலைமுயற்சிகளுக்கும் தள்ளப்பட்டுள்ளனர் எனவே அரசாங்கம் இவ்விடயத்தில் தலையிட்டு விவசாயக்கடன் தள்ளுபடியை செய்து ஏனைய நிவாரணங்களை வழங்கவேண்டுமென விவசாயிகள் சார்பாக எமது புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி வற்புறுத்துகிறது. இவ்வாறு புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் சார்பாக அதன் பொதுச்செயலாளர் சி.கா. செந்திவேல் விவசாயிகள் எதிர்கொண்டுள்ள உடனடி நெருக்கடிகள் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


மேலும் அவ்வறிக்கையில், இலங்கை ஒரு விவசாய நாடு எனப் பெருமைபேசி வரும் மகிந்த சிந்தனை அரசாங்கம் அனைத்து விவசாயிகளையும் புறக்கணித்த நிலையிலேயே இருந்துவருகிறது. அதற்கு தமது எதிர்ப்பை தெரிவிக்கவே அண்மையில் தென்னிலங்கை விவசாயிகள் கோவணங்களுடன் கொழும்பு மாநகரில் தமது பிரச்சனைகளை எடுத்து கூறி துண்டுப்பிரசுர நிறியோகத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு விவசாயிகள் எவ்வகையிலும் மீட்சி பெறமுடியாத நிலையிலேயே இருந்து வருகிறார்கள்.

இராணுவ நிலைகொள்ளல் நிலப்பறிப்பு, மீள் குடியேற்ற மறுப்பு, நிலஆக்கிரமிப்பு திட்டமிட்ட குடியேற்ற முயற்சிகள் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் காலநிலை மாற்றத்தினாலான பெருமழை, கடும்வறட்சி, பனிமூட்டம் போன்றவற்றால் பயிரழிவுகளை எதிர்நோக்கியுள்ளனர் இவற்றுடன் மல்லாடியபடி சில பயிர்களைச் செய்தாலும் அவ் உற்பத்திகளுக்கு நியாயமான சந்தை விலை கிடைப்பதில்லை பல

# சர்வதேசப் பெண்கள் தினம் மார்ச் 08

மேகலை

பெண்களின் புரட்சிகர எழுச்சியாகவும் போராட்டத் தொடர்ச்சியாகவும் தோற்றம் பெற்ற சர்வதேசப் பெண்கள் தினம் இன்று பல தரப்புகளிலும் வெறும் சர்வதேச சடங்கு தினமாக மாற்றப்பட்டிருக்கிறது. மார்ச் 8ம் திகதி பெண்கள் தினமாக கொண்டாடப்படுவதற்கான வரலாறு உன்னதமானது. இதில் பெண்ணியவாதிகள் என்று சொல்லப்படுபவர்கள் இதை பெண்கள் பெருமை பேசும் ஒரு தினமாக மட்டும் கொண்டாடி மகிழ்கிறார்கள்.




*1911* ஜேர்மனியின் கம்யூனிஸ்டான கிளாரா ஸெற்கின் சர்வ தேசப் பெண்கள் தினத்தை அமைப்புவாயிலாக ஏற்படுத்தினார். மார்ச் 19ல் ஜேர்மனி, ஆஸ்திரியா, டென்மார்க் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் பெண்கள் வேலை நிறுத்தங்களிலும் ஆர்ப்பாட் டங்களிலும் ஈடுபட்டனர். அன்றைய ஜார் ரஷ்யாவில் கம்யூனிஸ்ட் புரட்சிவாதியான அலக்ஸ்சான்ட்ரா கொலொன்ற்றாய் பெண்களை அணிதிரட்டி முன் சென்றார். ஒக்ரோபர் புரட்சியில் பெண்கள் பங்கெடுக் கவும் தமது உரிமைகளை வென்றெடுக்கவும் போல்ஷ விக் கட்சியுடன் இணைந்து செயற்பட்டவர் அலக்ஸ் சாண்டிரா. லெனின் தலைமையில் உருவாகிய முதல் சோவியத் அரசாங்கத்தில் அவர் அமைச்சராகியது டன் "வீரம் மிக்க பெண் தொழிலாளி" என்னும் தொ னிப்பொருளின் கீழ் மார்ச் 8ம் திகதி விடுமுறையாக அறிவிக்கப்பட்டு பெண்கள் தினம் சோவியத் யூனியனில் லெனின் தலைமையிலான அரசினால் கொண்டாடப்பட்டது. அதன் பின் பல நாடுகளிலும் பெண்களுக்கான சர்வதேச தினமாக மார்ச் 8 நினைவு கூரப்பட்டு விரிவு பெற்று வந்தது. மார்ச் 8 என்பதன் அர்த்தம் அமெரிக்காவில் நெசவுத் தொழிற்சாலையில் பெண்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வந்த சூழலில் நூற்றுக்கு மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் எரியுண்டு இறந்த நாளாகும். அதனை நினைவு கூரும் வகையிலும் முதலாளித்துவத்தின் அடக்குமுறைகளுக்கு எதிரான அர்த்தத்திலேயே பெண்கள் தினம் சர்வதேச ரீதியாக நினைவு கூரப்பட்டு வந்தது. இவ்வாறு உலகின் பல நாடுகளில் நினைவு கூரப்பட்டு வந்த பெண்கள் தினத்தை ஐ.நா. 1975ல் சர்வதேச தினமாகப் பிரகடனப்படுத்தியது.

இன்றைய உலகமயமாக்கல் சூழலில் பெண்கள் மிகவும் அடக்குமுறைகளுக்கு ஆளாகிறார்கள். குறிப்பாக நுகர்வுக் கலாசாரம் பெண்களை "நவீனமாக்கி" அவர்களுக்கு விடுதலை அளிப்பது போல தோற்றங்காட்டி பெண்களை அடிப்படையான நிறுவனமயப்பட்ட அடக்குமுறைகளுக்குள் பேணுகிறது. பெண்கள் மீதான ஒடுக்கு முறை என்பதனை விரித்து நோக்

ளும் சில எல்லைகள் தாண்டாத சுதந்திரங்களையும் சமத்துவங்களையும் காண முடிந்தது. ஆனால் அதற்குக் கீழான ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் பெண்கள் பல்வேறு வகையான ஒடுக்குமுறைகளை அனுபவித்தவாறே வாழ்ந்து வருகின்றனர். இந்நிலை கொலனியத்திற்குப் பிந்திய நவகொலனியச் சூழலிலும் தொடர்ந்து வந்துள்ளது. பெண்கள் மத்தியிலான சிறு துளிகளான மாற்றங்களை வைத்து அவற்றை ஒட்டுமொத்த வகை மாதிரியாகக் காட்ட முற்படுவது முறையற்றதாகும். இவ்விடத்தில் தான் பெண்ணியவாதிகளும் மார்க்ஸியவாதிகளும் முரண்படுகின்றனர்.

சிறு சிறு மாற்றங்கள் பெண்களின் மொத்த விடுதலையைப் பெற்றுத் தருவதில்லை என்பதை பெண்ணியவாதிகள் உணர்ந்து கொள்ளவில்லை. உலகின் முதல் பெண் பிரதமர் இலங்கையிலிருந்து தான் உருவாகினார். ஜனாதிபதியாக ஒரு பெண் 11 ஆண்டுகாலம் ஆட்சியில் இருந்தார். ஆனால் இலங்கையில் பெண்களுக்கான உரிமைகள் உறுதிசெய்யப்படவில்லை. ஏனெனில் வெறுமனே பதவிகளுக்கு பெண்கள் தெரிவாவது பிரச்சனைகளுக்கு தீர்வல்ல. பெண்களுக்கெதிரான ஒடுக்குமுறைகளும் வன்முறைகளும் சமூகத்தில் நிறுவனமயப்படுத்தப்பட்ட கருத்தியல் ரீதியான ஒடுக்குமுறைகளை களைவதன் மூலமே பெண்களின் விடுதலை சாத்தியமாகும்.

**உலகமயமாதலும் அவற்றின் பொருளாதார அரசியல் சமூகப் பண்பாட்டு நிகழ்ச்சி நிரலும் பெண்களுக்கு எதிரானவையாக அதேவேளை நாசூக்கான முறையில் முன்னெடுக்கப்பட்டும் வருகின்றன. இவற்றுடன் பழைமைவாதக் கருத்தியல் சிந்தனை நடைமுறைகள் எவ்வித முரண்களும் கொள்ளாது இணைந்து வழி நடக்கின்றன. அவையாவும் சமூக அந்தஸ்தாகவும் உயர்வானதாகவும் காட்டப்படுகின்றன.**

பெண்ணியம் வெறுமனே பெண்களுக்கெதிரான ஒடுக்குமுறைதான் பிரதான முரண்பாடு போலவும் சமூகத்தில் உள்ள ஏனைய முரண்பாடுகள் இரண்டாம் பட்சமானவை என்று கொள்ளுகிற போது ஒட்டுமொத்த சமூகவிடுதலையையும் அதன் தேவைப்பாட்டையும் பெண்ணியம் நிராகரிக்கிறது. அதேபோல பெண்ணியவாதிகள் பெண்ணியத்தை வெறும் ஆண்-பெண் முரண்பாடாகக் குறுக்கின்ற போது ஆணைப் பிரதான எதிரியாக்கி மற்ற முரண்பாடுகளை அலட்சியம் செய்கிறார்கள். இது ஆபத்தானது மட்டுமல்ல நேர்மையானதுமல்ல.



விசனத்திற்கும் உரியதாகும். இதனால் சில விவசாயிகள் தற்கொலைக்கும் தற்கொலைமுயற்சிகளுக்கும் தள்ளப்பட்டுள்ளனர் எனவே அரசாங்கம் இவ்விடயத்தில் தலையிட்டு விவசாயக்கடன் தள்ளுபடியை செய்து ஏனைய நிவாரணங்களை வழங்கவேண்டுமென விவசாயிகள் சார்பாக எமது புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி வற்புறுத்துகிறது. இவ்வாறு புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் சார்பாக அதன் பொதுச்செயலாளர் சி.கா. செந்திவேல் விவசாயிகள் எதிர்கொண்டுள்ள உடனடி நெருக்கடிகள் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில், இலங்கை ஒரு விவசாய நாடு எனப் பெருமைபேசி வரும் மகிந்த சிந்தனை அரசாங்கம் அனைத்து விவசாயிகளையும் புறக்கணித்த நிலையிலேயே இருந்துவருகிறது. அதற்கு தமது எதிர்ப்பை தெரிவிக்கவே அண்மையில் தென்னிலங்கை விவசாயிகள் கோவணங்களுடன் கொழும்பு மாநகரில் தமது பிரச்சனைகளை எடுத்து கூறி துண்டுப்பிரசுர நிநியோகத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு விவசாயிகள் எவ்வகையிலும் மீட்சி பெறமுடியாத நிலையிலேயே இருந்து வருகிறார்கள்.

இராணுவ நிலைகொள்ளல் நிலப்பறிப்பு, மீள் குடியேற்ற மறுப்பு, நிலஆக்கிரமிப்பு திட்டமிட்ட குடியேற்ற முயற்சிகள் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் காலநிலை மாற்றத்தினாலான பெருமழை, கடும்வறட்சி, பனிமூட்டம் போன்றவற்றால் பயிரழிவுகளை எதிர்நோக்கியுள்ளனர் இவற்றுடன் மல்லாடியபடி சில பயிர்களைச் செய்தாலும் அவ் உற்பத்திகளுக்கு நியாயமான சந்தை விலை கிடைப்பதில்லை பல வழிகளில் விலைவீழ்ச்சி ஏற்படுத்தப்படுவதுடன் இடைத்தரகர்கள் மூலம் விவசாயிகள் தமது உற்பத்தி செலவுகளை கூடப் பெற முடியாத அவலநிலையிலேயே இருந்து வருகின்றனர். அத்துடன் வெளிநாடுகளில் தாராள இறக்குமதிகள் மூலம் வெங்காயம், மிளகாய், கிழங்கு, மற்றும் உபஉணவு உற்பத்திகள் கொண்டுவரப்படுவதால் விலைவீழ்ச்சிகள் ஏற்படுகின்றன.

இவ்வாறு பலபக்க அடிகளை வாங்கி நிற்கும் விவசாயிகள் எவ்வாறு தமது விவசாயக் கடன்களை செலுத்தமுடியும். குறிப்பாக வடக்கின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த விவசாயக்கடன் பெற்ற பல ஆயிரக் கணக்கான விவசாயிகள் திக்கற்றவர்களாககி உள்ளனர். வங்கிக்கடன் ஒருபுறமாகவும் அத்தியவசியப் பொருட்களின் விலையுயர்வு வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மறுபுறமாகவும் விவசாயிகளை வாட்டிவதைத்து வருகின்றன. எனவே அரசாங்கம் அவர்களின் விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்யவும் ஏனைய நிவாரணங்களை வழங்கவும் முன்வரவேண்டும்.

விவசாயிகள் எதிர்நோக்கியுள்ள இப்பாரிய பிரச்சனையில் அரசியல் கட்சிகளும் பொது அமைப்புகளும் ஒன்றினைந்து விவசாயிகளுக்கு ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்க முன்வரவேண்டும்.என இவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

08.01.2014

• • •

களில் பெண்கள் வேலை நிறுத்தங்களிலும் ஆர்ப்பாட் டங்களிலும் ஈடுபட்டனர். அன்றைய ஜார் ரஷ்யாவில் கம்யூனிஸ்ட் புரட்சிவாதியான அலக்ஸ்சான்ட்ரா கொலொன்ற்றாய் பெண்களை அணிதிரட்டி முன் சென்றார். ஒக்ரோபர் புரட்சியில் பெண்கள் பங்கெடுக் கவும் தமது உரிமைகளை வென்றெடுக்கவும் போல்ஷ விக் கட்சியுடன் இணைந்து செயற்பட்டவர் அலக்ஸ் சாண்டிரா. லெனின் தலைமையில் உருவாகிய முதல் சோவியத் அரசாங்கத்தில் அவர் அமைச்சராகியது டன் "வீரம் மிக்க பெண் தொழிலாளி" என்னும் தொ னிப் பொருளின் கீழ் மார்ச் 8ம் திகதி விடுமுறையாக அறிவிக்கப்பட்டு பெண்கள் தினம் சோவியத் யூனியனில் லெனின் தலைமையிலான அரசினால் கொண்டாடப்பட்டது. அதன் பின் பல நாடுகளிலும் பெண்களுக்கான சர்வதேச தினமாக மார்ச் 8 நினைவு கூரப்பட்டு விரிவு பெற்று வந்தது. மார்ச் 8 என்பதன் அர்த்தம் அமெரிக்காவில் நெசவுத் தொழிற்சாலையில் பெண்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வந்த சூழலில் நூற்றுக்கு மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் எரியுண்டு இறந்த நாளாகும். அதனை நினைவு கூரும் வகையிலும் முதலாளித்துவத்தின் அடக்குமுறைகளுக்கு எதிரான அர்த்தத்திலேயே பெண்கள் தினம் சர்வதேச ரீதியாக நினைவு கூரப்பட்டு வந்தது. இவ்வாறு உலகின் பல நாடுகளில் நினைவு கூரப்பட்டு வந்த பெண்கள் தினத்தை ஐ.நா. 1975ல் சர்வதேச தினமாகப் பிரகடனப்படுத்தியது.

இன்றைய உலகமயமாக்கல் சூழலில் பெண்கள் மிகவும் அடக்குமுறைகளுக்கு ஆளாகிறார்கள். குறிப்பாக நுகர்வுக் கலாசாரம் பெண்களை "நவீனமாக்கி" அவர்களுக்கு விடுதலை அளிப்பது போல தோற்றங் காட்டி பெண்களை அடிப்படையான நிறுவனமயப்பட்ட அடக்குமுறைகளுக்குள் பேணுகிறது. பெண்கள் மீதான ஒடுக்கு முறை என்பதனை விரித்து நோக்கின் பல்வேறு தளங்களில் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளையும் அவற்றின் சமூகத் தாக்கங்களையும் காணலாம். தென்னாசியச் சமூக அமைப்புச் சூழலில் பெண்களது வாழ்நிலையை வழிநடாத்தும் கருத்தியல் சிந்தனை நடைமுறைகளில் நிலவுடைமைக் கண்ணோட்டமே முன்னுரிமை வகித்து நிற்கிறது. ஆணாதிக்கச் சிந்தனை என்பதும் மேற்படி நிலவுடைமைக் கருத்தியலின் வழிவந்த ஒன்றேயாகும். அதன் காரணமாகவே இன்றும் பெண்கள் ஆண்களை விடக் குறைவானவர்களாகக் கொள்ளப்பட்டுச் சமத்துவமின்மைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

பெண்களுக்கான சமவுரிமையை மதித்து ஆண் பெண் சமத்துவத்தை நிலை நிறுத்துவதில் பொருளாதார ஏற்றத் தாழ்வும் பண்பாட்டு வாழ்வியல் நடைமுறைகளும் பெருந் தடைகளாகின்றன. இத்தகைய தடைகள் நிலவுடைமை வழிவந்த கருத்தியல் சிந்தனை நடைமுறைகளின் நீடிப்பாகும். பெண்கள் பல்வேறு நிலைகளில் வெளிப்படையாகத் தெரியாத ஒடுக்குதல்களாற் பிணைக்கப்பட்டுள்ளனர். இவர்களது இந்நிலையைச் சுமார் ஐந்நூறு ஆண்டு கால கொலனிய ஆட்சியமைப்பின் கீழும் பின்வந்த முதலாளித்துவ பாராளுமன்ற ஆட்சியின் கீழும் மாற்றியமைக்க முடியவில்லை. வர்க்க ரீதியாக இருந்து வந்த ஒரு சமூக அமைப்பில் மேட்டுக்குடி உயர் வர்க்கத்தினரிடையே உள்ள பெண்கள் சொத்து சுகம் பெற்று சுக போக வாழ்வில் திளைத்திருந்தனர். அவர்களிடையே இருந்து ஆளும் வர்க்கப் பெண் தலைவிகளும் உருவாகினர். அதேபோல் உயர் மத்தியத்தர வர்க்கப் பெண்க

**உலகமயமாதலும் அவற்றின் பொருளாதார அரசியல் சமூகப் பண்பாட்டு நிகழ்ச்சி நிரலும் பெண்களுக்கு எதிரானவையாக அதேவேளை நாசூக்கான முறையில் முன்னெடுக்கப்பட்டும் வருகின்றன. இவற்றுடன் பழைமைவாதக் கருத்தியல் சிந்தனை நடைமுறைகள் எவ்வித முரண்களும் கொள்ளாது இணைந்து வழி நடக்கின்றன. அவையாவும் சமூக அந்தஸ்தாகவும் உயர்வானதாகவும் காட்டப்படுகின்றன.**

பெண்ணியம் வெறுமனே பெண்களுக்கெதிரான ஒடுக்குமுறைதான் பிரதான முரண்பாடு போலவும் சமூகத்தில் உள்ள ஏனைய முரண்பாடுகள் இரண்டாம் பட்சமானவை என்று கொள்ளுகிற போது ஒட்டுமொத்த சமூகவிடுதலையையும் அதன் தேவைப்பாட்டையும் பெண்ணியம் நிராகரிக்கிறது. அதேபோல பெண்ணியவாதிகள் பெண்ணியத்தை வெறும் ஆண்-பெண் முரண்பாடாகக் குறுக்கின்ற போது ஆணைப் பிரதான எதிரியாக்கி மற்ற முரண்பாடுகளை அலட்சியம் செய்கிறார்கள். இது ஆபத்தானது மட்டுமல்ல நேர்மையானதுமல்ல.



இன்றைய சமூக அமைப்பின் கீழ் பெண்கள் பொருளாதார அரசியல் பண்பாட்டுத் தளங்களில் மோசமான பாகுபாடுகள் புறக்கணிப்புகள் சமத்துவமின்மைகள் போன்றவற்றுக்கு உள்ளாகிறார்கள். இதை வெற்றிகொள்ள ஒட்டுமொத்த சமூக மாற்றம் அவசியமானதாகும். இதனைக் கொண்டு வருவதில் பெண்கள் தமது பங்களிப்பை ஆண்களோடு இணைந்து நின்று செயலாக்க வேண்டும். இதற்கான அறிவூட்டல்களும் சமூக மாற்ற அரசியல்மயப்படுத்தல்களும் பெண்களுக்கு அவசியமாகின்றன.

உலகமயமாதலும் அவற்றின் பொருளாதார அரசியல் சமூகப் பண்பாட்டு நிகழ்ச்சி நிரலும் பெண்களுக்கு எதிரானவையாக அதேவேளை நாசூக்கான முறையில் முன்னெடுக்கப்பட்டும் வருகின்றன. இவற்றுடன் பழைமைவாதக் கருத்தியல் சிந்தனை நடைமுறைகள் எவ்வித முரண்களும் கொள்ளாது இணைந்து வழிநடக்கின்றன. ஒன்றை ஒன்று பாதுகாத்து நிற்கின்றன. அவையாவும் சமூக அந்தஸ்தாகவும் உயர்வானதாகவும் காட்டப்படுகின்றன. எனவே பெண்களைச் சூழவுள்ள பிரச்சினைகள் உரிய தளங்களில் அடையாளம் காணப்படுவது அவசியம். அவற்றைப் பெண்களே முன்வந்து காணுதல் வேண்டும். அவற்றை சமூக விடுதலையுடனும் ஆண்களுடனும் இணைந்து முன்னெடுக்க முன்வரல் வேண்டும். அதுவே பெண் விடுதலைக்கான மார்க்கமாகும்.

• • •

வெளியிடுபவர்–வெ. மகேந்திரன், இல. 15/4, மகிந்தாராம வீதி, கல்கிஸ்சை, அச்சிடுபவர்–கொம் பிரிண்ட் சிஸ்ரம், 1/2, டயஸ் பிலேஸ், கொழும்பு–12